# இந்து ஒளி

# HINDU OLI

## ஆறாவது ஆண்டு சிறப்பிதழ்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்




தீபம் - 6 சுடர் - 1



அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

Quarterly of
All Ceylon Hindu Congress




மாமன்ற முன்னாள் தலைவர் அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை நிகழ்வுகள்

உ
சிவமயம்
# பஞ்ச புராணங்கள்
திருச்சிற்றம்பலம்
## தேவாரம்
திளைத்தனையோர் பொறையிலா வுயிர் போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர் நெஞ்சே யமரர்க் காக
முனைத்து வரு மதில் மூன்றும் பொன்ற அன்று
முடுகிய வெஞ் சிலைவளைத்துச் செந்தீ மூழ்க
நினைத்த பெருங் கருணையன் நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.

## திருவாசகம்
அளித்து வந்தெனக் காவ வென் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வானவா மலை மாதொருபாகா
களிப் பெலாமிகக் கலங் கிடுகின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே.

## திருவிசைப்பா
(சேந்தனார்)
அம்பரா அனலா அனிலமே புவிநீ
அம்புவே இந்துவே இரவி
உம்பரா லொன்று மறியொணா வணுவா
யொழிவற நிறைந்த வொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறிவாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரானாகி யாண்டநீ மீண்டே
யெந்தையுந் தாயுமாயினையே.

## திருப்பல்லாண்டு
மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
யீசற்காட் செய்மின் குழாம்பு குந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்
(சேக்கிழார் சுவாமி)
ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
கால னைமாக் கண்டற்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவ பெருமானே யென்றார்.


உ
சிவமயம்
# இந்து ஒளி
தீபம் - 6 சுடர் -1
விஷு வருடம் மார்கழி முதலாம் நாள்
16. 12. 2001


## தொடரும் மாமன்றப் பணிகள்

'இந்து ஒளி' கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்து மக்களின் குரலாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

தலைமையகம் பூர்த்தியான நாள்முதல் மக்கள் சேவை மூலம் சமயத்தொண்டு ஆற்றிவரும் மாமன்றம் இந்து ஒளி காலாண்டிதழை அப்பணியின் ஓர் அம்சமாகக் கருதி வெளியிட்டு வருகின்றது.

க. பொ. த. உயர்தர வகுப்பில் இந்து நாகரிகம் படிக்கும் மாணவர்களுக்குப் பாடத்திட்டத்திற்கமைய ஒரு நூல் இல்லை என்ற குறையையும் ஓரளவிற்கு போக்குவதில் "இந்து ஒளி" கவனம் செலுத்தி வருகின்றது.

கட்டுரையாளர்கள் தரமான ஆக்கங்களை எழுதி "இந்து ஒளி"யின் மகிமைக்கு மெருகூட்டி வந்திருக்கின்றனர் என்பதனை நன்றியுடன் கூறிவைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இலவச மாணவர் விடுதி, கல்விக் கருத்தரங்குகள் மூலம் இந்து மாணவர்களுக்கான சேவையை ஆற்றிவரும் இந்து மாமன்றம், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சமயக் கருத்தரங்குகள், தீட்சை முதலியவைகளையும் நடத்தி வருகின்றது. இப் பணியை மேலும் எடுத்துச் செல்லும் நோக்குடன் சிவ தொண்டர் அணியை ஆரம்பிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறோம்.

மனிதாபிமான நிதியம் ஆரம்பித்து மக்களுக்கு உதவிகள் பலவும் செய்து வருவதுடன் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பணிகளும் பல ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

இந்நாட்டின் இந்து மக்களின் பெருமையை மேலும் வளர்க்க பல பணிகளைச் செய்யும் பொறுப்பு எங்களுடையது என்பதை மறவாது நல்லை ஆதீனத்திற்கு அன்பளிப்பாக வழங்குவதற்காக ஒரு மோட்டார் வாகனம் வாங்கிவிட்டோம். அது சில நாட்களில் ஆதீனத்திற்கு அனுப்பப்படும்.

இந்த நாட்டின் இந்து மக்களின் குரலாகவும் ஒலித்து வரும் அகில இலங்கை இந்து மாமன்றம், இந்து மக்களின் நலன்கருதி "இந்து மக்களுக்கான ஒரு கையேட்"டையும் இவ்வேளையில் வெளியிடுகின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின்

# அருளாசிச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டு வெளியீடான "இந்து ஒளி" சஞ்சிகை தனது ஆறாவதாண்டு சிறப்பு மலராக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பரந்து விரிந்த இவ்வுலகில் ஆதியும் அந்தமில்லா நம் சமயச் சிறப்பை மக்கள் உணர்ந்து வாழ்வதே மனிதப் பிறவியின் இயல்பாகும். சமயத்திற்கு ஆதாரமாக விளங்குபவை ஆலயங்களும் சமயச் சடங்குகளும். இவை இரண்டுமே மனித நேயத்தை உயர்வடையச் செய்கின்றது. அரிய பிறவியாகிய மானிடப்பிறவி இறைவன் திரு அருளைப் பெற்று மேன்நிலை அடைவதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே சமயங்களும் சமய நெறி முறைகளும் உருவாக்கப்பட்டது. இதனை உணரும் போதே பிறவியின் பயன் பூரணமடைகின்றது. இதை அடிப்படையாகக் கொண்டே பல கட்டுரைகளையும் செய்திகளையும் தாங்கி வந்தது "இந்து ஒளி". இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்த மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாக கடந்த ஐந்தாண்டுகளாக வெளிவந்தது. இந்து மக்களால் பாராட்டப்பட்டுள்ளது. பலரும் விழிப்படைந்து கொண்டிருக்கும் நேரத்தில் இந்து மாமன்றம் இந்து ஒளியை வெளியிட்டமை எல்லோருடைய ஏக்கத்தையும் நிறைவு செய்வதாக உள்ளது. இம்மலரை வெளியிடும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு எமது நல்லாசிகள். தொடர்ந்தும் மலர் வெளிவர இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக*
*ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.*

ஒரு மீள்நோக்கு

# நடந்து வந்த பாதையிலே பதிந்த சுவடுகள்

மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" யின் 21 வது இதழ் உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்து கொண்டு, ஆறாவது ஆண்டின் முதலாவது இதழாக வெளிவந்திருப்பதன் மூலம் இந்த இதழ் தனித்துவச் சிறப்பைப் பெறுகிறது.

இந்த வேளையில் "இந்து ஒளி" யின் வளர்ச்சிப் பாதையை திரும்பிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

தாது வருடம் கார்த்திகைத் திங்கள் 9ம் நாளன்று, அதாவது 1996 நவம்பர் 24ம் திகதி "இந்து ஒளி" எனும் தீபம் ஏற்றிவைக்கப்பட்டு, அதன் முதலாவது சுடர் அன்றைய தினம் பிரகாசித்தது.

"தீபம், இருளை விலக்கி எதிரேயுள்ள பொருளைக் காட்டுகிறது. அதுபோல படிப்பறிவு, அறியாமை இருளை அகற்றி உண்மைகளை உணர்த்துகிறது. கணிதம், விஞ்ஞானம், பூகோளம் என்று பலவற்றைப் படித்து அறிவை வளர்த்துக் கொள்கிறோம். கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பது பழமொழி. ஆக கைமண் அளவு அறிவுதான் நம்மிடம் உள்ளது. உலகு அளவுக்கு அறியாமை இருக்கிறது. இதை அகற்ற உலகளவு அறிவைப் பெறவேண்டும் என்பது தெளிவு".

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் தீபாவளி திருநாளையொட்டி விடுத்திருந்த செய்தியில் குறிப்பிட்டிருந்த மேற்படி அருள்வாக்கை தனது இதயத்தின் குரலாகத் தெரிவித்திருந்த

அன்றைய முதலாவது "இந்து ஒளி" இதழ் "இந்து மக்களிடையே சமய அறிவை வளர்க்கவல்ல ஒளியாக விநாயகப் பெருமானின் திருவருளுடன், கார்த்திகைக் குமரனின் திருவவதார தினத்திலே ஏற்றப்படுகிறது" என்று குறிப்பிட்டிருந்ததுபோல சிறப்பானதொரு வளர்ச்சிப் பாதையில் தடம்பதித்து இன்று இருபத்தொராவது சுடராகப் பிரகாசிப்பது பெருமகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

சைவப்பெரியார் அமரர் ஆ. குணநாயகம் அவர்கள் "இந்து ஒளி'' க்கு பெருமளவில் ஆக்கப்பங்களிப்புச் செய்திருப்பதை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். முதலாவது இதழிலேயே "சைவத் திருமுறைகள் வகுத்துள்ள வாழ்க்கை நெறி'' என்ற தொடர் கட்டுரையொன்றை அவர் எழுத ஆரம்பித்தார். தீபம் 2, சுடர் 1 வரையிலான ஐந்து இதழ்களில் அவரது கட்டுரை தொடர்ந்தது. இது தவிர, ''புதுமைக்கும் வழிகாட்டிகளாகப் பண்டே நின்றொளிரும் பண்பாட்டுச் சுடர்கள்'' என்ற தொடரில் தீபம் 2, சுடர் 3, (ஆடி – புரட்டாதி 1998) இதழிலிருந்து அமரர் குணநாயகம் ஐயா எழுத ஆரம்பித்த மற்றுமொரு கட்டுரை, ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு சுடராக தீபம் 5, சுடர் 3 ( சித்திரை – ஆனி 2001) வரை மூன்றாண்டுகளாக தொடர்ந்து வெளிவந்தது. அந்தவகையில் மொத்தமாக பன்னிரண்டு தொடர்கட்டுரைகளை அவர் எழுதியிருக்கிறார்.

கீரிமலை சிவநெறிக் கழகத்தின் சைவ சித்தாந்த ஆசிரியர் வி. சங்கரப்பிள்ளை அவர்கள் "அம்மையப்பர்'' என்ற பெயரில் எழுதிய தொடர் கட்டுரை தீபம் 2, சுடர் 1 (ஐப்பசி – மார்கழி 1997) இதழிலிருந்து ஆரம்பமாகி. தீபம் 2, சுடர் 4 ( ஆடி – புரட்டாதி 1998) இதழ்வரை வெளிவந்தது. இந்தத் தொடரில் மொத்தமாக நான்கு கட்டுரைகளை அவர் எழுதியிருக்கிறார்.

இவை தவிர, பல சமயப் பெரியார்கள், அறிஞர் பெருமக்கள், மாணவர்கள் என்போர் வழங்கிய ஆக்கங்கள், இதுவரையில் "இந்து ஒளி" யை அலங்கரித்திருக்கின்றன. சைவப் பெரியார் அமரர் இரா. மயில்வாகனம், வைத்தியக் கலாநிதி அமரர் க. வேலாயுதபிள்ளை, திரு. த. துரைசிங்கம், திருமதி. பூமணி குலசிங்கம், திரு. ம. நாகரத்தினம், வைத்தியக் கலாநிதி சி. சி. பிள்ளை, திரு. சிவ. சண்முகவடிவேல், திரு. குமாரசாமி சோமசுந்தரம், செல்வி. க. காந்திமதி, துன்னையூர் சிவஸ்ரீ ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள், திரு. த. மனோகரன், திரு. கா. சிவகுருநாதன், திருமதி. உ. சுரேந்திரகுமார், திரு. லோ. துஷிகரன், திருமதி. ஜி. சரோஜினிதேவி, திருமதி. கௌரி இரத்தினவேல், திரு. க. புண்ணியமூர்த்தி, திரு. மு. மனோகரன், திரு. சோ. முரளி, திருமதி. புனிதச் செல்வி யோகேஸ்வரி முருகேசு, செல்வி. காயத்திரி நாகேஸ்வரன், திருமதி. ஏ. என் கிருஷ்ணவேணி, திரு. மா. கணபதிப்பிள்ளை, திரு. க. சத்தியசேகரா, செல்வி. ப. கனகசூரியம், திரு. வே. ச. சுப்பையா, திருமதி. சி. பாலசிங்கம் உட்பட இன்னும் பலர் இதுவரையில் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். இவற்றுள் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கட்டுரைகளையும் பலர் எழுதியிருக்கிறார்கள். இப்பொழுதும் தொடர்ந்து எழுதிவருகிறார்கள். கவிதைகளை எழுதிவருவோரும் இவற்றுள் அடங்குகிறார்கள்.

இதுவரை பாடசாலை மாணவர்கள் பலர் " மாணவர் ஒளி" பகுதிக்கு தொடர்சியாக ஆக்கங்களை எழுதிவருவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் தங்கள் எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் வகையில் "மாணவர் ஒளி" களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாம்.

"இந்து ஒளி'''யின் இன்னொரு அம்சமான "சிறுவர் ஒளி" வழங்கிவரும் சமய வரலாற்றுக் கதைகள் சிறுவர்களுக்கு பயன்தரும் வகையில் அமைந்திருக்கிறது.

இதுவரையில் நந்திக்கொடியின் சிறப்புக்களை எடுத்துக் காட்டும் வகையிலான பல கட்டுரைகளும் வெளியாகி யிருக்கின்றன. உயர்நீதிமன்ற நீதியரசரான மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன், அடியார்க்கடியன் கா. சிவகுருநாதன் அவர்கள், திரு. சி. இரட்ணராஜா, சிவஸ்ரீ எஸ். சந்திரசேகரக் குருக்கள், திருமதி. வசந்தா வைத்தியநாதன், புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி அம்மையார் ஆகியோர் நந்திக்கொடி சம்பந்தமாக எழுதியிருக்கிறார்கள்.

''இந்து ஒளி'' சஞ்சிகையில் இதுவரை காலமும் வெளிவந்த க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடத்திற்கு ஏற்றவகையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து "இந்து நாகரிகம்" என்ற பெயரில் தனியானதொரு தொகுப்பாக மாமன்றக் கல்விக் குழு வெளியிட்டிருக்கும் காத்திரமானதொரு முயற்சி "இந்து ஒளி" சஞ்சிகைக்கு பெருமை தருவதாக இருக்கிறது. கடந்த வருடம் (2000) ஜூலை மாதத்தில் முதலாவது தொகுப்பும், இவ்வருடம் ஜூலை மாதத்தில் இரண்டாவது தொகுப்பும் வெளியாகியிருக்கிறது. கொழும்பில் மட்டுமல்ல, இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் மாமன்றக் கல்விக் குழுவினால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான இந்து நாகரிக பாடக் கருத்தரங்கின்போது அதில் கலந்து கொண்ட ஒவ்வொரு மாணவர்களுக்கும் "இந்து நாகரிகம்" (கட்டுரைத் தொகுப்பு) நூல் இலவசமாக வழங்கப்பட்டதன் மூலம் "இந்து ஒளி" சஞ்சிகையின் தனித்துவம் நாடளாவிய ரீதியிலே மாணவர்கள் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லாம்.

இதுவரையில் "இந்து ஒளி" யின் தீபம் 2, சுடர் 1, (ஐப்பசி – மார்கழி 1997) கந்தசஷ்டி சிறப்பிதழாகவும்; தீபம் 2, சுடர் 2 (தை – பங்குனி 1998) மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும்; தீபம் 3 சுடர் 2 (தை – பங்குனி 1999) மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும்; தீபம் 3, சுடர் 3 (சித்திரை – ஆனி 1999) ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் இன்னிசை விருந்து சிறப்பிதழாகவும்; தீபம் 3 சுடர் 4 (ஆடி– புரட்டாதி 1999) இரத்மலானை – கொழும்பு இந்துக் கல்லூரி ஸ்ரீ கற்பக விநாயகர் மண்டலாபிஷேகப் பூர்த்தி சிறப்பிதழாகவும்; தீபம் 4, சுடர் 2 (தை – பங்குனி 2000) மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும்; தீபம் 4, சுடர் 3 (சித்திரை – ஆனி 2000) இராமாயணம் நாட்டிய நாடகம் சிறப்பிதழாகவும்; தீபம் 5, சுடர் 1 (ஐப்பசி – மார்கழி 2000) கந்த சஷ்டி சிறப்பிதழாகவும்; தீபம் 5 சுடர்2 (தை – பங்குனி 2001) மகா சிவராத்திரி சிறப்பிதழாகவும்; தீபம் 5 சுடர் 2 (ஆடி புரட்டாதி 2001) சுவாமி விபுலானந்தர் நினைவு சிறப்பிதழாகவும் வெளிவந்திருப்பதுடன், தீபம் 6, சுடர் 1 ( ஐப்பசி – மார்கழி 2001) வெளியீடு ஆண்டு சிறப்பு மலராக மலர்ந்து மணம் பரப்புவதன் மூலம் "இந்து ஒளி" தனது வளர்ச்சிப்பாதையில் முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிகழ்வைச் சந்திப்பது, இந்து மாமன்றத்திற்கு மட்டுமல்ல "இந்து ஒளி'''யின் வாசகர்கள் அனைவருக்குமே பெருமையும், மகிழ்ச்சியும் தருவதாகவே அமைந்திருக்கிறது.

*- அ. கனகசூரியர்*

பரிசுக் கட்டுரை

அகில இலங்கை இந்து மாமன்றம், சுவாமி விபுலானந்தரின் நினைவு தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில், மேற்பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்ற கட்டுரை இது.

# இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் விபுலானந்த அடிகளாரின் பங்கு

*செல்வி. அமிர்தகலா சொக்கலிங்கம்*
*விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு*

வைதீகமதமென்ற வரையறைக்குட்பட்டு சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் அறுவகைச்சமயங்களை உள்ளடக்கிய ஒரு தனிவிருட்சமே எமது இந்துமதம் எனும் மாவிருட்சம் எனின் மிகையாகாது. உலகமதங்கள் பல தம்மைக் காலத்திற்கு காலம் வாள்வலிமையினாலும், வேல்வலிமையினாலும், படைவலிமையினாலும் தம்மை நிலைநிறுத்த முற்பட்டவேளை தன்னைப் படைவலிமை மூலம் நிலைநிறுத்தமுடியாது "பண்பாட்டு வலிமை மூலம்" நிலைநிறுத்தியமதம் எமது இந்துமதமேயாகும் எனின் அதன் பண்பாட்டுச் சிறப்புத்தான் என்னே!

"பண்படுத்தல்" எனும் அடிச்சொல்லிலிருந்து தோன்றிய இப் பண்பாடானது சமயம், மொழி, அரசியல், பழக்கவழக்கம், ஆசாரம் என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இந்த வகையில் இந்து மதப்பண்பாடென்பது இந்துமதத்தைப் பேணுகின்ற மக்களுக்கே உரிய தனித்துவமானதொன்றாகும்.

*"நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம்*
*தமக்கென உள்ளதைப் பிறர்க்கும் கொடுப்போம்"*

என்னும் நல்வாழ்க்கை சிரமேற் கொண்டு சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் வழிநின்று இருபதாம் நூற்றாண்டிலே தமிழிற்காகவும், சமயத்திற்காகவும் தன் உடல், பொருள், ஆவி என்பனவற்றை அர்ப்பணம் செய்தவர் முத்தமிழ்வித்தக மாமுனிவர் சுவாமி விபுலானந்த அடிகளாவார். அதாவது இந்துப்பண்பாட்டு மொழியை சமயத்தை, நிலையான பயிராகவளர உரமூட்டியவர் சுவாமி அவர்களே எனின் அவர் பங்கு எத்தகையது என எண்ணவும் வேண்டுமா?

ஏனைய மதங்களில் கருத்துச் சுதந்திரத்திற்கு இடம் கொடுக்கப்படவில்லை. ஆனால் எமது இந்து மதத்திலே தான் இக்கருத்துச் சுதந்திரம் காணப்பட்டது. இதனாலே தான் இதன் பண்பாடும் பெரிய சமுத்திரமாகி இன்றும் பரந்துகிடக்கின்றது. இப்பண்பாட்டுச் சமுத்திரத்தினை வற்றவிடாத பெருமை விபுலானந்தருக்கே உரி...தாகும்.

அவர் கிழக்குவானில் இளங்கதிராய் அழகொளி திகழ முருகநாமமான "மயில்வாகனன்" என்னும் இளமைப் பெயருடன் காரைதீவு செய்த நற்தவப்பயனாய் தோன்றினார்.

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"

என உணர்ந்த சாமித்தம்பியார் இளமைப்பிராயத்திலேயே மயில்வாகனனுக்கு கல்விபுகட்டினார். குஞ்சித்தம்பியரிடம் கற்கவிட்டார். பள்ளி செல்லும் முன்பே துள்ளி ஓடும் பருவத்திலேயே இவர் அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார். வளரும் பயிரை முளையிலேயே தெரிந்த பெற்றோர் இவரை மட்டக்களப்பு மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலும், பின் சென். மைக்கேல் பாடசாலைக்கும் அனுப்பிவைத்தனர். அங்கு பெனாலிடமிருந்து கணிதசாஸ் திரங்களைக் கற்றவல்லவரானார். பெற்றோரின் எதிர்பார்ப்பு விரைவில் கைகூடியது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டாம் ஆண்டிலேயே தனது பதினாறாவது வயதிலேயே லண்டன் கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையில் முதலாம்தரச் சித்தியெய்தினார். ஆயிரத்துத்தொள்ளாயிரத்து ஒன்பதாம், பத்தாம் ஆண்டுகளிலேயே சென். மைக்கேல் பாடசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கினார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பதினொராம், பன்னிரண்டாம் ஆண்டில் கொழும்பு அரசினர் பயிற்சிக்கலாசாலையில் கற்று விஷேடசித்தியும் பெற்றார். பதின்மூன்றாம், பதினான்காம் ஆண்டுகளில் சென். மைக்கேல் கல்லூரியில் ஆசிரியரானார். பதினைந்தாம் ஆண்டில் அரசினர் பொறியியற் கல்லூரியில் விஞ்ஞானம் பயின்று டிப்ளோமா பெற்று பதினாறில் மதுரைத்தமிழ்ச் சங்கப்பண்டிதருமானார்.

அரசியலில் ஈடுபாடு கொண்டவர் என்பதனை இருபதாம் ஆண்டுவரை முதலாம் உலகப்போர் ஆரம்பத்தில் தானும் நாட்டிற்காகவும், உரிமைக்காகவும் பாடுபட்டார். பின் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகி லண்டன் B. Sc பட்டதாரியுமானார். பின் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தேழாம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் சுதந்திர உரிமைப்போராட்டத்தில் பங்குபற்றி யாழ்ப்பாண வாலிபர் சங்கத் தலைவராகவும் இருந்தார்.

இவ்வாறு தமிழ், ஆங்கிலம், ஆரியம் ஆகிய மொழிகளைக் கற்று பெரும்புலமையும் இலத்தீன், மலையாளம், சிங்களம் முதலிய மொழிகளில் அறிவும் பெற்றிருந்தார். பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராகவும், விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரியாகவும், தமிழ்ப் பண்டிதராகவும், ஆசிரியராகவும், அதிபராகவும், கவிஞராகவும், உரையாசிரியராகவும், பத்திராதிபராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்து தமிழ்பண்பாடு வளர்த்தவரெனின் அவர் பங்கு விளம்பற்பாலது.

இதுமட்டுமல்லாமல் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி கலைப்புலவர் நவரத்தினம் ஆகியோருடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் ஆனைப்பந்தியில் ''விவேகானந்தசபை'' ஒன்றினை ஸ்தாபித்தார். இச்சபை மூலம் சமயம், தமிழ் என்பன வளர்த்ததுடன் சமயப்பெரியோர்களைக் கௌரவித்தும் வந்தார். விபுலானந்தரின் விபுலானந்தம் இன்றும் எஞ்நிற்பதற்கு இவரது இப்பணியே மூலவித்துமாகும். இந்து கலாசாரத்தில் ஒன்று, ஏழைவயிறுகழுவுதல், கல்வி போதித்தல், தொண்டு செய்தல் என்பனவுமாகும். எனவே இத்தகைய இவரது தமிழ்ச்சைவப்பணி அவர் பண்பாட்டு வளர்ச்சியின் பங்கினைப் பறைசாற்றுகின்றது. இச்சபை மூலம் சுவாமி சிவானந்தஜியை தரிசித்தார். பின்னர் இருபத்திரண்டாம் ஆண்டில் வாலறிவன் நற்றாள் தொழுவதே கற்றதனாலாய பயன் என்பதனையும், பிறப்பாம் பேதமையை போக்கும் சிறப்பான செம்பொருளைக் காண்பதே அறிவின் பயன் என்பதனையும் ஆத்ம விசாரங் கொண்டு சிந்தித்துத் தெளிந்த பண்டிதர் மாயப் பொய்யுலகின் மாண்பறிந்து துறவுபூண்டொழுக நினைத்த பண்டிதர் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத் திருமடத்தைச் சேர்ந்து "பிரபோதசைதன்னிஜர்" எனும் பிரமச்சரிய திருநாமம் பெற்றார். இருபத்துநாளில் சுவாமி ''விபுலானந்த அடிகள்'' என்ற தீட்சாநாமம் பெற்றார். பின்னர் டாக்டர் குப்புசாமி கூறியதுபோல் சிவானந்தஜியிடம் குருஉபதேசம் நல்குமாறு வேண்டினார். சிவானந்தஜி அதனைமறுத்து விபுலானந்தரைப் பார்த்து அன்புடன் பின்வருமாறு கூறினார்.

"நீர் இதைவிடபெரிய கைங்கரியங்களை ஆற்றவுள்ளீர். இங்கு சாதாரண சுவாமியாக கடமையாற்றுவதிலும் பார்க்க நீர் உலகத்திற்குச் செய்யவேண்டிய சேவை அதிகம் உள்ளது. இதுவே இறைவன் திருவுள்ளமாயுள்ளது. எனவே இறைவன் திருவுள்ளப்படி நீர் சமூகத்தொண்டனாகவே மாறவேண்டும்". என்று குரு கூறியதைக் கேட்டு அதன்வழிநின்றார். சமயத்தொண்டு, சமூகத் தொண்டு, தமிழ்த் தொண்டு என்பவற்றை தேடிச் சென்றார். ''ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம்'' அதற்கு வழிகாட்டவே துறவு வாழ்க்கை பூண்டு தன்னையே தமிழிற்கும், இந்து மதத்திற்கும் அர்ப்பணித்தார். அன்று தொட்டே தன்னை அன்பர்பணிசெய்யவென ஆளாக்கினார். இதில் இருந்தே அவர் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கும் வீறுகொண்டெழுந்தது.

எந்தவொரு பண்பாட்டின் விழுமியத்தையும் எடுத்துக்காட்டுவது சமயவளர்ச்சியேயாகும். எனவே விபுலானந்தர் பண்பாட்டினை வளர்ப்பதற்காக சமயக் கருத்துக்களை விளக்கும் நூல்களை ஆக்கினார். ''தில்லைத்திருநடனம்'' ''நடராஜவடிவம்'' ''உமாமகேசுரர்'' ''கருமயோகம்'' ''ஞானயோகம்'' ''விவேகானந்தஞான தீபம்'' "நம்மவர்நாட்டுஞானவாழ்க்கை" "விவேகானந்த சம்பாஷனைகள்" போன்ற நூல்களை எழுதி சமயம் வளர்த்தார். தமிழையும் சமயத்தையும் ஒரேரீதியில் வளர்த்தார். மனம் நிறைந்து நின்றவொரு தனிக்கடவுள் ஆன்மாக்கள் மீது வைத்த பேரருளினாலே அருள்வடிவமாகத் தோன்றுவான். இறைவன் "மாதொருபாகனாய் அமர்ந்துள்ளார்" எனும்கருத்தினை விளக்கி சமய உண்மையை மக்களுக்குப் போதித்தார். இதன்மூலம் சைவசமயக்கருத்தை உலகறியச் செய்தார். தனது இலட்சிய வாழ்வில் நாம் காணக்கூடிய பெருமை யாதெனில் சைவசித்தாந்தக் கொள்கைகள் பலவற்றை ஏற்றுவாழ்ந்து மக்கள் மத்தியிலும் அதனை தனது பேச்சுவல்லமைமூலம் எடுத்துக்காட்டினார். எல்லோரையும் அன்பினால் அணைத்தார். ''மகாலக்ஷ்மி தோத்திரம்'' "குரதேவர்வாக்கியம்" "தேவபாணி" "தில்லிமாநகர் திருமருமார்பன்" "திருக்கோயிற்காட்சி" என்னும் நூல்களையும் ஆக்கி சமயக்கருத்துகளை எடுத்துக்காட்டினார். மக்களுக்கு மெய்ச்சமயக் கருத்துகளை எடுத்துக்காட்டினார். சமூகத்திற்கு செய்யும் தொண்டை இறைவனுக்கு செய்யும் தொண்டாக கருதினார். தன்சுற்ற ஆன்மாக்களை தெய்வமாகக் கண்டார். எல்லா இடமும் இறைவனைக்கண்டார்.

தமிழை வளர்க்கவேண்டும் என்று எழுத்துலகில் புகுந்துகொண்டார். கற்போருள்ளத்தை கொள்ளை கொள்ளத்தக்க செந்தமிழ் நடையினைக் கையாண்டார். அதனை எத்தனையோ அறிஞர்கள் கைக்கொண்டு தாமும் தமிழை வளர்ப்பதற்கு வழிசெய்தார். ஆராய்ச்சிகள் பலவற்றை மேற்கொண்டார். எழுத்துலகில் தமிழை அழகுதமிழாய்மிளிரச் செய்தார். இதனால் இவரை பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் தனது ''தமிழ் உரைநடைவரலாறு'' எனும் நூலில் ''விபுலானந்தரின் நடையிலே ஓசைச்சிறப்பும், செறிவும் உண்டு. அதுமட்டுமல்லாது பொருளைப்புலப்படுத்துவதற்குரிய சிறந்த சொற்களைத் தெரிந்து வாக்கியங்களை அழகுற எழுதும் இயல்பும் அவருக்குண்டு'' என்று கூறுவதில் இருந்துநாம் தெரிந்து கொள்ளலாம். சிறுவயதிலேயே அதாவது தனது பதின்மூன்றாம் வயதிலேயே தனது குருவை

*"அம்புவியிற் செந்தமிழோடா ங்கிலமும் எனக்குணர்த்தி*
*அறிவுதீட்டி வம்புசெறி வெண்கமல வல்லிருள் எனக்கூட்டி*
*வைத்தார்* "எனப் போற்றுவது அவர் மிகச் சிறந்த செய்யுளால் அன்னையை வளம்படுத்த முனைந்தார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

செந்தமிழ்க்கன்னிக்கு அழகிய ஆபரணம் முதன்முதலில் அணிவித்தவர் விபுலாநந்தர் என்று கூட கூறின்மிகையாகாது. ஏனெனில் இவரின் "கங்கையில் விடுத்தவோலை" "ஈசனுனுக்கும் இன்மலர்" என்கின்ற கவியாபரண சிறப்புத்தான் என்னே!

*"அறிவற்றங்காக்குமெனும் அறிவுரையை யெழுதி*
*அறநெறியால் இன்பமெய்தும் அமைதியையும் எழுதி*
*உறுநட்பு நிலை பெறுமென்றுறு திப்பாடுமெழுதி*
*ஓதுவிபுலாநந்தனுரையிவை"* யென்றும் எழுதி நண்பனுக்கு கங்கையிடம் ஓலையனுப்பியவிதம் தானென்னே! என எம்மை சிந்திக்கவைக்கின்றது.

மேலும் சமயசிந்தனைக் கருத்தானது இழையோடி நிற்குமாறு உயரிய உருவகத்தினையமைத்து செந்தமிழையும் தேன்சிந்தவைப்பது இவரது இறைவன் விரும்பும் மலர்களான

வெள்ளையுள்ளமலராகும், கூப்பிய கைக்காந்தளாகும், நாட்டவிழி நெய்தலாகும் என்று கூறுவதை நாம் எடுத்து நோக்குவதற்கு பின்வரும் கவிவரிகள் முதன்மை பெற்று விளங்குகின்றன.

*"வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ*
*வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ*
*வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல*
*உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"*

*"காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த் தொடையோ*
*மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்தமலரெதுவோ*
*காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர் தொடையுமல்ல*
*கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது"*

*"பாட்டளிசேர் பொன்கொன்றையோ பாரிலில்லா கற்பகமோ*
*வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ*
*பாட்டளிசேர் கொ..ன்றயல்ல பாரிலில்லா பூவுமல்ல*
*நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது"* எனும்
வரிகள் அச்செந்தமிழ் ஓவியங்களாகும்.

சிறந்ததொரு மொழி பெயர்ப்பாளர் என தன்னை இனங்கண்டு கொண்டு இரவீந்திரநாத் தாகூரின் "கார்டனர்" எனும் பாடல்களை "பூஞ்சோலைக்காவலன்" எனும் பெயரில் தமிழில் மொழி பெயர்த்தார். ஆங்கில மொழி வல்லுனராக திகழ்ந்ததனால் சேக்ஸ்பியரால் எழுதப்பட்ட உலகப்புகழ் பெற்ற "யூலியஸ்சீசர்" எனும் நாடகத்தினை தமிழில் எழுதினார்.

*"அஞ்சினார்க்கு சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து*
*ஆடவனுக்கொருமரணம் அவனிமிசை பிறந்தோர்*
*துஞ்சுவ ரென்றிருந்தும் சாதலுக்கு நடுங்கும்*
*துன்மதி மூடரை கண்டால் புன்னகை கொள்பவன் யான்"*
என மூலச்சுவை குன்றாது அழகு தமிழில் மொழிபெயர்த்தமை அவர் திறனையும் தமிழ்மொழியை வளம்படுத்த முனைந்ததையும் எடுத்துக்காட்டுகின்றது. இதனைவிட "ஆங்கிலவாணி" எனும் பாட்டிடையிட்ட உரைத்தொடர் நிலையானது, தமிழை இன்பமுடன் தூய்த்திடச் செய்திருக்கின்றது.

தமிழ்வாழவேண்டும், எங்கும் தலைநிமிர்ந்து நாம் நிற்கவேண்டும் என்ற பேரவாவுடன் உரையெழுதி தமிழன்னையை அலங்கரிக்க முயன்றதுடன் தமிழ்ப் பண்பாடும் வளரவேண்டும் என்ற நோக்கில் யாழ்நூல், மதங்கசூளாமணி, நடராசவடிவம், உமாமகேஸ்வரம் கலைச் சொல்லாக்கம், பண்டைய தமிழர் இசைக்கருவிகள், விண்ணுலகம் தமிழ் மொழியின்தற்கால நிலையும் தமிழர் தம் கடமையும், ஆங்கிலவாணி, மேற்றிசைச் செல்வம், நாகரிக வரலாறு, எகிப்திய நாகரிகம், யவனபுரத்துக் கலைச் செல்வம், பூஞ்சோலைக்காவலன் ஆகியவற்றினை எழுதி தொண்டு செய்தார் எனின் அவர் தமிழ்பண்பாடு வளர்க்கப்பாடுபட்டமை தெளிவாகின்றதல்லவா? இந்து மக்கள் அனைவரும் தமிழரே ஆதலால்தான் தமிழை வளர்ப்பதன் மூலம் இந்துப்பண்பாடு என்றும் நிலைபெறும் என்று தன்னையே தமிழ்த் தொண்டனாக்கினார்.

இதுமட்டுமன்றி கவிதை நூல்களாக விஞ்ஞான தீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்தர் பிரசங்கங்கள், விவேகானந்த ஞானதீபம், சம்பாஷனைகள், கருமயோகம், ஞானயோகம் இராசயோகம், பதஞ்சலி யோகம், சூத்திரம் என்பவற்றினை மொழிபெயர்ப்பு நூலாக யாத்தார். உரையாசிரியராகவிருந்து தமிழை அலங்கரித்தார்.

தமிழன்னை மணம் விசிநின்றிட வேண்டும் என்னும் வேட்கையால் கணேசதோத்திரபஞ்சகம், குமாரவேணவ மணி மாலை கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை முதலானவற்றை சமயம் தமிழ் என்ற இரண்டும் இணைந்து ஒன்றாக வளரவேண்டும் என்றெண்ணி யாத்துபின் யாழோசை மீட்டிநின்றார். எனின் அவர் இந்துமத தெய்வங்களின் சிறப்பு, பக்திப் பெருங்கருணை, உருவம் என்பவற்றை மக்களறியச் செய்தார் எனின் மிகையாகாது. எனவே இருபத்து மூன்றாவது வயதிலேயே பிரபந்த இலக்கியம் தமிழில் இணையவேண்டுமென்று அவர் அரும்பணி புரிந்தார். இதன்மூலம் இந்துமக்கள் பக்திச்சுவை, தமிழ்ச்சுவை என்பவற்றை விருப்புடன் பருகச் செய்தபணி என்றும் போற்றுதற்குரியதே எனின் யார்தான் மறுக்கக் கூடும்? இவ்வாறு ஆங்கில மொழி பயின்று தமிழை வளர்த்திருக்கின்றாரெனின் விபுலானந்தரின் தமிழ்ப் பணிவிளம்பற்பாலது. இது மட்டுமல்லாது நவநீத கிருஷ்ணபாரதியார் பாடிய தனிச் செய்யுள்களின் தொகுப்பாகிய "உலகியல்விளக்கம்" எனும் நூலின் பதிப்பாசிரியராய் தொண்டாற்றினார். கடவுள் வாழ்த்தினையும், பதிகத்தினையும் ஆங்கிலமொழியில் எழுதப்பட்ட முன்னுரையையும் கொண்டு ஆயிரத்து தொளாயிரத்து இருபத்திரண்டில் வெளியிடப்பட்ட உலகியல் விளக்கமானது மேலும் தமிழ் இலக்கியப் பூங்காவை அழகுசெய்யும் மலர்களில் ஒன்றாக தமிழ் திகழ்கின்றது.

படித்தோரன்றி, பாமரரும் தமிழின் சிறப்பையும் இந்துப்பண்பாட்டினையும் போற்றி வாழ்ந்திட வேண்டு மென்று பத்திரிகையாசிரியராகவும் தொண்டாற்றத் தொடங்கினார். இராமகிருஷ்ண சங்கத்தின் ஆங்கிலமொழி இதழ்களான 'வேதாந்தகேசரி" "பிரபுத்தபாரத" என்பனவற்றின் ஆசிரியரானார். அவற்றிலே தமிழ் மொழிபற்றியும், தமிழ்ப்புலவர் பற்றியும் தமிழ் இலக்கியம் பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். "இமையம் சேர்ந்தகாக்கை" எனும் கட்டுரை சிறந்ததாக காணப்படுகிறது. இவ்வாறு பத்திரிகையாசிரியராகி தமிழ்ப் பண்பாடு வளர்த்தபங்கு இவருக்கே உரித்தான தொன்றாகும். பிறமொழி பேசுவோரும் தமிழ்மொழியின் சிறப்பை அறிந்து போற்றிட வழி செய்தார்.

*"திறமையான புலமையெனில் வெளிநாட்டார்*
*அதைவணக்கம் செய்தல் வேண்டும்"* என்னும்

பாரதியாரின் வேட்கையை தணியவைத்த பெருமையைப் பெற்றார்.

"இசையால் வசமாகாதவுள்ளம் எதுவுமில்லை" என்பதைக் கண்கூடாகக் கண்டார். இதனால் இசையை தமிழில் இலங்கைவைக்க முனைந்தார். இதனால் இசைத்தமிழ் நூலொன்றை ஆக்க வேண்டும் என்றெண்ணி சிலப்பதிகார

அரங்கேற்றுக் காதையில் யாழாசிரியர் அமைதிகூறும் இருபத்தைந்து அடிகளுக்குமான விளக்கத்தைக் கண்டறிந்தார். யாழை எண்ணத்தில் மீட்டி "யாழ் நூலை" ஆக்கியளித்தார். வழக்கொழிந்த இசைநூல் இலக்கணத்தை வகுத்துரைப்பதாய் பண்களின் உருவத்தை விளக்குவதாய், அலகு நிலைக்குரிய விளக்கத்தினை தருவதாய் அமைந்து பழந்தமிழ் இசைமரபிற்கு புத்துயிர் அளிக்கிறது. இதுமட்டுமல்லாமல், வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சுற்கோடயாழ் சிறப்பை மிகுவித்து நிற்பதுடன் தேவாரப்பதிகங்கள் முழுவதற்குமான யாப்பமைதி, கட்டளையமைதி, சுவையமைதி முதலியவற்றை விளக்கி அவற்றின் பண்புகளைத் தந்து நிற்கின்றது. இது தேவாரங்களைப் படிப்போருக்குதவியாக நிற்கின்றது எனின் அடிகள் சமயத்தையும் தமிழோடிணைந்து வளர்க்க முற்படுவது தெளிவாகிறதன்றோ.

பாரதியார் ஆசித்த இறவாதபுகழுடைய புதுநூல்களுள் ஒன்றான யாழ்நூல் எனும் அருங்கலைநிதியமானது 1947ம் ஆண்டில் யூன்மாதம் 5ம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ளது. இது என்றுமே இறவாத புகழுடைய தமிழ் மொழியை என்றுமே வாழ்விக்கின்றது எனின் தமிழ்த் தொண்டின் சிறப்பினையும் விளம்புதல் வேண்டுமோ?

இசைத் தமிழிற்கு தொண்டாற்றிய அடிகளார் நாடகத்தமிழிற்கும் பங்களிப்புச் செய்துள்ளார். ஆங்கிலம், ஆரியம் என்னும் மொழிகளில் அடிகள் கொண்டிருந்த புலமை "மதங்கசூளாமணி" என்னும் நாடகத்தமிழ் நூலின் ஆக்கத்திற்குப் பெரிதும் உதவிற்று. இந்நூலின் முதலாம் இயலாகிய உறுப்பியலிலே தமிழ் இலக்கண இலக்கியங்கள் பற்றி கூறும் நாடகத்தமிழ்பற்றிய கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் இயலாகிய எடுத்துக்காட்டியலிலே ஆங்கில நாடக ஆசிரியரான சேக்ஸ்பியரின் பன்னிரண்டு நாடகங்களின் சிறப்பியல்புகள் விளக்கப்பட்டுள்ளன. மூன்றாம் இயலாகிய ஒழிபியலிலே ஆரிய மொழிப்புலவர் தனஞ்சயன் முதலானோர் நாடகம் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. ஆரியம், ஆங்கிலம், செந்தமிழ் என்னும் மும்மொழிகளையும் ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்து அவை நாடக மரபு பற்றிக் கூறும் கருத்துக்களை கண்டறிந்து எடுத்துள்ளதும் எழுதப்பட்டுள்ளதுமான மதங்கசூளாமணியானது 1926ம் ஆண்டில் நூல்வடிவில் வெளியிடப்பட்டது.

இந்த வகையில் தமிழை 'முத்தமிழ்' என்ற சிறப்புக்கொடுத்து தானும் முத்தமிழ்வித்தகர் விபுலானந்தர் என்ற பட்டத்தினையும் பெற்று நிற்கின்றார். இதுமட்டுமல்லாது தமிழ் கலைகளை வளர்த்துவிட வேண்டும் என்ற நோக்கில் முன்நின்று தமிழ் பண்பாட்டில் கலையும் முதலிடம் பெற விபுலாநந்தர் அருந் தொண்டாற்றினார் எனின் அவர் தொண்டு எவர் செய்தார்? எனவே விபுலாநந்தர் பணி போற்றுதற்குரியதேயாகும்.

மகாகவி பாரதியாரின் படைப்புக்களைப் பழைய மரபிலே வந்த அறிஞர்கள் ஏற்க மறுத்த காலத்திலே பாரதியாரின் பெருமையினை இனங்கண்டு அறிந்து கொண்ட விபுலானந்த அடிகள் "பாரதிகழகம்" ஒன்றினை அமைத்து பாரதியார் பாடல்களை இசையுடன் பாடுவித்து பாரதியாரின் பெருமையினை அனைவரும் ஏற்றுக்கொள்ள வழிசெய்தார். இதன் பின்னரே பாரதியாரின் புகழ் தமிழகமெங்கும் பூக்கத்தொடங்கியது. இதனால் பாரதிகண்ட சமுதாயம் எங்கும் தோன்ற வழிகோலச் செய்தது எனின் அடிகளாராற்றிய இத்தொண்டானது தமிழ் இலக்கியப் போக்கில் ஒரு திருப்பு முனையாய் அமைந்துவிட்டது. இதனால் பாரதியுகம் விரிந்து பரந்திடவழி ஏற்பட்டது. இந்து மக்கள் தலைநிமிர்ந்து வாழ வழியும் பிறந்தது. இதற்கு விபுலானந்தரின் அருந்தொண்டே காரணம் என்றாலும் இந்துப் பண்பாடும் மேலோங்கத் தொடங்கியது.

*"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"* என மகாகவி பாரதி விரும்பினான். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு கலைச் சொற்கள் இன்றியமையாதனவாய் இருந்தன. இதனை உணர்ந்த அடிகளார் தன்னைப் பொதுத்தலைவராகவும் அறிஞர் பலரை உறுப்பினராயும் கொண்ட 'சொல்லாக்கக்கழகம்' ஒன்றினை 1934ம் ஆண்டில் அமைத்தார். இதன் அயராத பணியினால் 'கலைச்சொற்கள் அகராதி' தோற்றம் பெற்று 1938ல் வெளியிடப்படலாயிற்று. இதில் பதினாறாயிரம் கலைச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. இக்கலைச் சொற்களைப் பயன்படுத்தி தமிழை வளர்க்க தன்னை அர்ப்பணித்தார் அடிகளார்.

*"புத்தம்புதியகலைகள்–பஞ்ச*
*பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும்"* நூல்கள் பல புதிதுபுதிதாக ஆக்கப்படுவதனைக் காணும் அடிகளின் தமிழ்த் தொண்டினை பாராட்டவேண்டியவர்களாய் இருப்பதுடன் அவர் இந்துப்பண்பாட்டில் தமிழ்மொழி சங்கத்தமிழ்போல் திகழவும் செய்தார். இவ்வாறு முத்தமிழ் வளர்ச்சிப்பணியில் அயராது பாடுபட்டு செந்தமிழின் சிறப்பினை வெளிநாட்டவர் அறியச் செய்தும் பிறநாட்டு இலக்கியச் செல்வங்களையும் தமிழ் நாட்டவர் அறியவும் செய்து தமது இறுதி மூச்சுவரை தொண்டாற்றி இந்துப்பண்பாடு வளர்த்த விபுலாநந்தர் பணி இயம்பற்பாலதோ?

ஒரு சமயம் வளர்ச்சி பெற வேண்டுமாயின் மக்களும் வளர வேண்டும் என்பதை உணர்ந்த பல்கலைக்கழகச் சேவையைவிட இலங்கையில் இராமகிருஷ்ண மடத்தின் கிளைகளை வளர்த்து மட்டக்களப்பில் இந்துக்கல்லூரியும், சாரதா அம்மையார் பெண்கள் பாடசாலையும், யாழ்ப்பாணத்தில் கோண்டாவிலிலுள்ள இராமகிருஷ்ண வித்தியாசாலையும் குறிப்பாக ஆரம்பித்து அரை நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் ஆறுமுகநாவலர் அவர்கள் சேவை செய்த பாணியில் சைவ, தமிழ் கல்லூரிகளை ஸ்தாபித்து வளர்த்தார் எனின் அவர் இந்துப் பண்பாட்டினை இந்துமக்கள் பின்பற்றவேண்டும் என்பதற்காக அயராது உழைத்தார் என்பதில் அவர் பணி விளம்புதல் வேண்டுமா?

சுவாமி அவர்களின் காலத்திற்கு முன்னரே யாழ்ப்பாண வைத்தீஸ்வர வித்தியாலயம் இராமகிருஷ்ண மடத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தவேளை இக்கல்லூரி நிர்வாகத்தை சுவாமி பொறுப்பேற்று இந்து மாணாக்கர், பண்பாட்டைப் பேண பங்காற்றினார் எனின், அடிகளார் இந்து சமூகத் தொண்டிற்கு தன்னையே அர்ப்பணித்தார் என்பதில் ஐயமுமில்லை. அவர் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிய பணியில் தாழ்வுமில்லை. எனவே இறைவனால் தமிழ்ப்பண்பாடு வளர்ப்பதற்கென அனுப்பப்பட்ட தூதுவனாகவே அடிகளார் இம்மண்ணில் பிறந்தாரோ என நாம் எண்ணுதல் கூட எதுவித தவறு மாகாது.

இதுமட்டுமல்லாது தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக "ஆரிய திராவிடபாஷா விருத்தி" என்கின்ற சங்கத்தினை அமைத்தார். பல பண்டிதமணிகளை நாட்டிற்கு அளிக்க வழி சமைத்தார். ஆங்கிலக்கல்வி கற்றவர்கள் மேற்கத்திய நாகரிகத்தில் மூழ்கி ஏனையோரையும் ஆங்கிலேயராக்கும் காலகட்டத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்தமை அவர் செய்தவொரு புரட்சியாகும். வைச, வைணவ ஒற்றுமையை வளர்க்கவும் அருந்தொண்டாற்றினார். தாயகத்திற்கும் சேயகத்திற்கும் கலை, சமய, மொழி பண்பாட்டுத் தொடர்புகளை மேவி வளர்த்தார். வன்னித்தமிழன், யாழ்ப்பாணத்தமிழன், இஸ்லாமியத்தமிழன், இந்துத்தமிழன், கிறீஸ்தவத்தமிழன் போன்ற வேறுபாட்டுக் கொள்கையுடன் தமிழர்கள் வாழ்வதை தவிர்க்க தனது நேசக்கரத்தால் அனைவரையும் அரவணைத்து ஒரு இலட்சிய ஆதிதிராவிட ஒன்றிணைப்புக்கு, இந்து சமயிகளின் ஒற்றுமைக்கும் அயராது உழைத்து பெருமை நாட்டினார்.

இங்ஙனம் இராமகிருஷ்ண பரமகிருஷ்ணரின் ஆன்மீக வழிவந்த விபுலானந்தமுனிவர் உலகமதங்களுக்குள் சர்வமதசம்மதக் கொள்கை அடிப்படையில் பிரசாரம் செய்து நின்றதுடன் அகில உலகரீதியில் சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகளை நிலைநாட்டி குறிப்பாக "வைசித்தாந்தசமாஜம்" உலகரீதியில் ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்தில் வேலூரில் நடாத்திய மாநாட்டின் தலைவராகி சைவ சித்தாந்தத்தின் தத்துவத்திற்கும் சர்வசமய சம்மதக் கொள்கைக்கும் உள்ள அடிப்படை ஒற்றுமையை நிலைநாட்டி இந்துப் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்று எண்ணி சேவை செய்தார் எனின் இன்னு மொருபடி இரெது தொண்டின் பங்கு உயர்கின்றது.

சுவாமி விவேகானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆகிய இருவரும் சர்வமதசமரசக் கொள்கையின் அடிஅத்திவாரமாக அமைத்த வேதாந்த சித்தாந்த சமரசக் கொள்கையின் பெருமையை மதித்து ஒழுகி வந்தனரோ அந்த வழிகளையெல்லாம் ஏற்று தவவாழ்வு வாழ்ந்தவர் சுவாமி விபுலானந்தரெனின் இவர் இந்துமதப் பண்பாட்டு வளர்ச்சிப் பணியில் அனைவரையும் விஞ்சி நிற்கின்றாரல்லவா? இவ்வாறு இந்துக்கலாசாரம் என்கின்ற முழுமைக்குள் இவ் "இந்துமதப் பண்பாடென்னும்" அழகுமலர்ச் செடியானது பூத்துக்குலுங்கி வாசனை கொடுக்கின்றது எனின் அதற்கு காரணகர்த்தா சுவாமி விபுலானந்த அடிகளே ஆவர். "உள்ளத்தூய்மையுடன் அன்பு காட்டுவதைவிட மேலானது வேறெதுவுமில்லை" என்ற வாழ்வின் இலட்சிய நெறியை இறைதுதியாயும் அளித்துள்ளார். இவரின் அகஅழகை அன்போடு அனுபவித்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

*"வாழி இனியதமிழ் வாழி தமிழகத்தார்*
*வாழி மணியிலங்கை வான்கழகம் – வாழியரே,*
*பேராசிரியர் பெரிய விபுலாநந்தன்*
*ஓராயிரம் யாண்டு லகும்."* என வாழ்த்தியுள்ளமையும்

அடிகளாரை ஆறுமுகநாவலரின் பணியோடு ஒப்பிட்டு

*"கல்வியும் சமயமும் கலங்கிய காலை*
*நல்லை வந்தெழுந்த நாவலர் பெருமான்*
*திருவடிசுவட்டி தேவடி பொருத்தி*
*கடிமணங்கடிந்து கல்வியை மணந்தே*
*எழுமையு மருளும் பொருளும் அஃதென்று!*
*இருமையு மருளும் சிவனெறி யெழுக்குமென்*
*இவ்விரண்டுதவும் மெய்யறம் ஓங்க*
*மண்ணக வரைப்பின் வயின் வயின் வைத்துப்*
*புண்ணியம் வளர்க்கும் கண்ணிய வள்ளல்"* என

அடிகளார் சைவமும் தமிழும் வளர்த்த சேவையை போற்றியதிலிருந்து அடிகளார் பங்கு இந்துமதப் பண்பாட்டில் ஊறிநிற்கின்றது எனின் பொய்யாகாது.

இவ்வாறு சாமித்தம்பியருக்கும் கண்ணம்மையாருக்கும் ஈழமண்ணில் மகனாகப் பிறந்து தமிழகமெங்கும் புகழோடு சேவைசெய்து, தமிழுக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும், தொண்டாற்றிய பேராசான் வித்தகன், விபுலானந்தர் எல்லோரையும் நேசித்த உத்தமன். ஆயிரத்து எண்ணூற்றுத் தொன்னூற்றிரண்டாமாண்டு பங்குனித்திங்கள் பதினாறாம் நாளில் தோன்றி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு யூலை மாதம் பத்தொன்பதாம் நாள் இவ்வுலகைத்துறந்து வானுறையும் தெய்வத்துள் ஒருவரானார்.

**மாமன்றச் செய்தி:**

## அமரர் பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை

மறைந்த மாமன்றத் தலைவர் அமரர் வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை கடந்த ஜூலை மாதம் 14ம் திகதியன்று மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தினக்குரல் பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவநேசச்செல்வன் "மானிடத்தைத் தேடும் மகானுபாவர்கள்–சித்தர் பாரம்பரியம் பற்றிய குறிப்புக்கள்" என்ற பொருளில் பேருரையாற்றினார்.

யாழ். நல்லை ஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் விஷேடமாக வருகை தந்து, ஆசியுரை வழங்கிச் சிறப்பித்திருந்தார்.

நிகழ்வின் இறுதியில் திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஏற்பாட்டில் இராப்போசனம் வழங்கப்பட்டது.

பரிசுக் கட்டுரை

*அகில இலங்கை இந்து மாமன்றம், சுவாமி விபுலானந்தரின் நினைவு தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில், கீழ்ப்பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்ற கட்டுரை இது.*

# சுவாமி விபுலானந்த அடிகளாரை என்றும் போற்றுவோம்

செல்வி பவித்ரா தவராஜா
விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்
கல்லடி - உப்போடை, மட்டக்களப்பு.

''தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று'' என்கிறது தமிழ்மறை. இப் பொய்யா மொழிக்கு இணங்க ஈழநாட்டிலே உதித்து அம்மறையை மெய்ப்பித்தவர் அடிகளார் ஆவார். இந்து சமுத்திரத்தின் எழில் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைத் திருநாட்டில், கிழக்கு மாகாணத்தில் ''மீன்பாடும் தேனாடாம்'' மட்டுமாநகரிற்கு தென்திசையில் கல்முனைக்கு அருகில் 'காரைதீவு' என்னும் சிற்றூரில் 1892ம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தொன்பதாம் நாள் சாமித்தம்பி, கண்ணம்மை தம்பதியினருக்கு திருமகனாக இவ்வுலகில் வந்துதித்தார் அடிகளார்.

கிழங்கிலங்கை தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கிய ஒப்பில்லா நிதியம் சுவாமி விபுலானந்த அடிகளென்றால் அது மிகையானதன்று. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பூங்குன்றனாரின் வாக்கிற்கு ஒப்ப, பரந்துபட்ட பெருநோக்குடன், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையும் இவரேயாவார். பிறந்த மண்ணிற்கு மங்காப் புகழ் தேடித் தந்தவர். இல்வாழ்வினைத் துறந்தாலும், தமிழ் மொழிப் பற்றினையும் சமய சமூக தொண்டினையும் துறக்காது அத்துறைகளில் வரலாற்றுப் பெருமைமிக்க சாதனைகளையும் ஏற்படுத் தியவராவார்.

ஈழத்து தமிழ் உதயம், உலகத்துமுனி, உண்மையுணர்ந்த உய்வாளர், அல்லிகளின் மத்தியிலே செந்தாமரை உதித்தன்ன தோன்றி இவ்வுலகின் கண் குறுகிய காலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த அடிகளார்; அவர் சைவநெறியினைப் போற்றி வளர்த்த பண்பாளர், மதம் அனுட்டிப்பதற்கு உரியது, வாதிடுவதற்குரிய தன்று, அவ்வம் மதங்களின் உண்மை நெறிகளைத்தம் நுண்மான் நுழைபுலத்தால் உணர்ந்து, அந்நெறிகளைக் கடைப் பிடித் தொழுகியது மட்டுமல்லாது உலகத்தோர்க்கும் உணர்த்திய உண்மையறிவாளர். சமயப் பூசலும், சாதிப் பிரச்சினையும் தோன்றி, மதத்தோடு மதமும் குலத்தோடு குலமும் பகைத்து வாழ்ந்த காலத்திலே மதங்களைப் பற்றிய உண்மைகளை விளக்கி பல சாதி மக்களையும் சச்சரவின்றிச் சார்ந்தொழுகும் நெறி காட்டிய சமரச சன்மார்க்கவாதியான அடிகளார் போற்றுதற்குரியவரன்றோ.

ஈழநாட்டின் அணையாத அறிவுச்சுடர் அருட்திரு விபுலானந்த அடிகளாராவார். வாழ்நாள் முழுவதும் தமிழ்ப் பணிக்கே அர்ப்பணம் செய்த பெருந்தகையாளர். ஈழத்தின் ஞானவிளக்கான அடிகளாரது பெருமை இந்நாட்டுடன் நின்று விடவில்லை. தூங்கிக் கொண்டிருந்த எமது தமிழ்ச் சமுதாயத்தினைத் தட்டியெழுப்பியவர். தமிழ்ப் பண்பாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் புத்துயிர் அளித்த முத்தமிழ்ப் புலவர் என்றும் போற்றப்பட வேண்டியவர் ஆவார். மட்டுநகர் தந்த முத்தமிழ் வித்தகர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது! இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழும் மேம்பட்டு விளங்க அடிகள் மேற்கொண்ட நற்பணிகள் அனைத்தும் என்றென்றும் போற்றப்பட வேண்டியவை.

அடிகளார், இளம் வயதிலேயே சகல கலைகளையும் கற்றுப் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். தான் உயர்தரக் கல்விகற்ற புனித மிக்கேல் கல்லூரியிலே இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி, கல்லூரிக்குப் பெரும் புகழ் ஈட்டித் தந்தார். பின்னர் தமது இருபத்தைந்தாவது வயதில் யாழ்ப்பாணம் சென்று, அங்கு சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரிப் பட்டம் பெற்றார். 1920ம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையேற்று, அக்கல்லூரிக்கு அளப்பரிய சேவையாற்றினார்.

'வேதாந்த கேசரி' என்ற பத்திரிகைக்கும், 'பிரபுத்த பாரத' என்ற ஆங்கிலச் சஞ்சிகைக்கும் ஆசிரியராகக் கடமையாற்றி தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், ஈழத்திலுள்ள தமிழ்ச் சிற்றூர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் அடிகளாரது தொண்டு போற்றுதற்குரியது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சாரதா வித்தியாலயமும், திருகோணமலையில் உள்ள இந்துக் கல்லூரியும் அடிகளாரின் அரும்பெரும் முயற்சியினால் உருவானவையே ஆகும். 1931ம் ஆண்டு ஆடி மாதம் சிதம்பரத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ''முதற்றமிழ் பேராசிரியர்'' என்ற பதவியையும் கூடவே பெற்றுக் கொண்டார்.

இவரின் புலமைகள் கண்டு தமிழறிஞர்கள் பலர் முத்தமிழ் வித்தகரென வியந்து பாராட்டியுள்ளனர். மகாகவி பாரதியாரின் கவிதைகளின் சிறப்புக்களையும், அது வெளிப்படுத்தும் சத்திய தரிசனங்களையும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எடுத்துக் கூறியதுடன் நிறுத்திவிடாமல் பாமர மக்களிடையேயும் அவற்றின் பெருமைகளையும் எடுத்துக்கூறி பாரதியை மக்களுக்கு அறிமுகப்படுத்திய முன்னோடியும் இவரேயாவார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மூதுரைக்கு இலக்கானவர் அடிகளார். தமிழ்ப் புலமையாளர், தமிழறிஞர் எனப் பல பட்டங்கள் பெற்றுள்ளார். ஒன்றையொன்று சந்திக்க முடியாத இரு துருவங்களாக விளங்கிய சமய வாழ்வையும், உலகியல் வாழ்வையும் இணைத்து அவற்றுக்கிடையே அமைதி கண்டவர். இன்று செல்வாக்குடன் விளங்கும் உலகச் சமயங்கள் எல்லாவற்றுள் மிகப் பழையது இந்து மதம். இயற்கை வழிபாட்டிலிருந்து பரிமாண வளர்ச்சி பெற்று வந்துள்ள இந்து மதம் காலத்துக்குக் காலம் சிறந்த அம்சங்களையும், அவசியமான மாறுதல்களையும் ஏற்று அமைதி கண்டுவிட வழியமைத்தவர் அடிகளாரென்றாலது மிகையன்று.

அடிகளார் அகராதி என்னும் கலைச் சொற்களடங்கிய நூலினைத் தமிழ் உலகிற்குத் தந்தருளினார். இந்நூலிலுள்ள கலைச் சொற்களைக் கொண்டே தற்போது தமிழ் நாட்டில் வேதிநூல், கணிதம், அரசியல் போன்ற நூல்களை அறிஞர்கள் எழுதி வருகின்றனர். இவர் இத்தோடு நின்றுவிடவில்லை. பல மொழிபெயர்ப்புக்களையும் செய்துள்ளார். அறிவியல், சமாதானம் போன்ற பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். உரைநடையெழுதுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். சிறப்பாகக் கவிபுனையும் பேராற்றல் மிக்கவர். இவர் யாழ்ப்பாணத்திலே "ஆரிய திராவிட மொழி" நிறுவனத்தினை நிறுவி அதைத் தாமே தலைமை தாங்கி பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என்னும் முப்பெரும் தமிழறிஞர்களைத் தோற்றுவித்தவராக விளங்கியவரும் அடிகளாரே ஆவார்.

அக்காலத்திலே ஆங்கில நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியரின் நாடகங்களைக் கற்றோர் இதற்கு இணையாக தமிழ் நாடக நூல் எதுவுமே இல்லையெனப் பெரிதும் வருந்தினர். இக்குறையை நீக்க முற்பட்ட அடிகளார் "மதங்க சூளாமணி" என்ற நாடகத் தமிழ் நூலை எழுதி வெளியிட்டார். இவர் சித்தாந்த நூல்களுடன் காவியங்களையும் கற்றார். ஆங்கிலக் கவிதைகளையும் படித்து இன்புற்றார். இத்தனையையும் தாமே வைத்துக் கொள்ளாமல் தமிழக அன்பர்களுக்கும் வழங்க முன் வந்தார். இதன் பயனாகத்தான் "ஆங்கில வாணி", "சோலைக் காவலன்" எனும் இரண்டு இன்ப ஓவியங்களையும் வெளியிட்டார். இவரது சமூக நோக்கானது என்றென்றும் போற்றுதற்குரியது.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளின் துறவு வாழ்க்கையும், பன்மொழி அறிவும், கணித விஞ்ஞானப் புலமையும் அவரது சீரிய தமிழிழ்த் தொண்டுகளுக்குப் பெரிதும் துணை நிற்கின்றன. தமிழ் மொழியின் தொன்மை பற்றியும் பரந்துபட்ட தமிழிலக்கிய வளம் பற்றியும் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை அடிகள் எழுதியுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்க இதழான "செந்தமிழ்", கரந்தை தமிழ்ச் சங்க இதழான "தமிழ்ப் பொழில்", இராமகிருஷ்ண மிஷன் இதழான "இராமகிருஷ்ண விஜயம்" ஆகியவற்றில் அடிகளாரின் கட்டுரைகள் வெளிவந்து உள்ளன.

மாணிக்கப்பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமி இரட்டை மணிமாலை, கோதண்ட நியாயபுரிக் குமரவேள் நமவணிமாலை, கணேச தோத்திர பஞ்சகம் என்னும் பிரபந்தங்களை இயற்றினார். "அறிவற்றங்காக்குமென்னும்" அறிவுரையை எழுதி அறநெறியால் இன்பமெய்தும் அமைதியையும் எழுதி உறநட்பு நிலை பெறுமென்றுறுதிப் பாடெழுதி ஒது விபுலானந்தன் உரையிவையென்றெழுதி "கங்கையில் விடுத்த ஓலை" படைப்பிற் காணப்படும் ஒலி அமைப்பும், பொருட் செறிவும், உணர்ச்சிப் பெருக்கும் சங்கச் சான்றோரின் பாடல்களை நினைவுகூரச் செய்கின்றன. ஈண் உவர்க்கும் இன்மலர் என்னும் பாடல்களில் வரும் "உள்ளக்கமலம்", "கூப்பிய கைக்காந்தள்", "நாட்டவிழி நெய்தல்" என்னும் உயரிய உருவகங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு நிற்கின்றன. இதைவிட மொழிபெயர்ப்புப் பணிமூலம் தமிழ் மொழியைச் சிறப்படையச் செய்துள்ளார்.

ஆசிரியராக, அதிபராக, இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளின் முகாமையாளராக, தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் முதல் தமிழ்ப் பேராசிரியராக, புகழ் பூத்த கல்விமானாக, மதிப்பார்ந்த துறவியாக, முத்தமிழ் வித்தகராக, தலை சிறந்த மொழி பெயர்ப்பாளராக, நூலாசிரியராக, இலக்கிய ஆய்வாளராக, புரட்சிமிக்க சமூக சேவையாளராக மட்டற்ற சேவையாற்றிய அடிகளார் இவ்வுலகில் வாழ்ந்து விட்ட காலமோ ஐம்பத்தைந்து ஆண்டுகள். சாதித்துவிட்டவை பலப்பல.

மெல்ல மெல்ல, ஆனால் ஆழமாகப் பரவிவந்த கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் இலங்கையின் கிழக்கிலும் வடக்கிலும் வாழ்ந்த சைவமக்களிடையே காணப்பட்ட ஜாதி வேற்றுமை, தீண்டாமை, அறியாமை ஆகிய குறைபாடுகள் ஏனைய மதப் பிரச்சாரகர்களுக்கு வாய்ப்பளித்தன. அடிகளார் பிறந்த நாட்டில் "சைவமாஞ் சமயஞ் சாடும் ஊழ் பெறலரிது" எனவும், "சமயாதீதப்பழம் பொருளாம் சைவம்" எனவும் உலகம் போற்றும் சமயம். அந்நாள் இருந்த இழிநிலை அவருக்கு தெற்றென விளங்கலாயிற்று. அதற்கு உயிர் கொடுக்கவே தவஞ்செய் சாதியில் வந்துதித்தார். சமயம் வளர்த்தார். நாவலர் அவர்களுக்குப் பின் ஈழ நாட்டிலும், தமிழ் நாட்டிலும் நமது சமயத்திற்கும், மொழிக்கும், கல்விக்கும் அருந்தொண்டாற்றியவர் ஆவார்.

கல்வியை நாமெல்லாம் வருந்திக் கற்க வேண்டும். அடிகளுக்கும் அது ஒரு விளையாட்டுப் போன்றிருந்தது. நாமகள் அவரை அணைத்துக் கொண்டாள். எந்நூலும் அவருக்கு வந்நூலல்ல. அறிய வேண்டிய நூல்களையறிந்தார். ஆராய்ந்தார்; உணர்ந்தார்; அவர் செய்ய வேண்டியதைத் திருவருள் உள்நின்று தூண்டியது. "மானிடப் பிறவி ஆனிடைத்தைந்து மாடும் அரன் பணிக்குரிய தென்று" துணிந்தார். சைவந்தான் தமிழ், தமிழ்தான் சைவம். இரண்டிலும் அவல நிலைகள் நீக்க, தன் பணி நீத்தலே, தக்கது என தெளிந்தார். துறவு பூண்டார், தமது பணிகளைக் கசடறச் செய்து முடித்தார்.

ஒரு நூற்றாண்டு கால வட்டத்துள் நமது ஈழத்தின் வடபால் ஒரு ஜோதியும், குணபால் ஒரு ஜோதியும் தோன்றின. வடபால் நல்லைநகர் ஆறுமுகநாவலர் தோன்றினார். குணபால் தோன்றிய ஜோதி அருட்திரு விபுலானந்த அடிகளாவார். அன்னார் இருவரும் தோன்றிலரேல் ஈழத்தில் தமிழும் சைவமும் தழைத் தோங்கி வளர்ந்திராதென்றால் அது மிகையாகாது. இத்தகைய அரும்பணிபுரிந்த பின்னவரான அடிகள், தமிழ் காத்த மறைமுனி, தன்னிகரற்ற இலக்கியவாதி, தென் முனைக்கதிர், கலியுக அகத்தியர், புதுமைக்கபிலன், குரு பரம்பரையின் குலவிளக்கு, வீரத்துறவி என்ற திருநாமங்களால் போற்றுவது சிறந்ததே.

அடிகளார் சமயத்துறையில் வேதாந்தங்களைக் கடைப்பிடித்தவர் அல்லர். காலத்துக்கேற்றவாறு சமய ஆசாரங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்ற எண்ணக் கருத்துக் கொண்டவர். அடிகளார் ஆற்றிய தமிழ்த் தொண்டுகளுள் இசைத்தமிழ் நூலாகிய யாழ் நூலை ஆக்கி அளித்தமையே உயர்ந்து சிறந்ததாய்த் திகழ்கின்றது. தமிழ் இசைக்கலை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விரித்து விளக்குகிறது. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் யாழாசிரியர் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்குமான விளக்கமாய் அமைந்துள்ளது. வில்யாழ், மகரயாழ் ஆகியவற்றுக்குப் பொதுவான விளக்கத்தையும் சகோட யாழுக்குச் சிறப்பான விளக்கத்தையும் தருகின்றது. இவர் ஆங்கிலம், ஆரியம் என்னும் மொழிகளில் கொண்டிருந்த புலமையை 'மதங்கசூளாமணி' எனும் நாடகத் தமிழ் நூலிற் காணலாம்.

கலைக்கூடம் அமைத்து, கல்வி வளர்த்து, தமிழ் வளர்த்தும், சைவம் வளர்த்து, புத்தக ஆசிரியராய், பத்திரிகையாசிரியராய், அனாதை இல்லங்கள் மற்றும் பாடசாலைகளின் ஸ்தாபகராய் வியத்தகு முறையிலே விளங்கிய உத்தமர் மறைந்தாலும் எம் உள்ளம் மறக்கவில்லை. இவ்வாறு தமது உடம்பையே தமிழுக்கே அர்ப்பணித்து உயிரையும் தமிழுக்கே அர்ப்பணித்த அடிகளார் 1947ம் ஆண்டு எம்மைப் பிரிந்து போனாலும் இறைவனோடு இரண்டறக் கலந்துவிட்டார். அறிஞர்கள் அழுது புலம்பினர். தமிழ்த்தாய் ஒப்பற்ற முத்தமிழ் முனிவரை இழந்து விட்டது. அவரது கல்லறையிலும் அவரே யார்த்த ''வெள்ளைநிற மல்லிகையோ'' பாடலும் பொறிக்கப்பட்டது.

விபுலானந்த அடிகளார் மரித்துவிட்டார்; அவரது ஊன் உடம்பு மறைந்துவிட்டது, ஆனால் அவரது புகழ் மறையவில்லை. தமிழ் உள்ளவரையும், தமிழ்த்தாய் உள்ளவரையும், அவர் புகழ் நிலவும்.

## சுவாமி விபுலானந்தர் நினைவு கட்டுரைப் போட்டி முடிவுகள்

அகில இலங்கை இந்து மாமன்றம், சுவாமி விபுலானந்தர் நினைவு தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்:

### கீழ்ப்பிரிவு (ஆண்டு 6-9)

*முதலாவது இடம்:*
செல்வி. பவித்ரா தவராஜா,
விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயம்
கல்லடி–உப்போடை, மட்டக்களப்பு.

*இரண்டாவது இடம்:*
செல்வன். எஸ். விமல்ராஜ்,
கொழும்பு இந்துக் கல்லூரி, முகத்துவாரம்
கொழும்பு – 15.

*மூன்றாவது இடம்:*
செல்வி. பிரசாந்தி சிவநாதன்.
இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்
வவுனியா


### மேற்பிரிவு (ஆண்டு 10 - 13)

*முதலாவது இடம்:*
செல்வி. அமிர்தகலா சொக்கலிங்கம்
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி,
நீர்கொழும்பு.

*இரண்டாவது இடம்:*
செல்வி. ஜெயகலா தில்லைநாதன்
அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம்
கொக்கட்டிச் சோலை, மட்டக்களப்பு.

*மூன்றாவது இடம்:*
செல்வன். செ. சபேசன்
மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.

உ
சிவமயம்



# அஞ்சலி

# நிலைத்த புகழ் கொண்ட ஐயன்

## அமரர் ஆ. சின்னத்தம்பி

ஆனைமுகன் திருவருளால் ஆறுமுகம் தம்பதிகள்
பெருமைமிகு நற்பதியாம் கொக்குவிலில்
பெற்றெடுத்த நீடுபுகழ் கொண்ட ஐயன்
எங்கள் நெஞ்சம் நிறை சின்னத்தம்பி

இருபது வயதுதனில் இடம் விட்டு
கொழும்பு வந்து தொழில் செய்யும் காலத்தில்
தொண்டு செய்யும் மனம் கொண்டு
ஆறுமுகன் அண்ணனுக்குப் பணிசெய்ய மனம் கொண்டார்

அகிலத்தின் முதல் நெறியாம் நம் நெறியின் உயர்வுக்கு
மாமன்றம் துளிர்த்துவிட தூய பணி மேற்கொண்டார்
நானிலத்தில் நம்மன்றம் நல்லபணி செய்திடவே
உற்சாகம் தந்தெம்மை உயர்த்தியவர் எங்கள் ஐயன்

பால செல்வ விநாயகரைப் பக்தியுடன் தொழுதுநின்று
பக்குவமாய் கோபுரமும் எழுந்தருள வழிசெய்தார்
ஏழைத் தமிழ் சிறார்கள் உரியகல்வி பெற்றுவிட
தொண்டர் வித்தியாலயம் நிறுவி வழிகளுமே செய்து தந்தார்

கதிர்காம யாத்திரிகர் நலன்கள் பல பெற்றிடவே
சபை நிறுவும் கைங்கரியம் சிறப்பாக முடித்து அன்னார்
மாத்தறையில் இருந்த சபை மண்டபத்தின் நலனுக்காய்
சிறந்த பணி செய்தமையை மறந்து விடமுடியாது

இந்து மாமன்றத்தின் தலைவராய் செயலராய்
இருந்து பல தொண்டு செய்த உத்தமராம் எம் தலைவன்
சாதிகள், வேற்றுமைகள் தகர்த்து நற்சமூகமாக
ஒரணியில் நாம் திரள உயர்ந்தபணி செய்தமையும் வரலாறு


புத்தளத்தில் தமிழ் வாழ வழிகாண மனம் கொண்டு
பண்டிதர்கள் வரவழைத்து தமிழ் நிலைக்க வழிசெய்தார்
முகத்துவார விநாயகரின் திருவருளைத் துணைக்கொண்டு
குடமுழுக்கு கண்டவரும் சின்னத்தம்பி ஐயாவே

ஊனுடலைத் துறந்தாலும் உத்தமனாம் எங்கள் ஐயன்
செய்த பணி என்றும் நிலைத்திருக்கும் இப்புவியில்
அன்னலட்சுமி அம்மையுடன் அன்புடனே வாழ்ந்த ஐயன்
இருபதாம் நூற்றாண்டின் கருணைமிகு பெரு மனிதர்


தொண்ணூற்று ஏழு ஆண்டுகள் இல்புவியில் வாழ்ந்த ஐயன்
இறைவன் திருவடியில் இணைந்து விட்டார் புகழ் நிலைக்க
மாமனிதர் சின்னத்தம்பி உடல் தகனமானாலும்
பெருமைமிகு நற்பணிகள் செய்த புகழ் என்றும் நிலைத்திருக்கும்

சின்னத்தம்பி ஐயா உம் வழிநின்று பணிதொடர
சிந்தையிலே உறுதி கொண்டோம் உன்நாமம் போற்றுகின்றோம்
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டிய நீர்
இந்துப் பெரியார் வரிசையிலே இடமதனைப் பெற்றுவிட்டீர்.

அகில இலங்கை இந்து மாமன்றம்
*(ஆக்கம் - த. மனோகரன்)*



# ஏற்றுயர் கொடியுடையாா



ஆ. குணநாயகம்

*பெரியார் குணநாயகம் அவர்கள், "இந்து ஒளி" சஞ்சிகையில் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அவர், கடந்த ஜூன் மாதம் காலமானார். அன்னாரது இந்தக் கட்டுரையை, இந்து ஒளி பிரசுரம் செய்வதில் பெருமையடைகிறது*

ஏற்றினைக் கொடியாகவுடைய எமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், அதனைத் தமது வாகனமாகவும் ஏற்றுக் கொண்ட சந்தர்ப்பங்கள் பல சைவத் திருமுறைகளில் இருப்பதை நாம் பார்க்கிறோம். கொடியைப் பற்றிய செய்திகளை முதலிற் கவனிப்போம்.

"ஏற்றுயர் கொடியுடையாய், எனையுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'' என்று பாடுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். "உயர்ச்சி பொருந்திய ஏற்றினைக் கொடியாகவுடைய எம்பெருமான், நாயினும் கடைப்பட்டேனாக இழிந்த என்னையும் ஏற்றுக் கொண்டானே! எம் பெருமானின் அருள் திறன் இருந்தவாறென்னே'' என்று வியக்கின்றார்.

"கூறுடையாய்" என ஆரம்பிக்கும் தேவாரத்தில், மாறு கொண்டார் புரமெரித்த மன்னவனே, கொடிமேல் ஏறு கொண்டாய்" எனச் சம்பந்தப் பெருமான் அருளியுள்ளதும் நோக்கற்பாலது.

"நீறுடைத் தடந்தோளுடை நின்மலன்" என ஆரம்பிக்கும் திருக்குறுந்தொகையில்,

"ஏறுடைக் கொடியான் திருவீரட்டம்" என அப்பர் அடிகள் கொடியுடைமையை வற்புறுத்தியுள்ளார்கள். (5– 53–8)

இதனோடு அமையாது மேலும் அப்பரடிகள் கூறுவார்.

''புரையுடைய கரியுரிவைப் போர்வையானை '' என ஆரம்பிக்கும் திருத்தாண்டகத்தில்,

"நரை விடை நற்கொடியுடைநாதன்" என அப்பரடிகள் '' விடை நற்கொடி '' என அதனை விதந்தோதியுள்ளார்கள். (6–74–5)

இந்த விடயத்தில் நம்பியாரூரராகிய சுந்தர மூர்த்தி நாயனார் பின் நிற்பவரல்லர்.

''கூறு நடைக் குழி கட்பகுவாய்'' என ஆரம்பிக்கும் தேவாரத்தில்,

''ஏறு விடைக் கொடி யெம்பெருமான்'' எனப் பாடியுள்ளார்கள் (7–10–2)

ஏற்றினைக் கொடியிலே ஏற்றுக்கொண்டதற்கான எடுத்துக்காட்டுக்கள் இத்தனையும் போதும் எனக் கருதி அடுத்த விடயமான ஊர்திக்கு வருவோம். விடையைத் தமது வாகனமாகவும் பெருமான் ஏற்றுக்கொண்டார். இது தொடர்பாகக் கந்தபுராணத்திற் காணப்படும் ஒரு சுவையான நிகழ்ச்சியைக் கவனிப்போம்.

ஓர் ஊழிக்கால முடிவின் கண்ணே அக்கினி எங்கும் வியாபித்து யாவற்றையும் உண்டு நின்றது. அப்போது தரும தேவதை தானும் அறிந்து விடுவேனோ என அஞ்சி, ஒரு எருத்தின் உருவத்தை எடுத்துச் சிவபெருமான் முன்னிலையில் தோன்றித் தனது அச்சத்தைத் தெரிவித்து எனக்கு வலிமையையும் தந்து என்னைத் தேவரீர், தங்கள் வாகனமாகவும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என வேண்டிக் கொண்டது. அதற்குச் சிவபெருமான் ஒத்துக் கொண்டு விடையாக இவ்வாறு கூறியருளினார்.

உனக்கு அழியா வரத்தைத் தந்தோம். உனது உண்மை நிலையை யாவரும் அறிதற்கு அடையாளமாக முதலாவது யுகமாகிய கிருத யுகத்திலே நான்கு கால்கள், திரேதா யுகத்திலே மூன்று கால்கள், துவாபர யுகத்திலே இரண்டு கால்கள் கலியுகத்திலே ஒரு கால் ஆகியவற்றையே நிலத்தில் ஊன்றிச் சஞ்சரிப்பாயாக. நாம் உன்னை ஒரு பொழுதும் விட்டு நீங்க மாட்டோம். எமக்கு வாகனமாகவும் நீ எப்போதும் இருப்பாயாக''

திரிபுரம் எரித்த காலத்திலே மகா விஷ்ணு, இடப ரூபம் எடுத்துப் பெருமானைத் தாங்கிச் சென்ற வரலாறும் நாம் அறிவோம்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய 'திருக் கோவையாரில்' இடபக் கொடியேற்றி வந்து அம்பலத்துள் ஏறும் அரன்" என்பதற்குத் "தருமத்தின் வடிவாகிய இடபக் கொடி ஏற்றி வந்து அம்பலத்து ஏறும் அரன்'' எனப் பேராசிரியர் எழுதிய உரையிற் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்குரியது.

'உயிராவணமிருந்து" என ஆரம்பிக்கும் தேவாரத்தில், "ஆயிராவணம் ஏறாதே ஆனேறு ஏறு அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்ட – பெருமான்'' என அப்பரடிகள் அருளியுள்ளார். 'அயிராவணம்' என்பது 'அராவதம்' என அழைக்கப்படும் தேவேந்திரனுடைய சிறப்புடைய யானை வாகனம். அதனை விரும்பாது, சிவபெருமான் எருத்து வாகனத்தையே விரும்பி, அதன் மேல் அமர்ந்தருளினார்.

இடபம் விலங்கினத்தைச் சேர்ந்ததாயினும், மனிதர்க்குத் தீங்கு விளைவிக்காது நன்மையையே செய்கின்றது. ஏற்றின் முயற்சியாற் கிடைக்கும் விளைவின் வைக்கோலைத் தான்தின்று நெல் மணிகளை மக்களுக்கு உதவுகின்றது. இவ்வுபகாரத்தினாலே இதன் இயல்பு நலமணிமிடற்றொருவன் கருணைக்கு ஓரளவு ஒப்பானது போலத் தெரிகிறது.

பசு நடந்த கூழ் பல்லாரோடுண்க" என்பது பெரியோர் வாக்கு, எமக்குக் கிடைக்கும் விளைபொருட்செல்வம் எருதினது உழைப்பினாற் கிடைத்தது. பரோபகாரிய எருது நல்கிய உணவை நாம் மாத்திரமே உண்டு விடாது மற்றையோருடனும் பகிர்ந்து உண்ணுதல் வேண்டும் என்பது போற்றுக்குரிய பொன்மொழி.

பசு, எருது என்பன ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவை, இவ்வினங்களின் அருமையையும், பெருமையையும், பயனையும் உணர்ந்த நம் முன்னோர், காலகாலமாக அவற்றைப் போற்றிப் பாதுகாத்தே வந்திருக்கிறார்கள்.

சங்க இலக்கியமாகிய "பத்துப்பாட்டு" என்னும் நூலின் கண்ணேயுள்ள "பட்டினப்பாலை" என்னும் பாட்டில், காவிரிப் பூம்பட்டினத்து மக்கள் "நல்லானொடு பகடோம்பியும்" என்று கூறப்பட்டுள்ளது. பாற் செல்வத்தைத் தரும் பசுவையும், வைக்கோலைத் தான் தின்று நெல் மணிகளை மனிதர்க்கு உதவும் எருதினையும் மக்கள் பகை, பிணி ஆகியவற்றிலிருந்து பாதுகாத்தும், தீனும், நீரும் கொடுத்து நன்கு பராமரித்தும் வந்தார்கள்.

"பனைப்புள்ளும் பண்புள" என்று பெரியோர்கள் சொல்வார்கள், இதற்கேற்ப பண்டைக் காலத்தில் ஓர் அரசன் இன்னோர் நாட்டின் மீது படையெடுக்க நேருமாயின், போரின் முதற் கட்டமாக பகைவன் நாட்டிலுள்ள ஆவினங்கள் போரின் மத்தியில் அழிந்து படாதவாறு, அவற்றைத் தானே கவர்ந்து கொண்டு வந்து பாதுகாப்பாக வைக்கும் 'ஆநிரை கவர்தல்' என்னும் வழக்கம், பசு, எருது வர்க்கத்தின் மீதுள்ள பரிவு நன்கு புலப்படுகின்றது.

ஆவின் ஐந்து பொருட்களாகிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பன பெருமானின் அபிடேகப் பொருட்களாகப் பயன்படுகின்றது. இத் திருவருட்செயல் ஆவின் பெருமையை நன்கு புலப்படுத்துகின்றது.

"ஊனுடை வெண்டலை கொண்ட" என ஆரம்பிக்கும் தேவாரத்தில் "ஆனிடை ஐந்துகந்தான் அடியே பரவா அடைவோமே" எனச் சம்பந்தப் பெருமான் அருளியுள்ளார். (3–102–9)

'தீவினையாயின்' என ஆரம்பிக்கும் தேவாரத்தில் "ஆனிலைந்துங் கொண்டாட்டுகந்தான்' என்று மேலும் சம்பந்தப் பெருமான் அருளியுள்ளார். (3–102–3)

தற்போதத்தைப் பலிபீடத்தில் அழித்துக் கொண்ட உயிர், மேற் சென்று, நந்தி வடிவில், இறைவனையே ஒரே நோக்காக நோக்கித் திருக்கோவீல் வாயிலில் அமர்ந்து இருக்கின்றது.

ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையில் ஆபுத்திரன் கதையைப் படிக்கின்றோம். வேண்டாக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த அந்தணர்ப் பெண்மணி ஒருவர் , அக் குழந்தையைச் செடிகள் நிறைந்த ஒரு கரையோரத்தே விட்டு ஓடி மறைந்து விட்டார். குழந்தையின் அழுகைக் குரலைக் கேட்ட பசு ஒன்று, அங்கு வந்து, குழந்தையைத் தனது நாவால் நக்கிப் பாதுகாத்து இருக்கும் வேளை அவ்வழியே சென்ற ஒரு குடும்பஸ்தர் அப்பிள்ளையை எடுத்து வளர்த்தனர். அதற்கு ஆபுத்திரன் என நாமம் வழங்கப்பட்டது. அதாவது, பசுவின் குழந்தை என்பது பொருள்.

திருவாரூரிலே மனுநீதி கண்ட சோழன் தனது மகனையே தேர்க் காலில் மடிய வைத்து, கன்றை இழந்த பசுவுக்கு எவ்வாறு நீதி வழங்கினான் என்னும் வரலாறும் நாம் அறிந்ததொன்று.

இவ்வாறு, பலப்பல கோணங்களிலிருந்து பசு வர்க்கத்தின் பெருமை நிறுவப்படுவதைப் பார்க்கின்றோம். பசு, எமது கோமாதா.

இந்நிலையில், நந்திக் கொடியின் பெருமை மீதான கோட்பாட்டிற் சிறிதேனும் சந்தேகம் இருக்க முடியாது என்பது தெளிவு.

**மாமன்றச் செய்தி**

## சைவப் பெரியார் அமரர் ஆ. குணநாயகம் அஞ்சலிக் கூட்டம்

மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவராகவும், உப தலைவராகவும், பொருளாளராகவும், ஈழத்து திருநெறித் தமிழ் மன்றத் தலைவராகவுமிருந்து அரும்பணியாற்றிய "ஞான சிரோன்மணி", "சிவநெறிச் செம்மல்" ஆ. குணநாயகம் அவர்களின் மறைவையொட்டி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டமொன்று மாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த ஆகஸ்ட் மாதம் 2ம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடந்த மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி, இந்து சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், இந்து வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் திரு. வி. கணபதிப்பிள்ளை, அறங்காவலர் திரு. தே. ம. சுவாமிநாதன், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், விவேகானந்த சபை பொதுச் செயலாளர் திரு. க. இராஜபுவனீஸ்வரன், ஈழத்து திருநெறி தமிழ் மன்ற உபதலைவர் திரு. க. இ. ஆறுமுகம், கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் கலாசூரி. இ. சிவகுருநாதன். முன்னாள் பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் திரு. ஏ. இராஜரத்தினம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மாமன்றத்துடன் இணைந்து, அதன் அங்கத்துவ நிறுவனங்களான இந்து வித்தியா விருத்திச் சங்கம், ஈழத்து திருநெறித் தமிழ் மன்றம், விவேகானந்த சபை என்பன மேற்படி அஞ்சலிக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

# மகாபுராணங்கள் பிரதிபலிக்கும் சமயப் பண்பாட்டு மரபுகள்

*கி. புண்ணியமூர்த்தி*
*B.A. Dip in Edu. M. Ed*

புராணம் என்பது "பழைமையான வரலாறு" எனப் பொருள்படும். திருவாசகத்தில் சிவபுராணத்திற்கு "சிவனது அநாதி முறைமையான பழைமை" என விளக்கப்பட்டுள்ளது. "புராதனம்" எனும் சொல்லின் சிதைவே "புராணம்" என்பர். பூர்வம், பழைமை, பழங்கதை பண்டையவரலாறு எனும் பொருள்களைப் புராணம் எனும் சொல் உணர்த்தும். ஆதிசங்கரர் தமது வடமொழி, ஸ்ரீகணேச பஞ்சரத்தினம் எனும் பஞ்சகத்தில் புராண(ம்) எனும் சொல்லை பூர்வம் அல்லது ஆதி என்ற பொருளில் குறிப்பிட்டுள்ளார்.

மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் போற்றித்திருவகவல் எனும் பாடலில் "புரம்பல் எரித்த புராண போற்றி" என புராண (ன்) எனும் சொல்லை தொல் பரம் பொருள் என்ற பொருளில் ஆண்டுள்ளார். புராணங்கள், மகா புராணங்கள், தமிழ் மொழிப் புராணங்கள், தலபுராணங்கள் என மூவகைப்படும்.

## மகாபுராணங்கள்

வடமொழிப் புராணங்களே மகாபுராணம் ஆதிபுராணம் என அழைக்கப்படுகின்றன. மகா புராணங்கள் ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறு இலட்சம் சுலோகங்களைக் கொண்டுள்ளன. சமய உண்மைகளை சரித்திர பாரம்பரியத்துடன் இணைத்து பாமர மக்களும் படித்துணர்ந்து இன்புறும் வண்ணம் மகா புராணங்கள் பாடப்பட்டுள்ளன. பண்டைய புராணங்கள் யாவும் செய்யுள் வடிவிலமைந்தவை. அநேகமானவை விருத்தப் பாவினாலானவை. நவரசங்களையும் பாடல்கள் மூலம் வெளிப்படுத்துபவையாக மகா புராணங்கள் உள்ளன.

வடமொழிப் புராணங்களின் மையமாக அமைவன ஐதீகமானவையும், சமய சம்பந்தமானவையுமாக இருப்பினும் அவை குப்தர் காலம் வரையிலான வட இந்திய வரலாற்றுச் செய்திகளைத் தருவதோடு நில்லாது இந்திய அறிவியல் களஞ்சியமாகவும் விளங்குகின்றன.

இலக்கியம் இலக்கணம் நுண்கலை, வைத்தியம் , அரசியல், போர்க்கலை கட்டிடக்கலை முதலிய பல்வேறு துறைகள் பற்றிய செய்திகளும் மகாபுராணங்களில் அடங்கியுள்ளன. மகா புராணங்கள் சிவனிடமிருந்து நந்தி தேவர் வாயிலாக சனற்குமாரருக்கும் அவர்மூலம் வியாசமுனிவழியாகச் சூத முனிவருக்கும் வந்தடைந்ததாக ஐதீகம் உண்டு. கி. மு 4ம் நூற்றாண்டு தொடக்கம் 5ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக இது அமைந்துள்ளது. பிரம்மன் விஷ்ணு, உருத்திரன், அக்கினி முதலிய தெய்வங்களின் பரத்துவம் பற்றிப் பேசுபவையாக மகாபுராணங்கள் உள்ளன. சிசு நாகவம்சம் மௌரியர் சுங்கர், குப்தர் முதலான அரசவம்சங்களைப் பற்றி மகாபுராணங்கள் எடுத்தியம்புகின்றன.

முழுமுதற் கடவுட்கோட்பாடு பக்தி நெறி என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட சமயங்கள் வளர்ச்சி பெற்ற காலத்தில் அவற்றின் தத்துவங்களையும் மரபுகளையும் விளக்கும் வகையில் உருவாக்கப்பட்டவையே மகாபுராணங்கள் ஆகும். இம் மகா புராணங்கள் ஈஸ்வரன் ஆன்மா உலகம், வழிபாடு, அருள், வீடுபேறு என்பவற்றை கதைகள் மூலம் விளக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன. அரசியல், சமுதாய நெறி தர்மம், தலம், சிற்பசாஸ்திரம் என்பனபற்றி இவை விரிவாகக் கூறுகின்றன.

மகதமன்னர்களதும், சாதவாகன மன்னர்களதும் வம்சாவளிகளினது சுருக்கமான வரலாறுகளும் புராணங்கள் சிலவற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. குப்த மன்னர்களின் ஆட்சிச் சிறப்புப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மகாபுராணங்களில் சமூகக் கருத்துக்களுக்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளதுடன் தலவழிபாடு, மகாத்மியம், தலபுராணம் என்பவற்றிற்கும் அவை மூலமாக உள்ளன. இதில் உலகியல் சார்ந்த கருத்துக்களும் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களும் விருத்தி பெற்றுள்ளன எனலாம்.

மகாபுராணங்கள் ஐவகை இலக்கண முடையனவாகக் காணப்படுகின்றன. அவையாவன:–

1. சர்க்கம் – உலகத்தின் தோற்றம்
2. பிரதி சர்க்கம் – உயிர்த் தோற்றமும், ஒடுக்கமும்
3. வம்சம் – மன்னர் பரம்பரை
4. மனுவந்திரம் – மனுக்களின் ஆட்சிக்காலங்கள்
5. வம்சானுசரிதம் – மன்னர் பரம்பரையோடு தொடர்பான கிளைக் கதைகள் என்பனவாகும். பஞ்சலட்சணங்கள் யாவற்றையும் அடக்கிய புராணங்கள் எதுவுமில்லை எனலாம்.

மகாபுராணங்கள் சிவன், விஷ்ணு, விநாயகர், முருகன், அம்பாள் முதலிய தெய்வங்கள் பற்றிய மான்மியங்களைக் கூறுவதுடன் இந்திரன், பிரம்மா, இயமன், அக்கினி, சூரிய சந்திரர் ஆகிய தேவர்கள் பற்றிய செய்திகளையும், அண்டகோசம், இராசபாரம்பரியம், வர்ணா சிரமம், யாகம் வேள்வி பற்றிய விளக்கங்களையும் கொண்டு விளங்குகிறது.

## மகாபுராணங்களின் உள்ளடக்கம்

உலகம் இறைவனிடமிருந்தே தோன்றுகின்றது. அவனாலேயே நிலைபெறுகிறது. மீண்டும் யுக இறுதியில் அவனிடமே ஒடுங்குகிறது. உலகின் கால வரையறையானது மனித காலம், தேவகாலம், பிரம்மகாலம், விட்டுணுகாலம், யுகாந்திரம் அல்லது ஊழிமுடிவுக் காலம் என புராணங்களில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது. மகா புராணங்கள் பதினெட்டு வகைப்படும். இவற்றில் சிவபுராணம் – 10, விஷ்ணுபுராணம் – 4, பிரம்ம புராணம் – 2, சூரியபுராணம் – 1, அக்கினிபுராணம் – 1.

சிவபுராணங்கள்:

| | |
|---|---|
| 1. சிவபுராணம் | 2. பவிடிய புராணம் |
| 3. மார்க்கண்டேய புராணம் | 4. இலிங்க புராணம் |
| 5. கந்த புராணம் | 6. வராக புராணம் |
| 7. வாமன புராணம் | 8. மற்ச புராணம் |
| 9. கூர்ம புராணம் | 10. பிரம்மாண்ட புராணம் |

விஷ்ணு புராணங்கள்:

| | |
|---|---|
| 1. காருட புராணம் | 2. நாரதீய புராணம் |
| 3. விஷ்ணு புராணம் | 4. பாகவத புராணம் |

பிரம்ம புராணங்கள்:

| | |
|---|---|
| 1. பிரம்ம புராணம் | 2. புதும புராணம் |

சூரிய புராணம்:

1. பிரம்ம – கைவர்த்த புராணம்

அக்கினி புராணம்:

ஆக்நேய புராணம்

வேதங்களில் கூறப்பட்ட பொருட்களை விரிவான கதைகள் மூலம் விளக்க எழுந்தவையே வடமொழியிலான இப் பதினெண் புராணங்களும் ஆகும். அநேகமான வடமொழிப் புராணங்கள் இன்று வசன ரூபத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

சிவபுராணம் 2,400 கிரந்தங்களை உடையது.
லிங்கபுராணம் 11,000 கிரந்தங்களை உடையது.
பாகவதபுராணம் 18,000 கிரந்தங்களை உடையது.
விஷ்ணுபுராணம் 6,000 கிரந்தங்களை உடையது.

மகாபுராணங்கள் பிரதிபலிக்கும் சமய பண்பாட்டு மரபுகளை வேதங்களோடு ஒப்பிடும் போது வளர்ச்சிபொருந்திய நிலையிலேயே காணப்படுகின்றன எனலாம். அத்துடன் ஆகமங்கள் சுருக்கமாகக் கூறும் கருத்துக்களுக்கு புராணங்கள் விளக்கங்கள் போல் அமைந்துள்ளன எனலாம். சிறப்பாக இறைவனின் திருவிளையாடல்களை விபரித்துக் கூறும் நூல்கள் மகாபுராணங்களே என்றால் அது மிகையாகாது. சிவனும் சக்தியும் இரண்டறக் கலந்திருக்கும் அர்த்த நாரீஸ்வர வடிவம் பற்றி இலிங்க புராணத்தில் விபரித்துக் கூறப்படுகிறது. அதாவது சிவனின் திருவுருவங்களையும், மூர்த்தி வேறுபாடுகளையும் மகாபுராணங்களே விளக்கி நிற்கின்றன எனலாம்.

மகாபுராணங்களை அடிப்படையாகக் கொண்டே தேவார திருவாசகங்கள் நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் சைவ சித்தாந்த சாத்திரங்கள் என்பன அமைந்துள்ளன எனலாம். இறைவன் அதர்மங்களை அழிக்க விரைந்த போதே அகோர வடிவங்களை எடுத்ததாக மற்சய, பாகவத புராணங்கள் கூறுகின்றன. இறை மூர்த்தங்களை விக்கிரகங்களில் அமைக்கும் முறை பற்றியும் கூர்ம, பாகவத புராணங்கள் எடுத்துரைக்கின்றன.

இறை பக்தியால் இறைவனின் அருளால் பெறமுடியுமென மார்க்கண்டேய புராணம் எடுத்துக் கூறுகின்றது. பொதுவாக மகா புராணங்கள் ஆலயங்களை அமைக்கும் முறைகள், விக்கிரகங்களை அமைக்கும் முறைகள், கட்டிடக்கலை, நித்திய நைமித்திய கிரியைகள், இசை, நடனங்கள் வழிபாட்டு முறைகள், தெய்வ வடிவங்கள் அவற்றின் பயன்கள், பக்தி, யோகம், ஞானம், அர்ச்சனை, சிவசின்னங்கள் என்பனபற்றியெல்லாம் எடுத்துக் கூறுகின்றன எனலாம்.

## வழிபாட்டு நெறி

மகாபுராணங்களில் சைவம், வைணவம், கௌமாரம், காணபத்தியம், சௌரம், சாக்தம் ஆகியன பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அது தவிர ஆலய வழிபாடு, உருவவழிபாடு, விரதம், யாத்திரை என்பன பற்றியும் கூறப்படுகிறது. அத்துடன் தோத்திரப்பாடல்கள் தியானம், மந்திரோபாசனை போன்ற வழிபாட்டு முறைகளும் முதன்மை பெறுகின்றன.

## பக்தி நெறி

முழுமுதற் கடவுள் மீதான பக்திநெறியை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டை விளக்கு பவையாகவே மகாபுராணங்கள் அமைந்து காணப்படுகின்றன. அடியார் பெருமை, பக்தியின் சிறப்பு, இறைவன் அருள் ஆகியவற்றை விளக்கும் கதைகளைக் கொண்டவையாகவும் மகாபுராணங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக மார்க் கண்டேயர், பிரகலாதன் கதைகளைக் குறிப்பிடலாம். அத்துடன் மகா புராணங்களில் பக்தி சார்ந்த வரலாறுகளையே காணமுடிகிறது எனலாம்.

## ஒழுக்க நெறி

மகாபுராணங்களில் பக்தியே மேலான ஒழுக்கமாகக் கொள்ளப்படும் வேத – உபநிடதங்கள், அறநூல்களில் வருகின்ற அறக்கோட்பாடுகளை இலகுவான முறையில் எல்லோரும் புரிந்து அநுசரிக்கக் கூடிய வகையில் விளக்கப்படுகிறது.

## இலக்கிய மரபு

வேதம், இதிகாசம் ஆகியவற்றுடன் தொடர்பான கதாபாத்திரத்தொடர்பே மகா புராணங்களில் காணப்படுகிறது. அதாவது இந்துக்களின் இலக்கிய பாரம் பரியத்தில் வேதங்களை அடுத்துச் சிறப்புப் பெறுவன புராண இதிகாசங்கள் ஆகும். அவை எழுந்த காலச் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் காணப்பட்ட வழிபாட்டு முறைகள் சமயநம்பிக்கைகள் தொடர்பான கதைகள், ஐதீகங்கள் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கியனவாக இவை உள்ளன. பிற்காலத்தில் நாடகம், காவியம் ஆகிய துறைகளுக்குக் கருவாக அமைந்த கதா பாத்திரங்களுக்கும் மகா புராணங்கள் கருவாக உள்ளன. அத்துடன் வாழ்வியல், பிரபஞ்சம், அறம் பற்றிய கருத்துக்கள் எளிமைப்படுத்தப்பட்டு மகாபுராணங்களில் கூறப்பட்டுள்ளன. பிற்கால இலக்கியங்களின் மூலம் புராணக்கதைகள் வெளிப்படுத்தப்பட்டன. இதனால் புராணங்களை உணர்ந்து மக்கள் அதன்படி தொழிற்பட முன் வந்தனர்.

### சமயப் பிரிவுகள்

சைவ, வைணவ மரபுகளைப் பிரதிபலிப்பனவாகவே மகாபுராணங்கள் அமைந்துள்ளன. இதில் சிவன், விஷ்ணு வழிபாடுகளே அதிகமாக உள்ளன. ஆனால் சிவ – விஷ்ணு வழிபாட்டுடன் விநாயகர், அம்மன், முருகன், வழிபாடுகளும் இணைந்து சிறப்புப் பெறுவதைக் காண முடிகிறது. வைதீக சமய மரபு வாழும் இந்து சமயமாக மாற்றம் பெற்ற தன்மையை மகாபுராணங்களில் காணமுடிகிறது.

### புராண - இதிகாச தொடர்பு

இதிகாசம் என்பது முன் நிகழ்ந்த வரலாற்றை கூறும் நூல் எனப் பொருள்படும். இதிகாசமும் புராணத்துள் அடங்கும் என ஆறுமுக நாவலர் கூறியுள்ளார். ஆனால் நுணுகிப் பார்த்தால் புராணங்களில் தெய்வ சம்பவங்களே அதிகமாகப் பேசப்படுகிறது. இதிகாசங்களில் அரச பாரம்பரியங்களும், அரச நெகிழ்ச்சிகளுமே பெரிதும் பேசப்படுகிறது.

மகாபுராணங்கள் வரலாற்று நிகழ்வுகளோடு கற்பிதங்கள் பொருந்தப் பெற்றுள்ளனவாயினும் வளம் பெற்ற சிந்தனைக் கருவூலங்களாகத் திகழ்கின்றன என்பது அசைக்க முடியாத உண்மைகள் ஆகும். சமயக் கதைகளைத் தொகுத்துக் கூறும் முழுமையான நூல்கள் புராணங்கள் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கருத்து அல்ல.

மாமன்றச் செய்தி

## சிவதொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்

மாமன்றம் சிவதொண்டர் அணியொன்றை ஆரம்பிப்பது தொடர்பான ஆலேசனைக் கூட்டமொன்று கடந்த ஆகஸ்ட் மாதம் 26ம் திகதியன்று காலை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சமயப் பிரசாரத்திலும் சமூகப் பணிகளிலும் ஈடுபடவும், மக்களிடையே சமய அறிவை வளர்த்து தவறான வழியில் மதமாற்றம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்திப் பணியாற்றும் நோக்குடனும் சிவதொண்டர் அணியொன்றை அமைப்பதில் மாமன்றம் செயற்பட்டு வருகிறது.

மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு, தங்கள் கருத்துக்களை வழங்கினார்கள்.

அங்கு வருகை தந்தவர்களுக்கு மாமன்றத்தால் மதிய போசனமும் வழங்கப்பட்டது.

ஒரு தெய்வீக ஆற்றல்தான் நம்முடைய முடிவுகளை எல்லாம் தீர்மானிக்கிறது

- ஷேக்ஸ்பியர்.



# டொறிங்டன் திருமுருகன்

*மங்கள நாயகன் மால் மருகன்*
*மனம் மகிழ்ந்திங்கு எழுந்துவிட்டான்*
*தங்கத் திருவுரு கொண்ட குகன்*
*தரணியைக் காக்க வந்து விட்டான்.*

*கொழும்பு ஏழில் குடிகொண்டான்*
*கொடும்பகை களைய மனங்கொண்டு*
*நம்மை நாடியே வந்து விட்டான்*
*நம்பிக்கையுடனே வழிபடுவோம்.*

*உமையாள் இளமகன் சரவணனே*
*உண்மை நிலைக்கவே உளங் கொண்டான்*
*கிடைத்தற்கரிய அருள் நமக்கு*
*கிட்டிட வேலவன் தாழ் பணிவோம்.*

*வினைகள் தீர்க்கும் கந்தனவன்*
*விரைந்தே நம்மை ஆட்கொள்ள*
*தேடியே இங்கு வந்து விட்டான்*
*தேவனின் அடி பணிந்தருள் பெறுவோம்.*

*டொறிங்டன் நற்பதி தனிலிருந்து*
*தொல்லைகள் யாவுமே வேரறுப்பான்*
*கும்பம் வைத்தே பூசிப்போம் – நம்*
*குலமது வாழ அருள் தருவான்.*

*தர்மலிங்கம் மனோகரன்*
*"உமாபதி"*
*கொழும்புத்துறை*

# பகவத்கீதை பற்றி ஒரு கண்ணோட்டம்

*திருமதி. G. சரோஜினிதேவி (B.A. Dip in Edu.)*
*கொ/முகத்துவாரம் இந்துக் கல்லூரி,கொழும்பு – 15.*

இந்து திருநூல் வரிசையிலே சிறப்பிடம் பெறுவது பகவத் கீதையாகும். இது மகாபாரத யுத்தகளத்திலே கண்ணபிரானால் அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டுள்ள உபதேசங்களை உள்ளடக்கியது. கடமை புரியும் மக்களுக்கு வழிகாட்டியாகவும் இருள் நீக்கும் அறிவொளியாகவும் மனக்கவலைக்கு மருந்தாகவும், சாதி, சமய பொது நீதியாகவும், ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவும் சிறந்த நூலாகவும் இது அமைகிறது. பகவத்கீதை என்பது பகவானுடைய உபதேசம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. உபநிடதம், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் என்ற பிரஸ்தான திரயங்களில் கீதை சிறப்பிடம் பெறுகிறது.

பகவத்கீதையிலே பதினெட்டு அத்தியாயங்களும் தனித்தனியே பதினெட்டு யோகங்களாகக் கொள்ளப்படுவது சிறப்பம்சமாகும். யோகம் என்பதற்குப் பலவித விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. மனதின் பண்பாடு யோகம் என்று கொள்ளப்படுகின்றது. ஆகவே மனம் தளர்ச்சியடைவோருக்கும், துயருறுவோருக்கும் யோகம் இல்லை என்பதுவும் கருதப்படுகின்றது. இன்னோர் இடத்தில் செயலில் திறமைவாய்க்கப் பெற்றிருப்பது யோகம் என்றும், மனம் நடுநிலை வகிப்பது யோகம் என்றும் நாம் வலியத் தேடிக்கொண்ட வருத்தங்களில் இருந்து விடுபடுவது யோகம் என்றும் கொள்ளப்படுகின்றது. அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டுள்ள உபதேசங்களைக் கொண்டுள்ளமையினால் பகவத்கீதையின் முதலாவது அத்தியாயம் "அருச்சுனன் விஷாய யோகம்" என்று சிறப்பாக அழைக்கப்படுகின்றது.

இந்தப் பதினெட்டு யோகங்களையும் வகுத்தும் தொகுத்தும் நான்கு பிரிவுக்குள் அடக்கலாம். இந்த யோகங்கள் எல்லாம் மனிதனின் ஆத்மா பக்குவநிலை அடைவதற்கான வழிகளைக் கூறுகின்றது. இந்த நான்கு யோகங்களையும் படிமுறை வரிசையில் பார்த்தால் அவற்றினை அரும்பு, பிஞ்சு, காய், கனி என்று வகைப்படுத்தலாம். இந்த நான்கினையும் நுணுகி ஆராய்வதன் மூலம் அவற்றிற்கிடையே எந்தவித வேற்றுமைகளையும் காணமுடியாதிருக்கின்றது. வாழ்க்கை என்னும் ரதத்திற்கு நான்கு குதிரைகள் பூட்டப்படுகின்றன. ஒரு ரதம் விரைந்து ஓடுவதற்கு நான்கு குதிரைகளும் சேர்ந்து உழைக்க வேண்டும். அதே போல வாழ்க்கை என்னும் ரதம் நன்றாகச் செயற்பட வேண்டுமானால் இந்த நான்கு யோகங்களும் ஒரே காலத்தில் செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையின் இறுதி இலட்சியம் நிறைவேறுகின்றது.

பகவத்கீதையிலே அமைந்துள்ள விடயங்கள் கண்ணபிரானால் அருச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டுள்ள உபதேசங்களாகக் கொள்ளப்படுகின்றன. அருச்சுனனுக்கு ஏற்பட்ட கலக்கம் அவனுக்கு மட்டும் ஏற்பட்ட கலக்கமல்ல, போர்க்களத்தில் நிற்கும் அவன் எதைச் செய்யலாம், எதைச் செய்யதல் கூடாது என்ற விடயத்தில் குழப்பம் அடைந்தவனாக இருக்கின்றான். போர்க்களத்தில் அவனுக்கு ஏற்படும் குழப்பம் வாழ்க்கைக் களத்தில் எல்லோருக்கும் ஏற்படும் ஒன்றுதான். அருச்சுனனுடைய குழப்பத்தைத் தெளிவுபடுத்த கண்ணபிரானால் மேற் கொள்ளப்படும் உபதேசம் மனிதனுக்கு ஒரு சிக்கலான நேரத்தில் தெளிவை ஏற்படுத்தக் கூடியதாக அமைகின்றது. அதாவது ஒரு சிக்கலான கட்டத்தில் அருச்சுனனுக்கு தெளிவு ஏற்படுத்துவதன் மூலம் மனித இனத்திற்கே பகவான் தெளிவை ஏற்படுத்தி விடுகின்றான்.

மனிதனுக்கு ஏற்படுகின்ற துயரங்களில் உலக ஆசையைக் குறித்து வருகின்ற துயரமும் ஒன்றாகும். தனக்கு வந்து சேர்ந்த பொன்னும் பொருளும் காணாது என்று துயரம் அடைபவர்களும் உண்டு. இத்தகைய துயரத்தினால் அஞ்ஞான இருள் அதிகரிக்கின்றது. ஆனால் அருச்சுனனுக்குப் போர்க்களத்தில் ஏற்படுகின்ற துயரம் அத்தகையது அல்ல. அவனுக்கு உலக ஆசை ஒழிகின்றது. மூவுலக இராச்சியமும் வேண்டாம் என்கின்றான். அவனுக்கு ஏற்பட்ட பரிதவிப்புக்குரிய காரணம் போர்புரிவதா அல்லது பின்வாங்குவதா என்பதாகும். நமது கடமை எது என்று தீர்மானிக்க முடியாதவாறு வாழ்க்கையின் மர்மம் அவனுக்கு விளங்காத முறையினால் வாழ்க்கை அருச்சுனனுக்குத் தலைச் சுமையாகத் தோன்றுகின்றது,

மனித வாழ்க்கையே ஒரு முடிவில்லாத போராட்டம் ஆகும். உயிர்கள் எதைப் பெற விரும்பினாலும் அதற்காகப் போராட வேண்டியுள்ளது. ஒரு உயிரை எதிர்த்து இன்னொரு உயிர் பேராடித்தான் வாழவேண்டும் என்பது இயற்கையின் நியதியாகும். போர்க்களத்திலே தனது உறவினர்களைக் கண்ட அருச்சுனனின் கை தளர்கின்றது. இவர்களைக் கொன்று தான் வாழ்வதால் என்ன பயன் என்று கிருஷ்ணனைப் பார்த்து அருச்சுனன் கேட்கின்றான். கொலைக்களமான உலகத்திற்கு வந்துவிட்டதன் பின்பு கொலையைச் செய்யத்தயங்குவது அகிம்சையும் ஆகாது அறநெறியும் ஆகாது என்று கூறி போர்வீரனான அருச்சுனனின் நெஞ்சத்தில் தர்மம் என்றால் என்ன என்பதை அவனது மனதிலே பகவான் ஆழமாகப் பதித்து விடுகின்றான்.

தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அருச்சுனன் வில்லை வீசி எறிந்து விடவில்லை. மற்றவர்களின் உயிரைப் போக்க விரும்பாமையினாலேயே வில்லை வீசி எறிகின்றான். ஆசையை அறுத்து விட்டவனாக அருச்சுனன் தன்னைக் காட்டிக் கொண்டாலும் உண்மையில் கடமையைப் புறக்கணித்து விடுகின்றவனாகவே அவன் விளங்குகின்றான். "எதைக் காரணம்

காட்டியும் கடமையைப் புறக்கணித்து விடாதே" என்று கிருஷ்ண பரமாத்மா அவனை எச்சரிக்கின்றார். இதன் மூலம் மனிதனது சிந்தனைக்கு பகவத்கீதை வழிகாட்டுவதுடன் மக்கள் யாவருக்கும் பொருத்தமான ஒரு நூலாக விளங்குகின்றது.

கிருஷ்ணரது உபதேசத்தை மேலும் நோக்குகின்ற போது அவற்றிலும் இந்துமத சிந்தனைகளான சில வாசகங்கள் அமைந்துள்ளதை நோக்கலாம். அவர் அருச்சுனனைப் பார்த்து நான் நீ, இந்த அரசர்கள் ஆகிய எவரும் முன்பு இல்லாமல் இருந்ததில்லை. இந்த உடல்கள் அழிந்து விடுகின்ற காரணத்தால் நாம் இல்லாமலும் போய்விடுவதில்லை. மரணத்தினால் உடலை மட்டும் அழிக்க முடியுமே தவிர ஆத்மாவை அழிக்க முடியாது. உடல் அழிந்ததன் மூலம் ஆத்மா அழிந்ததாக எண்ணுகிறவன் தன்னையே ஏமாற்றுகின்றவனாகின்றான். இதன் மூலம் உடலும் ஆத்மாவும் வேறு வேறு என்ற கருத்து அறியப்பட்டுள்ளது.

கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசங்கள் மூலம் கீதைக்கு உபநிடத்துக்கும் இடையில் உள்ள தொடர்பினை அறிய முடிகின்றது. 'வேதமாகிய பசுவிலே உபநிடதமாகிய முலையிலே கண்ணன் என்ற இடையன் கறந்தெடுத்த ஞானப்பால் பகவத்கீதை' என்று கூறப்படுகின்றது. பாலைக் கறக்கும் போது ஊட்டிவிடப்படும் கன்றுக்குட்டியாக அருச்சுனன் விளங்குகின்றான். இதன் மூலம் பகவத்கீதைக்கும் உபநிடதங்களுக்குமிடையிலுள்ள தொடர்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

உபநிடத மகா வாக்கியமான "தத்துவமசி" என்பதற்கான சிறந்த விளக்கம் கீதையிலே காணப்படுகின்றது. அதாவது ஜீவாத்மா ஆகிய நீ, பரமாத்மா ஆகிய மெய்ப்பொருளுக்கு அன்னியமானவன் அல்ல என்று கூறப்படுகின்றது. கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களுக்கு "தவம்" என்ற நீ என்ற பதத்திற்கு இலக்காகவுள்ள ஜீவதத்துவத்தை விளக்குகின்றது. அதாவது ஆன்மா பற்றிய பல விளக்கங்களைக் காணலாம். ஆன்மாவிடத்திலுள்ள குறைபாடு, அது அடைய வேண்டிய உயர்நிலை, அதற்காக அது ஆற்ற வேண்டிய முயற்சிகள் ஆகிய அத்தனையும் முதல் ஆறு அத்தியாயங்களிலும் அமைந்து விடுவதைக் காணலாம். இரண்டாவது அத்தியாயம் 'தத்' என்ற பதத்திற்கு இலக்காகவுள்ள அது என்பதைப் பற்றி எடுத்து விளங்குகின்றது. இதேபோல் இறுதி அத்தியாயங்களும் 'அசி' அதாவது இருக்கின்றார் என்ற பதத்திற்கான தொடர்புகள் எடுத்துக் கூறப்படுவதைக் காணலாம்.

பகவத்கீதையிலே "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்றொரு சொற்றொடர் காணப்படுகின்றது. அதாவது பற்றற்று கடமையாற்றுகின்றபோது மனிதனிடத்து படிந்துள்ள மன அழுக்குகள் நீங்கப் பெற்று மனிதன் புனிதமடைகின்றான். இப்போதுள்ள வாழ்க்கையில் நாம் சில கடமைகளைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அப்படிப்பட்ட கடமையைப் புரியும் போது பலவித துயரங்களுக்கு ஆளாகின்றோம். வாழ்க்கையின் துன்பங்களுக்கு அஞ்சி மக்களை விட்டு விலகி, தனி மனிதனாகக் காடுகளில் வாழ்வதை பற்றற்ற நிலை என்று கீதை கருதவில்லை. நன்மைக்கும் தீமைக்கும் நடுவில், மகிழ்ச்சிக்கும் துக்கத்திற்கும் இடையில் பற்றற்று செயல்படுகின்றவனையே அறிவில் சிறந்தவனாக பகவான் அடையாளம் காணுகின்றான்.

இந்து வாழ்க்கை முறையில் மனிதனை நிறை மனிதனாக்குவதற்கு பல்வேறு படிமுறைகள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய படிமுறைகளைக் கூறுவதையே தனது கோட்பாடாகக் கொண்டு கீதை காணப்படுகின்றது. உறுதியான உடல், உயர்ந்த உள்ளம், தெளிந்த அறிவு என்பன ஒருவனுக்கு முக்கியமானதாகும். இத்தகைய முக்கியமான ஒரு நிலையைப் பெறுவதற்கும் பகவத்கீதை வழிகாட்டுகின்றது.

**மாமன்றச் செய்தி**

## சைவப் பெரியார் அமரர் ஆ. சின்னத்தம்பி அஞ்சலிக் கூட்டம்

**மாமன்ற ஸ்தாபகர்களில் ஒருவராகவும், அதன் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும், அறங்காவலர் சபை உறுப்பினராகவுமிருந்து அரும்பணியாற்றிய ஆ. சின்னத்தம்பி அவர்களின் மறைவையொட்டி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டமொன்று கடந்த ஆகஸ்ட் மாதம் 26ம் திகதியன்று மாலை மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.**

**மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா தலைமையில் நடந்த மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா, முகத்துவாரம் ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ கு. சோமசுந்தரக் குருக்கள், வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி, வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சின் செயலாளர் திரு. வி. இரகுநாதன், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாசூரி இ. சிவகுருநாதன், விவேகானந்த சபை பொதுச் செயலாளர் திரு. க. இராஜபுவனீஸ்வரன், அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மனோகரன், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் ஆகியோர் உரையாற்றினார்கள்.**

**அகில இலங்கை கண்ணதாசன் மன்றத் தலைவர் வேலணை வேணியன் அவர்களின் கவிதாஞ்சலியும் நிகழ்வில் இடம்பெற்றது.**

**அமரர் ஆ. சின்னத்தம்பி அவர்களின் நினைவாக, அன்னாரது குடும்பத்தினரால், அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இராப்போசனம் வழங்கப்பட்டது.**

# இராமகிருஷ்ண இயக்கத்தின் தோற்றமும் அதன் நோக்கங்களும்

செ. பிரபாகரன் *B. A*
*ப/ அபிஸ்லேபி தமிழ் வித்தியாலயம், பண்டாரவளை.*

**சு**வாமி விவேகானந்தர், சுவாமி இராமகிருஷ்ண பரம ஹம்சரின் மறைவின் பின் வட இந்தியாவின் பலபகுதிகளுக்கும் 1891 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் தன்னந்தனியனாகப் புறப்பட்டு பின் தென்னாட்டு நகரங்களுள் ஒன்றான பெங்களூர் வந்து அங்கிருந்து இராமேச்சரத்தை அடைந்து அங்கிருந்து இந்தியாவின் தென் கோடியான கன்னியாகுமரியை அடைந்தார். சுவாமிஜியின் இந்த தென்னாட்டு விஜயமே இராமகிருஷ்ண இயக்கத்திற்கு வித்திட்ட விஜயமாக அமைந்தது.

கன்னியாகுமரியை அடைந்த சுவாமிஜி அவர்கள் கன்றை இழந்த பசு கன்றைக் கண்டவுடன் ஓடி வந்து பாசத்துடன் தனது நாவினால் தடவிக் கொடுப்பது போல கன்னியாகுமரி தேவியின் எதிரே விழுந்து வணங்கினார். பின் ஆலயத்திலிருந்து வெளியேறி கடற்கரையை அடைந்து மூன்று கடல்கள் சங்கமிக்கும் கடலில் இறங்கி நீந்தி சிறிது தொலைவில் கடலில் இருந்த ஒரு பாறை மீது ஏறி அமர்ந்து கொண்டார். (இப் பாறையே இன்றும் விவேகானந்தர் பாறை எனப்படுகின்றது).

கன்னியாகுமரி கடலின் அலைகள் சுவாமிஜியைச் சுற்றி எழுப்பி பாறைகளில் மோத சுவாமிஜியின் எண்ணங்களோ அவற்றை விட உயரமாக அவருடைய உள்ளத்தில் சிந்தனை அலைகள் எழும்பிக் கொண்டேயிருந்தன. கடலைவிட கொந்தளித்தது அவரது உள்ளம். அதோ அவருக்கு எதிரே இந்தியா முழுவதும் கிடக்கின்றது. பாரத மாதா வாடிச் சோர்ந்து போய் அவர் கண்ணெதிரே படுத்துக் கொண்டிருக்கின்றாள். பாரதத்தின் கடைசி மண்ணில் அமர்ந்து கொண்டிருந்த சுவாமிஜிக்கு புல்லரித்தது.

கன்னியா குமரி பாறையில் அமர்ந்திருந்த சுவாமி விவேகானந்தருக்கு பாரதம் என்ற ஒன்று மட்டும் அவர் கண்களுக்குத் தெரிந்தது. இந்தியாவில் பல பகுதிகள் இருந்தாலும் அவரவர்களுக்கென்று தனித்தனி மொழிகளும் பழக்க வழக்கங்களும் இருந்தாலும் அவற்றுக்கொல்லாம் ஆதாரமான வேதமும் வேதாந்தமும், ஆகமமும், புராணமும் ஒன்றேயல்லவா? இந்திய மக்கள் வெறுமனே இந்த உலக வாழ்க்கையை அனுபவித்து விட்டுச் சாகவா பிறந்தவர்கள்? இத்தனை பகுதிகளுக்கும் பொதுவான ஆன்மீக அமுதத்தைப் பருகி அமரத்துவம் பெற அல்லவா பிறந்தவர்கள். சுவாமிஜி அற்புதமானதொரு தியான சமாதி நிலையில் இருக்கும் போது, நினைவென்று சொல்ல முடியாத அவரது நினைவில் இவையெல்லாம் எண்ணமென்று சொல்ல முடியாத சூட்சும உணர்வுகளாக ஆழ்ந்து அடர்ந்து உதித்தன.

பாரதத்தின் புராதன மேன்மை, அந்த மேன்மை சிதைந்து அது இழிந்து நிற்பது, இனி இந்த இழிவை வென்று அது வீறுகொண்டு எழப்போவது எல்லாம் அலை அலையாக அவருடைய கண்முன் தோன்றின. பௌத்தம் தொடங்கி நாயன்மார்கள் வரை வளர்த்த ஆன்மீகத்தையும் அதனோடு இணைந்ததாக உயர்வு பெற்று வந்த அரசியலிலும் மகோன்னதமாக விளங்கி வந்த பாரதம் அந்நியர்களின் ஆட்சிக்கு அவ்வப்போது அடங்கியி ருந்தாலும் அந்த அந்நியர்களின் தத்துவங்களையும் தனதாக்கிக் கொண்டு, சுதந்திரம் பெற்று வாழ்ந்த நாடு ஒரேடியாக வீழ்ந்ததைக் கண்டு மனமுடைந்தார். முகலாய ஆட்சியும், அதன்பிறகு பிரிட்டிஷ் ஆட்சியும் ஏற்பட்டு பாரதம் ஆட்சியாளர்களின் வாழ்க்கை முறையே சிறந்தது என்று மயங்கித் தனது ஒப்பற்ற பண்பைக் கைவிட்டதைக் கண்டு குமுறினார். இதற்கெல்லாம் காரணமான ஒற்றுமையி ன்மையையும் பிரிவினை சக்திகளையும் வெல்ல இதோ நேரம் வந்து விட்டது என்று அவரது உள்ளம் சிலிர்த்துக் கொண்டு சிம்மமாக கிளம்பியது.

கன்னியாக் குமரியின் பாறையில் அமர்ந்திருந்த சுவாமிஜியின் உள்ளம் மெழுகாகக் கரைந்து கொண்டிருந்தது. இந்தியாவின் ஏழை எளியவர்களுக்காக, அடக்கி ஆளப்பட்டவர்களுக்காக, தாழ்த்தப்பட்டவர் களுக்காக அவரது உள்ளம் குழைந்து நெகிழ்ந்தது. "மக்களையெல்லாம் மேம்படுத்தாவிட்டால் "தர்மம்", "தர்மம்" என்று ஒப்பற்ற வார்த்தைக்கு என்ன பொருள்? ஒவ்வொருவரும் சுயநலமாகத் தனது ஆன்ம விடுதலையைத் தேடிக் கொள்வது தர்மமாகுமா? சமய விடங்களிலாகட்டும், அரசியலிலாகட்டும் தொழில் துறையிலாகட்டும் இவை அனைத்து விடயங்களிலும் கையோங்கியவர்கள் மக்களையெல்லாம் வளரவிடாமல் நசுக்கித்தான் வைத்திருக்கின்றார்கள். இப்படி நசுக்கப்பட்டவர்களுக்கெல்லாம் விடுதலையளிக்க வேண்டும் என்ற எண்ணங்கள் அடித்து மோதிக் கொண்டு வந்தன. ஆனால் இக் காரியங்களை பொருளாதார வசதியில்லாத தன்னால் எப்படி சாதிக்க முடியும் என்று கலங்கிய சுவாமிஜி அவர்களுக்கு ஓர் ஒளிக் கீற்று தென்பட்டது. பல்லாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள அமெரிக்கக் கண்டம் அவருடைய கண்களுக்குத் தட்டுப்பட்டது. அங்கிருந்து ஓர் ஒளி ரேகை புறப்பட்டு அது நீண்டு நீண்டு சுவாமிஜியின் அருகில் வந்து வா, வா என்றழைத்தது. தாம் அமெரிக்கா சென்று இந்துமதத்தின் மாண்பினை உலகத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லி பதிலாக அவர்களிடமிருந்து பொருட் செல்வத்தைப் பெற்று வந்து ஏழைகளை உய்விப்பதற்காக தானம், சமயம் ஆகிய இரண்டையும் இணைத்து தனது குருவான சுவாமி இராமகிருஷ்ண பரம ஹம்சரின் நாமத்தின் பெயரால் ஆரம்பிக்க வேண்டும் என்று திடசித்தங் கொண்டார்.

சுவாமிஜி அவர்கள் தாம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள இப் புனித கைங்கரியத்திற்கு உலகியலில் ஆசையை நீக்கியவர்களையும், மக்கள் சேவைக்கு தம்மையே அர்ப்பணிக்கத்

தயாராயுள்ளவர்களையும் பொருளாசை இன்றி தர்மகர்த்தாக்களாக வாழும் பூரணத் துறவு மனப்பான்மை கொண்டவர்களையும் தம்மோடு இணைத்து செயற்பட எண்ணினார். அதாவது சந்நியாசிகளின் சங்கம் ஒன்றைக் கொண்டு இந்தப் பணியைப் புரிய வேண்டும் என்று சுவாமிஜி அவர்கள் தீர்மானம் செய்து கொண்டார்.

சுவாமிஜியின் கனவு நனவாகிய நாளே 1897ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி. ஆம் அன்றுதான் சுவாமி அவர்கள் தனது குருநாதரான சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரால் இராமகிருஷ்ண சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும். அன்றைய நாள் இராமகிருஷ்ண சங்கத்தின் பணிகள் எவ்வாறானதாக இருக்க வேண்டும் என அங்கு கூடியிருந்தோர் விவாதித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், சங்கத்தின் கொள்கைகளும் நோக்கங்களும் வரையறை செய்யப்பட்டன.

அவை:–

1. இந்தச் சங்கம் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் எனப்படும்.
2. மனித குல நன்மைக்காக சுவாமி ஸ்ரீ இராமகிருஷ்ணர் எந்த உண்மைகளை உபதேசம் செய்து தமது வாழ்விலும் நிதர்சனமாக மேற்கொண்டு நிரூபித்துக் காட்டினாரோ இவ்வுண்மைகளை மக்கள் தமது வாழ்விலும் அனுஷ்டித்து லௌகீகத்திலும் மனநிலையிலும் ஆன்மீகத்திலும் முன்னேறுவதற்கு உதவுதல் இச்சங்கத்தின் நோக்கமாகும்.
3. அனைத்து மதங்களும் அமரத்துவம் வாய்ந்த ஒரே நிரந்தர மதத்தின் பல வடிவங்களே என்றுணர்ந்து மாறுபட்ட பல சமயத்தவர்களிடையேயும் கூட்டுறவை நிலை நாட்டுவதற்காக ஸ்ரீ இராமகிருஷ்ணரே தொடக்கி வைத்த இயக்கத்தைச் சீரான முறையில் நடத்தித் தருதல் சங்கத்தின் கடமையாகும்.
4. பொது மக்களின் லௌகிக, ஆன்மீக நலன்களுக்கு உகந்தவாறு ஞானமும், விஞ்ஞானமும் புகட்டுவதற்கு தகுதி பெறுமாறு சிலருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
5. கலைகளையும், தொழில்களையும் வளர்க்கவும் ஊக்குவிக்கவும் வேண்டும்.
6. ஸ்ரீ இராமகிருஷ்ணரின் வாழ்க்கையில் வேதாந்தத் தத்துவங்களும் வேறு சமயக் கருத்துக்களும் எவ்வாறு தெளிவுபடுத்தப் பெற்றனவோ அதேமுறையில் அவற்றைப் பொதுமக்களிடையே புகுத்தி பரப்புதல் வேண்டும்.
7. சந்நியாசிகளையும், பிறருக்குப் போதிப்பதற்கு முன்வருவோரையும் பயிற்றுவிப்பதற்காக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் மடங்களும் ஆச்சிரமங்களும் நிறுவுவதில் சங்கத்தை ஈடுபடுத்தல்.
8. இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்குமிடையே நெருங்கிய உறவினையும் கருத்திணக்கமும் காண்பதற்காக சங்கத்தின் தேர்ந்த அங்கத்தினரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வேதாந்தத்தைப் பிரசாரம் செய்தல்.
9. ஆன்மீகமாகவும், மனிதாபிமானமாகவும் பணியாற்றுவது மட்டுமே சங்கத்தின் இலட்சியமாகையால் அது அரசியலுடன் எந்த விதத்திலும் தொடர்பு கொள்ளக் கூடாது.

மேற் கூறப்பட்ட தீர்மானங்களின் பின்னர் சுவாமி விவேகானந்தர் பொதுத் தலைவரானார். எனினும் அவர் பெயரளவிலான அதிகாரத்தைச் செலுத்த எண்ணி சுவாமி பிரம்மானந்தரைத் தலைவராக்கினார். சுவாமி யோகானந்தர் உபதலைவராக நியமிக்கப்பட்டார்.

*இராமகிருஷ்ண இயக்கத்தின் எதிர்காலத் திட்டங்கள்.*

1. இராமகிருஷ்ண இயக்கம் சாதாரண மக்களிடம் பிரபலமாக வேண்டும்.
2. தொழில் பற்றிய புதிய கண்ணோட்டம் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
3. இராமகிருஷ்ண இயக்கத்தின் உறுப்பினர்களின் ஆன்மீக வாழ்க்கை தீவிரமாக்கப்படல் வேண்டும்.
4. மிஷனின் பல்வேறு பிரிவுகளும் ஒன்றிணைக்கப்பட்டு செயல்திறன் அதிகரித்தல்.
5. பல்வேறு கலாசாரங்கள் ஒருங்கிணைய வழிவகுத்தல் வேண்டும்.
6. உலக மக்கள் ஒன்றோடொன்று நெருங்கி உறவாட இராமகிருஷ்ண இயக்கம் முக்கிய பங்காற்றல் வேண்டும்.
7. உலகளாவிய ரீதியில் இராமகிருஷ்ண இயக்கம் ஆற்ற வேண்டிய பணி தீவிரமாக செயற்படுத்தல் வேண்டும்.

எதிர்கால மனித சமுதாயத்தின் நம்பிக்கையின் ஆரம்பப் பள்ளியாக விளங்கும் இராமகிருஷ்ண இயக்கத்திடம் சுவாமி இராமகிருஷ்ணரும், அன்னை சாரதா தேவியாரும், சுவாமி விவேகானந்தரும் இக் காலத்திற்குரிய மகோன்னதமான சில குறிக்கோள்களை தெளிவாக வழங்கியுள்ளார்கள். இதுவே உலகளவில் வளருமாயின் உலகமே ஒரே சமுதாயமாகும். அந்த சமுதாயத்தின் ஆன்மீக இல்லமே இராமகிருஷ்ண இயக்கமாகும்.

உசாத்துணை நூல்கள் :–
1. சுவாமி விவேகானந்தர் – ரா. கணபதி.
2. இராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் – 1998.

**மாமன்றச் செய்தி**

## சுவாமி விபுலானந்தர் நினைவு தினம்

சுவாமி விபுலானந்தரின் நினைவு தினத்தையொட்டிய சிறப்பு வைபவமொன்று கடந்த ஜூலை 31ம் திகதியன்று காலை தெமட்டகொட விபுலானந்த தமிழ் வித்தியாலயத்தில் மாமன்றத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டது.

வித்தியாலய மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுடன் நடந்தேறிய மேற்படி வைபவத்தில், சுவாமி விபுலானந்தர் நினைவுச் சிறப்பிதழாக வெளிவந்திருந்த மாமன்றத்தின் காலாண்டுச் சஞ்சிகையான "இந்து ஒளி"யும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# துதிக்கின்றேன் – உந்தன் துணை கேட்டு !

மின்னலெனும் தோரணங்கள் மிதந்துவரும் மாவிலைகள்
சின்னமனத் திரையினிலே சிந்தனைகள் – மின்னலென
பழகு தமிழ்கூட்டி பாலோடு நீராட்டி
அழகு செய்வேன் உனை!

(வேறு)

கண்களது காட்சிகளைக் கவிதை ஆக்க
கணபதியே! கைதூக்கிக் குட்டிக் கொண்டேன்!
எண்ணிலாப் பக்தர்களின் பாரம் நீக்கி
என்மனத்தை உனதாக்கி அமைதி கூட்டு!
பண்பாடும் தமிழரின் வாழ்வை எல்லாம்
புண்பட்டுப் போகாமல் பாதை காட்டு!
மண்டாடும் மனங்கொண்டு பாடிப் போறேன்
மனமிரங்கி மறத்தமிழை வாழ வாழ்த்து!

சித்தத்தில் இனிக்கின்ற தெய்வம் நீயே
சொத்தாக வேறுண்டோ ? பாரும் நெஞ்சில் !
யுத்தத்தால் நான்செத்துப் போனால் – மீண்டும்
யென்மங்கள் எடுத்தாலும் "இந்து" அன்றி
மொத்தத்தில் வேறில்லை; நீயே அல்லால்
மனத்திரையில் எழுந்தாயே போற்றி நின்றேன்!
வித்தகனே காத்திடுவாய் கருணை கொண்டு
விழுமியங்கள் கொண்ட தமிழ்க்குலத்தை ஐயா!

தொல்லைகளை அழிவுகளை நீக்கிப் போடு
துயரகல தமிழினத்தை வாழக் காட்டு!
எல்லைகளைக் காப்பாயே வீரம் பொங்க
எமனேறி வந்தாலும் தீயைக் கக்கு!
கொல்லைவரும் குரங்குகளால் வேண்டாம் வம்பு
குமுறியெழும் குணத்தாலே விரட்டித் தள்ளு!
இல்லயெனத் துன்பங்கள் போக்கி எங்கள்
இளவல்கள் வாழ்க்கைக்கு வெள்ளி ஏற்று!

*தாவை. லோ. துஷிகரன்*

# மார்கழி நீராடலும் மகளிரும்

செல்வி க. காந்திமதி

மார்கழி மாதம் மனதிற்கு மன நிறைவு தரும் மாதம். மழையும் முன்பனியும் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதுபோல் உள்ளத்திற்கு அமைதியையும் சாந்தியையும் தரவல்ல இனிய விரதங்களும் தரிசனங்களும் இம்மாதத்தில் நிறைந்துள்ளன. சைவசமயம் பல தாற்பரியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கார்த்திகை அபர பக்க பிரதமை தொடங்கி மார்கழி பூர்வ பக்க சஷ்டி வரையுள்ள காலத்தில் விநாயகரை விரதமிருந்து வழிபட்ட சைவ மக்கள் விரதம் முடிந்த கையுடன் பத்து நாட்கள் சைவத்தின் முழுமுதற் பொருளாம் சிவபெருமானைப் போற்றி துதித்து வழிபடும் நாளும் இந்த மார்கழியில் உள்ளது. அத்தோடு விஸ்ணுவுக்கு உகந்த வைகுண்ட ஏகாதசியும் இதே மாதத்தில் வருவதால் முழு இந்துக்களும் மனநிறைவு காணும் மாதமாக இது மிளிர்கின்றது.

இந்துக்கள் கால அடிப்படையில் மாதத்தைப் பிரித்து அதன் மூலம் தங்கள் கடமைகளைச் செய்கின்றனர். தை மாதம் தொடங்கி ஆடி வரையுள்ள காலத்தை உத்தராயண காலம் எனவும், ஆடி மாதத்தில் இருந்து மார்கழி மாதம் வரையுள்ள மாதங்கள் தட்ஷணாயன காலம் எனவும் வரையறை செய்துள்ளனர். இந்த தட்ஷணாயன காலம் தேவர்கள் பூவுலகில் சஞ்சரிக்கும் காலம் என்றும் கூறுவர். எனவே இக்காலத்தில் வரும் மார்கழி மாதம் தேவர்களுக்குரிய மாதம் என்றுகூட சொல்லலாம். ஒரு மனித வருடம் ஒரு தேவநாள். அத் தேவ நாளின் பகற் காலமே உத்தராயணகாலம். இராக்காலம் தட்ஷணாயன காலம். மனிதர்களுக்கு ஒரு மாதம் தேவர்களுக்கு ஐந்து நாளிகை. எனவே சாதாரண இராக் காலத்தில் கடைசி பகுதி எமக்கு விடியற் காலமாவது போல தேவர்களுக்கு மார்கழி மாதம் விடியற் காலமாகும். சிவன், விஷ்ணு, விநாயகர் போன்றவர்களை போற்றும் மார்கழியின் சிறப்பு மனம் விட்டு சொல்லும் அளவுக்கு மகிமை கொண்டது. மல்லிகையும் செண்பகமும் மணம் கமழும் இம்மாதத்தில் வரும் மார்கழித் திருவாதிரையும் ஆருத்திரா தரிசனமும் விஷ்ணு வழிபாடும் மகளிருக்கு பெரும் பாக்கியத்தை கொடுக்கவல்லன. மார்கழித் திருவாதிரை என்றால் அதில் சிவனைக் காணமுடியும் என்ற நம்பிக்கை சைவர்களிடம் நிறைந்து இருப்பதை இன்றும் காணலாம். ''திருவெம்பாவை'' என்றவுடன் சைவர்கள் மத்தியில் ஒரே சந்தோஷம் அதிகாலை நான்கு மணிக்கே நித்திரை விட்டெழுந்து குளித்து முழுகி தோய்த்துலர்ந்த ஆடை தரித்து மலர்ந்த முகத்துடனும் நிறைந்த மனத்துடனும் ஆண்டவன் சந்நிதியை நோக்கிச் செல்லும் பணி நமது பூர்வ ஜென்மத்தில் செய்த தவப்பணி என்றே கூறவேண்டும். சித்திரை திருவோணம், ஆனி உத்திரம், மார்கழி திருவாதிரை, மாசி சிவராத்திரி, ஆவணி மூலம், மாசி ஆவணி பூரட்டாதி மாதங்களில் வரும் பூர்வபட்ஷ சதுர்த்தி ஆகியவை நடராஜப் பெருமானது அபிஷேக தினங்களாகும்.

மார்கழியில் வரும் திருவாதிரை நோன்பும் ஆருத்திரா தரிசனமும் மிகவும் புண்ணிய தினங்கள். மார்கழி மாதத்தில் வரும் பூரணையும் திருவாதிரை நட்சத்திரமும் சேர்ந்து வரும் காலம்தான் திருவாதிரைத் திருநாளாகும். இதனை ஆருத்திரா திருநாள் என்றும் கூறுவர். அபிஷேகப் பிரியன் சிவன். சிவபெருமானுக்குரிய இந்த திருவாதிரை நட்சத்திரம் கூடும் மார்கழி மாதம் தேவர்களுக்குப் பிரியமான காலமானபடியால் தேவர்கள் சிவபெருமானைக் குறித்து கடும் தவம், பூசை, வழிபாடு ஆகியவற்றை என்றுமில்லாதவாறு மெய்யன்போடு ஆற்றுவார்கள். அவ்வேளையில் மானிடசரீரம் பெற்ற நாமும் சிவபெருமானை வழிபடுதல் மிகவும் முக்கியமானதாகும்.

மார்கழி மாத நீராடலைப் பாவைநோன்பு என்றும் கூறுவர். கன்னிப் பெண்கள் எதிர்கால வாழ்வின் சீரான அமைப்பை முன்வைத்து மார்கழி மாதம் முழுவதும் வைகறையில் துயில் எழுந்து காத்யாயணி என்னும் சக்தியை வழிபடுவார்கள். கோயில்களிலும் வீடுகளிலும் புதுத்தெம்புடன் வாழ்க்கை சீராக்கவும் கூட்டுவழிபாடு, கீர்த்தனங்கள் ஆகியவற்றைச் செய்வது வழக்கம். இதனால் தாம் விரும்பும் மணாளன் கிடைத்து இனியவாழ்வு மலர வழிவகுக்கும் என்ற நம்பிக்கையும் இவர்கள் மனதில் உண்டு.

மார்கழியில் வரும் திருவாதிரை நோன்பு நோற்பதன் மூலம் மகளிருக்கு மனக் கவலைகள் மறைந்து மனம் சாந்தியடையும். மார்கழி மாதத்திலே விடியற் காலந்தோறும் கன்னிப் பெண்கள் ஒன்று கூடி நீராடல் நோன்பு நிகழ்த்துவது வழக்கம். அவர்கள் அதிகாலையில் எழுந்து ஒருவரையொருவர் துயிலெழுப்பிச் சென்று நீராடுதல் இந் நோன்பின் கவர்ச்சிகரமான நிகழ்ச்சியாகும். நீராடிய பின் நீர்க்கரையில் ஈரமணலாற் பாவை செய்து அதனைப் பூசித்து வழிபட்டு அதனிடம் தம் குறைகளை வேண்டுவர். தெய்வ சக்தியாகிய பார்வதி தேவியையே அவர்கள் பாவை வடிவிற் பாவித்து வழிபடுவார்கள். அத்தெய்வ சக்தியிடம் அவர்கள் செய்யும் வேண்டுதல்களில் குறிப்பிடத்தக்கவை இரண்டு. ஒன்று நாட்டிலே மழை செழித்து வறுமை நீங்க வேண்டும் என்பதும் தாம் தம் மனதுக்கினிய கணவரை அடைந்து சுகமடைந்து இன்புறுதல் வேண்டும் என்பது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் இருந்தபொழுது இந்த நீராடல் நோன்பு நிகழ்ச்சியை அவதானித்தே திருவெம்பாவையை அருளினார். அந்த நோன்புக் காட்சி முழுவதையும் அவர் சிவக் காட்சியாகவும் அங்கு நிகழ்ந்த உரையாடல் முழுவதையும் சிவன் புகழ் போற்றும் வார்த்தைகளாகவும் வைத்தே இத்திருவெம்பாவையைப் பாடியருளினார். திருவெம்பாவையின் ஒன்பதாவது பாடலில்

பழமைக்கும் பழமையாகவும் புதுமைக்கும் புதுமையாகவும் உள்ள எம்பெருமானே, உமது அடிமைகள் நாங்கள் ஆதலால் இந்த நீராடல் நோன்பின் பேறாக நல்ல கணவரை நாங்கள் பெற்றுக்கொள்ள எங்களுடைய இந்தச் சங்கற்பம் இனிது நிறைவேற நீர் அருள் புரிதல் வேண்டும் என்றும், பதினாறாவது பாடலில் முகிலே நீ பராசக்தியின் உருவத்திலே தோன்றுவாயாக, பராசக்தி சிவனடியார்களுக்குப் பொழிகின்ற கருணை போலவே நீ மழையை பொழிவாயாக என அவ்வேண்டுதல்கள் அமைந்துள்ளன.

திருவெம்பாவையுடன் மகளிர் திருப்பள்ளி எழுச்சி ஓதித் தெருத் தெருவாகச் சென்று எழுப்புவதும் நடைமுறையில் உள்ளது. திருப்பள்ளி எழுச்சி என்பது இறைவனைத் துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது. திருப்பாட்டுக்களை உடையது. பள்ளியெழுச்சி, தொல்காப்பியம் முதலிய பண்டைய நூல்களில் துயிலெடை என வழங்கப்படுகிறது. துயிலெடையாவது தமது வீர யாக்கிரமத்தால் பகைவரை வென்று வாகை மாலை சூடி பாசறையில் எவ்வித கவலையுமின்றி படுத்துறங்கும் மன்னவனைச் சூதர் காலையிற் சென்று புகழ்ந்து பாடித்துயில் எழுப்புவதாகும். இத்துயிலெடை முறையினை அனுசரித்தே மணிவாசகப் பெருமான் திருப் பெருந்துறையில் உறையும் சிவபெருமானை விழித்து இத்திருப்பள்ளியெழுச்சியைப் பாடினார். திருப்பள்ளி யெழுச்சியானது ஆணவமலம் பரிபாகப்பட ஆன்மா அதனுடைய தடையினின்றும் நீங்குவதே என்றும் மல மறைப்பு இருட்டாகவும், மல நீக்கம் விடிவு ஆகவும் உருவாக்கப்பட்டன என்று சமய ஞானிகள் கூறுகின்றனர்.

திருவெம்பாவைக் காலத்தில் எல்லாச் சைவ ஆலயங்களிலும் திருவெம்பாவையும் திருப்பள்ளி யெழுச்சியும் மாத்திரம் ஓதப்படும். இதிலிருந்து இவ்விரண்டும் ஓதுதல் பன்னிரு திருமுறைகள் ஓதுவதற்குச் சமமாகும் என்பது ஆன்றோர் கருத்து. இப்பொன்னாளைச் சைவர்களாகிய நாம் நன்னாளாகக் கொண்டு எம்பெருமான் சிவபிரானின் புகழ் பாடியும் கேட்டும் ஆலயம் சென்று வழிபட்டும் வருவது நமது துயர்களும் கண்ணீரும் அகன்று நல்வாழ்வு பிறக்க வழிவகுக்கும்.

---

# மாமன்றத்தின் தீபாவளி வேண்டுகோள்

"நான் கஷ்டப்பட்டாலும் மற்றவர்கள் கஷ்டப்படக் கூடாது" என்ற விருப்பம் இருக்கவேண்டும். தீபாவளி இந்த மேலான தத்துவத்தை எங்கள் ஒவ்வொருவருக்கும் ஞாபகப்படுத்துகின்றது. இந்தப் புனித நாளை அனுட்டிக்கும் நோக்கத்தை எமது புராணங்கள் எடுத்தியம்புகின்றன.

தீபாவளித் திருநாளை அதன் சரியான அர்த்தத்தையும் சந்தர்ப்பத்தையும் உணர்ந்து அனுட்டிக்கும்படி சகல இந்துக்களையும் வேண்டுகின்றோம். தீபாவளியை அனுட்டிப்பதன் உண்மையான நோக்கம் எங்கள் இன்னலுறும் உடன்பிறப்புக்களின் விமோசனத்திற்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதாகும்.

மற்றவர்களுக்குத் தீங்கு இழைப்பதை நினைக்கக் கூடாது என்பது மட்டுமல்லாது, மற்றவர்களுக்கு உதவவும் வேண்டும்.

எமது நாட்டில் தற்போது நிலவுகின்ற துரதிர்ஸ்டவசமான நிலைமையில் ஆயிரக்கணக்கான எமது உடன்பிறப்புக்கள் தமது வீடு வாசல்களை இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்கின்றார்கள்.

இலங்கையிலுள்ள இந்து மன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புகளினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் தனது தலைமையகக் கட்டிடத்தைப் பூர்த்தி செய்தபின் வசதியற்ற பிள்ளைகளைப் பராமரிக்கும் விடுதி உட்பட வசதியற்ற பிள்ளைகளின் கல்வி வசதி, இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண உதவி போன்ற சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ளது.

உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக தற்போது "மனிதாபிமான நிதியம்" என்ற பெயரில் ஒரு நிதியத்தை ஆரம்பித்துள்ளோம்.

தீபாவளியின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் புரியாமல் கொண்டாட்டங்களிலும் டாம்பீகங்களிலும் பணத்தைச் செலவு செய்வதைத் தவிர்த்து அப்பணத்தை எம்மால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மனிதாபிமான நிதியத்தைச் சேரக்கூடியவகையில் "அகில இலங்கை இந்து மாமன்றம்" 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02" என்ற முகவரிக்கு அனுப்பி உதவுமாறு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் எமது உடன் பிறப்புக்களை வேண்டுகின்றோம். இவ்வாறு அனுப்பப்படும் பணம் உண்மையில் தேவைப்படுபவர்களைச் சென்றடைவதுடன் உங்கள் உதவி ஒரு மேலான பங்களிப்பாவதோடு, அவர்களின் வாழ்க்கையிலும் ஒளியூட்டுகிறவர்களாகின்றீர்கள்.

சகல இந்துக்களையும் கோவில்களுக்குச் சென்று உங்களுக்காக மட்டுமன்றி உங்கள் உடன்பிறப்புக்களுக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம். கோவில்களுக்குச் செல்ல இயலாதவர்கள் தயவுசெய்து வீடுகளிலிருந்து பிரார்த்தியுங்கள். உங்கள் பிரார்த்தனைகள் எங்கள் உடன் பிறப்புக்களுக்கு நிச்சயமாக விமோசனத்தை உண்டாக்கும்.

எல்லாம்வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் அருளாசி எம்மெல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை இந்து மாமன்ற
நிறைவேற்றுக் குழுவின் சார்பில்

**கந்தையா நீலகண்டன்**
*கௌரவ பொதுச் செயலாளர்*
*அகில இலங்கை இந்து மாமன்றம்*

# திருமந்திரத்தின் மகிமை

செல்வி ப. கனகசூரியம்
வின்சன் மகளிர் உயர்தர
தேசிய பாடசாலை, மட்டக்களப்பு.

திரு, அழகு, மேன்மை, செல்வம், சிறப்பு ஆகிய பொருளைத்தரும் மந்திரம் என்றால் உச்சரிப்பவரைக் காப்பது, நினைப்பவரைக் காப்பது. இத்திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர். திருமூலர் திருமந்திரம் 10ந் திருமுறையாகும். திருமூலர் பதினெண் சித்தர்களில் ஒருவர். இச்சித்தர் வரலாற்றைச் சதுரகிரி புராணம், பெரிய புராணம், திருத்துறையூர் புராணம் ஆகியன எடுத்துக் காட்டும்.

பெரியபுராணம் கூறுவதாவது திருமூலரின் இயற் பெயர் சுந்தரநாதர். இவர் திருநந்தி தேவருடைய அருள் பெற்று வட இந்தியத் தலங்களைத் தரித்துவிட்டு தென் பகுதியினை நோக்கி வரும் போது காவிரிக் கரையிலே பசுக்கன்றுகளை மேய்த்து வந்த இடையன் இறந்து கிடப்பதையும், பசுக்கன்றுகள் அழுவதையுங் கண்டு தன் உயிரை அவ்விடையன் உடலிலே புகுத்தி அப்பசுக்கன்றுகளை இல்லிடம் அனுப்பிவிட்டுப் பின்வந்து பார்த்த போது அவர் உடம்பைக் காணாது, நிட்டையில் இருந்து ஆண்டுக்கு ஒன்றாக மூவாயிரம் மந்திரங்களைப் பாடியதாகக் கூறும்.

ஆனால் சதுரகிரி புராணம், சுந்தரநாதர் சித்து வலிமையால், ஆகாயமார்க்கமாக வந்து கொண்டிருந்தபோது அரசன் இறக்க அவன் மனைவி, மக்கள் கலங்குவதைக் கண்டு சுந்தரநாதர் அவர் உடலில் புகுந்து – பின் சிறிது காலம் செல்ல நிட்டையில் அமர்ந்து – மூவாயிரம் திருமந்திரத்தை எழுதியதாகக் கூறுவர்.

திருமந்திரம் – திருஞானசம்பந்தர் காலத்துக்கு முன்பு என்பதைத் திருத்துறையூர் புராணம் கூறும். திருஞானசம்பந்தர் திருவாவடுதுறையில் கொடிமரத்தின் கீழ் நின்ற போது தமிழ் மணம் கமழ, கொடிமரத்தின் கீழ் தோண்டிப்பார்த்தபோது திருமந்திர ஏடுகள் அகப்பட்டதாகக் கூறும் திருத்துறையூர்ப் புராணம். எனவே திருஞானசம்பந்தர் காலத்துக்கு முன்பே திருமந்திரம் இயற்றப்பட்டதாகக் கருத இடமுண்டு.

இத்திருமந்திரம் ஒன்பது ஆகமக் கருத்துக்களை, சைவ சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறுபவையாக உள்ளன. காமிகம் யோகஜம் என்னும் இருபத்தெட்டு ஆகமங்களில் ஒன்பது ஆகமக் கருத்துக்களை திருமந்திரம் எடுத்துக்கூறும். சைவ சித்தாந்தம் என்றால் முடிந்த முடிபாகும். எனவே இத்திருமந்திரம் – தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டு பல கருத்துக்களை எடுத்துக் கூறும்.

இத்திருமந்திரம் சரியை, கிரியை, மார்க்கங்கள், சக்தியில் நிறம், உருவம், பல வித மந்திரங்கள் பிரணவம், பஞ்சாட்சர மந்திர மகிமை, உச்சரிப்பு – ஆகியவை பற்றிக் கூறும்.

மேலும் பல்வேறு நோய் நீக்கத்திற்கான மந்திரங்களையும் இத்திருமந்திரம் கொண்டுள்ளது. குடல் நோய், வயிற்று நோய், பேதி, வாதம் பித்தம் போன்ற உடல் சம்பந்தமான நோய் நீக்க மந்திரங்களையும் இத்திருமந்திரம் கொண்டுள்ளது. மேலும் அதர்வ வேத மந்திரங்களில் பல வற்றை இத்திருமந்திரம் கொண்டுள்ளது. பிரிந்தவர்களை சேர்த்தல், சேர்த்தவர்களைப் பிரித்தல், சக்தி வாலயம் ஆகியவை சார்ந்த மந்திரங்களையும் திருமந்திரம் கொண்டுள்ளது.

மேலும் காயத்திரி மந்திரம் எல்லோரும் உச்சரித்தல் கூடாது. சரிவர உச்சரிக்காவிடில் தீயபலனைத் தரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு எக்காலத்திற்கும் உதவக்கூடிய மந்திரங்களையும் இத்திருமந்திரம் கொண்டுள்ளது.

'அன்பே சிவம்' என்று கூறுவதுடன் இல் வாழ்க்கையில் இருந்து கொண்டே தர்மம் இயற்றலாம் என்றும் கூறும் எல்லோருக்கும் பசுவுக்கு ஒரு பிடி புல் கொடுத்தல் இயலும். எல்லோருக்கும் இயலும் தான் உண்ணும் உணவில் ஒரு கவளம் கொடுத்தல். அதுபோல் எல்லோரிடமும் இனிய சொற் பேசல் எளிது. எனவே திருமந்திரம் எளிய தர்ம வாழ்க்கையை வலியுறுத்துகிறது.

*"மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்*
*மூலன் உரை செய்த முன்னூறு மந்திரம்*
*மூலன் உரைசெய்த முப்பது வாசகம்"*

என்று திருமந்திர மாலை கூறும். இவ்வரிய நூலில் உள்ள திருமந்திரத்தை எல்லோரும் கற்றுப் பயன் பெறல் சாலச் சிறந்தது.

**மாமன்றச் செய்தி**

## சைவசமய தீட்சையும் கருத்தரங்கும்

அகில இலங்கை இந்து மாமன்றம், மஸ்கெலியா இந்து மாமன்றத்துடன் இணைந்து கடந்த செப்டம்பர் 2ம் திகதியன்று சைவசமய தீட்சையையும். சமயக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.

மஸ்கெலியா ஸ்ரீசண்முகநாத சுவாமி தேவஸ்தான மண்டபத்தில் நடந்தேறிய தீட்சை வழங்கும் கிரியைகளை சிவஸ்ரீ இ. பிரேமகாந்த குருக்கள் (நோர்வூட்) அவர்களும், சிவஸ்ரீ சிவசங்கரக் குருக்கள் அவர்களும் நடத்தியிருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, மஸ்கெலியா சென். ஜோசப் தமிழ் மகா வித்தியாயத்தில் சமயக் கருத்தரங்கு நடைபெற்றது.

மேற்படி வைபவங்களில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜ், அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன். மற்றும் திரு. க. இராஜபுவனீஸ்வரன், திரு. மு. கந்தசாமி, திரு. பெ. கருப்பையா, மஸ்கெலியா இந்து மாமன்றத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்களுடன், மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாதசுவாமி தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் திரு. து. இராஜ், தேவஸ்தான செயலாளர் திரு. க. கிருஷ்ணமூர்த்தி, மஸ்கெலியா சென் ஜோசப் தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு. சச்சிதானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# பேரின்பமெது

கைநிறை மனநிறை ஞானக் கருவூலங்கள்
பை நிறை பணமென்றால் பலரும் பங்கிடலாம்
கள்ளத்தில் வாழும் மக்களே கணமது நினைமின்
உள்ளத்தின் உறைநிலை எண்ணங்களின் படிநிலை

கோயில் குள மெல்லாம் சுற்றியும் வந்தீர்
மாயும் உடலதனை மெய்யென்றிருந்தீர்
காயும் ஒருநாள் கனியாகும் காண்பீர்
தேயும் காலமதில் விரைந்து செயல்படவாரீர்

அன்று அன்மை மடி உந்தன் முதற் பள்ளி
இன்று நீயதனை மறந்ததால் சூழ்ந்ததே வெவ்வினை
என்றும் நீயுர சற்றும் திரும்பிப்பார்
மன்றுள் ஆடும் மகேசனை பணிந்திடு

அன்னை பிதா தெய்வங்கள் என்றால்
முன்னை வினையும் பாறிடும் காண்பீர்
பின்னையேன் உன்புத்தி பேயாட்டமாடுது
என்னை எனக்களித்தான் எங்கள் குருஎன்றிடு

கோலவிழி மாதரும் கோகுலத்துக்கோபியரா
காலவழி கயவர் தொடர்பால் காமுகராகலாமா
மேல விழி பாச்சி நீயும் உன் மத்தனாகாதே

சந்தைக் கூட்டம் சகலரும் சதமில்லைப் பாரீர்
முத்தை வினை மாழ மோனத்தவமியற்று
எந்தையீசன் பாதம் என்றும் இன்பமாகும்

ஒன்பது வாசல் வைத்த மாயவீடு இவ்வுடல்
இன்பது உண்டென்றே குடிகொண்ட உயிர்
துன்பது கண்டல்லோ வெளியேறத்துடிக்குது

எத்தனை ஆசைகள் நிராசைகள் மூட்டைகள்
அத்தனையும் சுமக்கும் சுமைதாங்கி உடலங்கள்
இத்தனையும் அறிந்தும் ஏன்இந்தமோகம்

மூச்சடக்கி பேச்சடக்கி மூலனைத்தேடு
கீச்சு மாச்சு தம்பலமாம் உலகம்
தாச்சியிலிட்ட வறுத்தவிதை முழைக்காது

வித்துநீ வியனுலகம் போற்ற வித்தை பயின்றிடு
கத்தும் ஆநிரைகளும் கணநாதனைஅழைக்குது
சித்துக்கள் தடைபோக்கி சக்திமயமாகிடு

சொத்துச் சுகமனைத்தும் நிலையற்றது
மத்துக்கடைமோரில் வெண்ணெய் திரளுது
முத்துச் சுடரொளியை முச்சந்தியில் கண்டிடு

நாவடக்கி ஐம் பொறி வழியடைத்திடு
மூச்சடக்கி மூக்குநுனி நோக்கிடு
மூண்ட மூலக்கனலை காலால் ஏற்றிடு
தாண்டக வேந்தனும் கால்தூக்கி ஆடுகிறான்

தேங்காப்பால் வேண்டின் மலியும் பிறவிகள்
மாங்காப்பால் உண்டு மலைமேல் மகிழ்வீர்
பாங்காகச் சொன்னார் சித்தர் என்றுஅறிவீர்

உடுவில் சக்தி தியாகராசா
பம்பலப்பிட்டி

மாமன்ற வெளியீடு
"இந்து மக்களுக்கு ஒரு கையேடு"
இந்து மக்களுக்குத் தேவையான பயனுள்ள பல விடயங்களை
உள்ளடக்கிய கைநூல்
விலை ரூபா 140/=
(தபாற் செலவு ரூபா 10. 00)
விபரங்களுக்கு:
அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2

**சிறுவர் ஒளி**

*இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக்கதை ஒன்றினை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதையைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.*

# அரைகுறை அறிவு ஆபத்தே!

கல்வியறிவும் தூய்மையும் கொண்ட ஒரு முனிவர் காட்டில் வசித்து வந்தார். அவரிடம் கெட்டிக்கார மாணவர்கள் பலர் கல்வி பயின்று வந்தனர். முனிவர் ஒரு தந்தையைப் போல அவர்களிடம் பாசத்தைப் பொழிந்து அரிய விஷயங்களை எல்லாம் போதித்து வந்தார்.

அடிக்கடி தன் மாணவர்களைப் பார்த்து, 'குழந்தைகளே! எல்லா இடங்களிலும், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இறைவன் வாழ்கின்றான். அவனே இந்த உலகமாக ஆகியுள்ளான். நீங்களும் நானும் இந்த உலகில் காணப்படும் எல்லாப் பொருட்களும் ஒரே இறைவனின் பல்வேறு தோற்றங்கள் தாம். இதனால் எல்லா ஜீவராசிகளிடத்தும் நீங்கள் அன்பு செலுத்த வேண்டும். பிறரை இகழ்வதோ, துன்புறுத்துவதோ இறைவனுக்குச் செய்தது போலவேயாகும். மேலும் பிறருக்குத் தீங்கு செய்யும்போது, உங்களுக்கு நீங்களே தீமை செய்து கொள்ளுகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த உலகில் சந்தோஷமாக இருக்க விரும்பினால் எல்லாப் பொருள்களிலும் இறைவன் வாழ்கிறான் என்று உணர வேண்டும்' என்றெல்லாம் உபதேசிப்பார் அந்த முனிவர்.

உன்னதமான இந்த அறிவுரையைக் கேட்டுப் பூரித்துப் போனார்கள் மாணவர்கள். தங்கள் வேலைகளில் மூழ்கியிருக்கும் போதுகூட அவர்களின் மனம் இந்த அறிவுரைகளையே அசைபோட்டுக் கொண்டிருந்தது.

கோவிந்தன் படிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவன். ஆசிரியர் கூறிய ஒவ்வொரு சொல்லையும் வேதவாக்காகக் கொண்டு அதன்படியே நடக்க விரும்பினான். இனிமேல் மனிதர்களை மட்டுமன்றி விலங்குகள், செடிகொடிகள், பாறைகள் எல்லாவற்றையும் கடவுளாக நினைக்கப் போவதாக உறுதி கொண்டான். 'இது எப்பேர்ப்பட்ட உயர்ந்த நோக்கம்! எல்லாமே கடவுளின் தோற்றமாக இருக்கும் போது பூசல்களும் துன்பங்களும் எப்படித் தோன்ற முடியும்? இப்படி இறைவனைக் காண்பதால் நான் பெறும் ஆனந்தம் முழுமையாகத்தான் இருக்க வேண்டும்' என்று சிந்தித்து வந்தான்.

ஒருமுறை மாதாந்தரச் சாமான்கள் வாங்கி வருவதற்காக மாணவர்களை ஆசிரியர் கிராமத்திற்கு அனுப்பினார். கோவிந்தனும் சென்றான். மாணவர்கள் சாமான்களோடு பெரிய தெரு வழியாகத் திரும்பி வந்து கொண்டிருக்குபோது தெரு முனையில் பெரிய இரைச்சல் கேட்டது. மக்கள் பயந்துபோய் இங்கு மங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். அப்போது 'யானைக்கு மதம் பிடித்து விட்டது. வழியில் நிற்காதீர்கள் தெருவைவிட்டு ஓடிவிடுங்கள்' என்று உரக்க எச்சரிக்கும் குரல் கேட்டது.

மாணவர்களை நோக்கியபடி மதம் பிடித்த யானை வந்து கொண்டிருந்தது. யானையின் மீது அமர்ந்து கொண்டிருந்த யானைப் பாகன்தான் இப்படிப் பெருங்குரலில் எச்சரித்துக் கொண்டிருந்தான். கோவிந்தனைத் தவிர மற்ற மாணவர்கள் எல்லாம் ஓடி பக்கத்து வீடுகளில் புகுந்து கொண்டனர். கோவிந்தன் நடுத்தெருவில் நின்று கொண்டு, 'இந்த உலகத்திலுள்ள எல்லாப் பொருட்களும் இறைவனின் பல்வேறு தோற்றங்கள் என்றல்லவா நம் ஆசிரியர் கூறியிருக்கிறார்! அதனால் நானும் தெய்வம். இந்த யானையும் தெய்வம். இந்தக் கடவுள் அந்தக் கடவுளைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்?' என்று எண்ணியவாறு அசையாது நின்றான்.

'டையா! தள்ளிப் போ. யானைக்கு வெறி பிடித்திருக்கிறது' என்று யானைப் பாகன் கத்தினான். கோவிந்தன் நகர்வதாக இல்லை.

யானை கோவிந்தனைப் பார்த்தது. தன் தும்பிக்கையால் அவனை வளைத்துப் பிடித்து தெருவின் மறு ஒருத்திற்குத் தூக்கி எறிந்தது. பிறகு மேற்கொண்டு சென்றது. தெரு ஓரத்தில் இரத்தக் காயங்களோடு கிடந்தான் கோவிந்தன்.

மற்ற மாணவர்கள் வேகமாக ஓடிச் சென்று நடந்ததை ஆசிரியரிடம் கூறி அவரை அழைத்து வந்தனர். ஆசிரியர் கோவிந்தனைத் தோள்மேல் கிடத்தி ஆசிரமத்திற்குத் தூக்கிச் சென்று, காயங்களுக்கு மருந்து போட்டுக் கட்டினார்.

நாலைந்து நாட்களில் அவன் கொஞ்சம் தேறினான். அவனைப் பார்த்து, 'அன்று ஏன் ஒரு முட்டாளைப் போல நடந்து கொண்டாய்?" என்று ஆசிரியர் கேட்டபோது கோவிந்தன் 'ஐயா! நீங்கள்தானே எல்லாம் கடவுள் என்று சொன்னீர்கள்? அதன்படி யானையும் கடவுள் தானே? கடவுளிடம் ஏன் அஞ்ச வேண்டும்?" என்று பதில் சொன்னான்.

ஆசிரியர் பெரிதாகச் சிரித்துவிட்டு, 'உன்னைப் போல ஒரு வடிகட்டின முட்டாளை நான் பார்த்ததில்லை. யானையும் கடவுள்தான். அதில் சந்தேகமில்லை. அந்த யானைப் பாகனும் கடவுள்தானே? பாகன் என்னும் கடவுள் உன்னைத் தப்பி ஓடும்படி கூறவில்லையா? பாகன் என்ற கடவுளின் பேச்சை நீ ஏன் கேட்டிருக்கக் கூடாது? கேட்டிருந்தால் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்காது' என்றார்.

இப்போது கோவிந்தனுக்கு எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காணல் என்ற தத்துவத்தின் உண்மைப் பொருள் என்ன என்பது நன்கு விளங்கிற்று. பகுத்தறிவைப் பயன்படுத்தி, பொருள்களின் உண்மை இயல்பைக் காண வேண்டுமே தவிர ஆன்மீக நாட்டமுடையவன் முட்டாளாக நடந்து கொள்ளக் கூடாது என்று அவன் உணர்ந்து கொண்டான்.

வெளித் தோற்றங்களால் கவரப்படாது, பொருள்களின் உண்மை நிலையைக் காண வேண்டும். எல்லாப் பொருள்களிலும் இறைவன் வாழ்கிறான் என்பது உண்மைதான். இதில் எந்த வேறுபாடும் இல்லை. வேறுபாடுகள் பொருள்களின் புறத் தோற்றங்களில்தான் இருக்கிறது. பொருள்களின் உண்மைப் பொருளைக் காண்பது அறிவு.

*(நன்றி : ஸ்ரீராம கிருஷ்ணரின் நீதிக் கதைகள், மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வெளியீடு)*

மாணவர் ஒளி

*இது மாணவர்களுக்கான பக்கம். இதில் சமய வரலாறு மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கும். இது போன்ற விஷயங்களை மாணவர்களும் எழுதியனுப்பலாம். இது தொடர்பான கருத்துக்களையும் மாணவர்களிடமிருந்து எதிர் பார்க்கிறோம்.*

# பெரிய புராணக் கதைகள்

## கண்ணப்ப நாயனார்

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்னும் பழம்பதியில் நாகன் என்னும் வேடர் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் குற்றமே குணமாக நினைப்பவன்; கொலைத் தொழிலே தலைத் தொழிலாகக் கொண்டனன். அவன் மனைவி தத்தை என்பவள். அவர்களுக்கு நெடுநாட்களாக மகப்பேறு இல்லாமல் முருகன் திருவருளால் திண்ணன் என்னும் ஒரு மைந்தன் பிறந்தான்.

திண்ணன் வளர்பிறைபோல் வளர்ந்து அறிவும் ஆற்றலும் நிறைந்து வில் தொழிலில் வல்லவனாக விளங்கினான். ஒரு நாள் தன்நண்பர்கள் காடன், நாணன் ஆகியவர்களுடன் கூடி முதன் முதலாக வேட்டைக்குப் புறப்பட்டான்; அவர்களுடன் ஒரு பன்றியைத் தொடர்ந்து சென்று கொன்றான்; அதனால் களைப்படைந்து தாகத்திற்கு நீர் கேட்டான். அந்த நண்பர்கள் அருகில் பொன்முகிலி ஆற்றுக்கு அவனை அழைத்துச் சென்றனர்; பன்றியையும் ஆற்றங்கரைக்கு எடுத்துச் சென்றனர்.

திண்ணனார் அருகிலிருந்த திருக்காளத்தி மலையைக் கண்டு காடனைப் பார்த்து, "நீ பன்றியைப் பதம் செய்வாயா?" என்று கூறித் தாமும் நாணனும் மலைமேல் ஏறிச் சென்றனர். காளத்தி மலையில் கோயில் கொண்டுள்ள குடுமித்தேவர் என்னும் திருக்காளத்தியப்பரைத் திண்ணனார் கண்டு அனலிலிட்ட மெழுகைப்போல் மனமுருகினார். பின்பு சேயைவிட்டுப் பிரியாத தாயைப் போல இறைவனுடன் கொஞ்சிக் குலாவினார். தம் உடன் வந்த நாணனை நோக்கி, "இந்தத் தேவருக்கு இந்தப் பச்சிலையும் மலரும் சாத்தியவர் யாரோ?" என்று கேட்டார். நாணன் திண்ணனாரை நோக்கி, "நானும் உன் தந்தையாரும் சில நாட்களுக்குமுன் இம்மலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஓர் அந்தணர் இவரை நீராட்டி மலர் சூட்டி உணவூட்டுவதைக் கண்டேன்' என்றான்.

திண்ணனார் அதுகேட்டு "நம் குடுமித்தேவருக்கு இவை பெரிதும் விருப்பமானவைபோலும்! நானும் அவ்வாறே செய்வேன்" என்று எண்ணியவாறு காடன் இருக்குமிடத்தை அடைந்தார். அங்கு அவன் பதமாகச் செய்து வைத்திருந்த பன்றி இறைச்சியைச் சுவைத்துப் பார்த்து, உருசியானவைகளைத் தேக்கிலைகளாலான ஒரு தொன்னையில் எடுத்துக் கொண்டு, பொன் முகிலி ஆற்றின் நீரை வாயில்முகந்து, மலர்களைப் பறித்துத் தலையில் வைத்துக் கொண்டு குடுமித்தேவர் மலைக்குத் திரும்பிச் சென்றார்.

திண்ணனாரின் செயல்களை அறிந்த நண்பர்கள் அவரை ஊருக்குத் திரும்புமாறு வலிந்து அழைத்தார்கள். திண்ணனார் அவர்களுடைய அழைப்புக்குச் செவிசாய்க்கவில்லை. அவர்கள், "இவன் அதிக மயக்கம்கொண்டுள்ளான்" என்று எண்ணித் தந்தை தாயாருக்குத் தெரிவிப்பதற்காகச் சென்றனர். திண்ணனார், அவர்கள் சென்றதையும் அறியாமல் எம்பெருமானுக்கு அமுதூட்டச் சென்றார்.

திண்ணனார் குடுமித்தேவரைத் திருமஞ்சனமாட்டக் கருதிப் போன்முகிலி ஆற்றிலிருந்து வாயில் கொண்டுவந்த நீரைத் தம் அன்பினை உமிழ்பவர்போல அத்தேவரின் திருமுடிமேல் கொட்டினார்; மலர்களைச் சாத்தினார்; தொன்னையில் கொண்டு வந்த இறைச்சிகளைப் படைத்து அவற்றைத் திருவமுது செய்யுமாறு இறைவனுக்குஊட்டினார். பின்னர் மேலும் எம்பெருமானுக்கு இறைச்சி வேண்டுமென்று எண்ணினார். அதற்குள் சூரியன் மறைந்தான்; காரிருள் வந்தது. இரவு முழுவதும் தேவருக்கு வனவிலங்குகளால் துன்பம் நேருமோ'என அஞ்சிக் கண்விழித்துக் காவல் புரிந்தார். பொழுது விடிந்தபின்னரே இறைச்சி தேடவெளிச் சென்றார்.

இது நிற்க, திருக்காளத்தி நாதருக்கு நாடோறும் வழிபாடு செய்யும் சிவகோசரியார் இறைவன் திருமுன்னே இறைச்சிகளும் எலும்புத் துண்டுகளும் சிந்திக் கிடப்பதைக் கண்டு மனம் வருந்தி அவற்றை அப்புறப்படுத்தித் தூய்மை செய்தார். தாம் வழக்கப் படி செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்துவிட்டுத் தம் இருப்பிடத்துக்குத் திரும்பினார். மறுநாளும் முன்போலவே இருப்பதைக் கண்டு மனம் நொந்தார். இறைவனிடம் முறையிட்டுப் புலம்பினார். அன்றிரவு சிவபெருமான் சிவகோசரியாரின் கனவில் தோன்றி, "அன்பனே, நீ அவனை வேடன், என்று நினைக்க வேண்டாம்.

*"அவனுடைய வடிவெல்லாம்*
*நம்பக்கல் அன்பென்றும்*
*அவனுடைய அறிவெல்லாம்*
*நமை அறியும் அறிவென்றும்*
*அவனுடைய செயலெல்லாம்*
*நமக்கினிய வாம்என்றும்*
*அவனுடைய நிலைஇதுவா றறிநீ'*
*என்றருள் செய்வார்."*

மேலும் அவர் சிவகோசரியாரை நோக்கி, "அவன் நம்மிடம் செலுத்தும் பேரன்பை நாளைக்குக் காட்டுவோம். நம்மிடத்திற்கு வந்து நீ மறைந்திருந்தது காணலாம்" என்று கூறினார்.

வேதியர் விழித்தெழுந்தார். மனம் வருந்தினார். மறுநாள் தம் வழிபாடு முடிந்தபின் இறைவன் கட்டளைப்படியே மறைவில் நின்று பார்த்திருந்தார். திண்ணனார் சிவபெருமானுக்கு வேண்டிய இறைச்சி முதலியவைகளைத் திரட்டிக்கொண்டு வழிபாட்டுக்குத் திரும்பினார். சிவபெருமான் அவரது பேரன்பைச் சிவகோசரி யாருக்கு அறிவிக்க நினைத்துத் தம் வலக்கண்ணில் இரத்தம் சிந்துமாறு செய்தனர், அது கண்ட திண்ணனார் பதைபதைத்தார்; மதி மயங்கினார்; கீழே விழுந்தார்; ஒன்றும் தோன்றாமல் பெரு மூச்சு விட்டார்; 'எம்பெருமானுக்கு இத்தகைய துன்பத்தைச் செய்தவர்கள் யார்?" என எழுந்தார்; வில்லில் அம்பைப் பூட்டி நெடுந்தூரம் அலைந்து திரிந்து மீண்டும் இறைவனிடம் வந்தார்; பல பச்சிலைகளைக் கண்ணில் பிழிந்தார். அப்போது இரத்தம் நிற்கவில்லை. திண்ணனார், 'இனி என்ன செய்வது?" என்று திகைத்து,

"ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்ப்பது"

என்று எண்ணித் தம் வலக்கண்ணை அம்பினால் தோண்டி எடுத்துக் காளத்தி நாதரின் கண்ணில் அப்பினார்; இரத்தம் நின்றது. அது கண்டு அவர் இன்பக் கடலில் திளைத்தார்; தோள்களைத் தட்டிக் கொண்டு ஆடினார்; பாடினார்;

*"நின்றசெங் குருதி கண்டார்;*
*நிலத்தினின் றேறப் பாய்ந்தார்;*
*குன்றென வளர்ந்த தோள்கள்*
*கொட்டினார்; கூத்து மாடி*
*நன்றுநான் செய்த இந்த*
*'மதி' என நகையுந் தோன்ற*
*ஒன்றிய களிப்பி னாலே*
*உன்மத்தர் போல மிக்கார்."*

(குருதி – இரத்தம். மதி – அறிவுடைய செயல். உன்மத்தர் பித்தர். குன்று என – மலைபோன்ற.)

திண்ணாரின் மகிழ்ச்சியைச் சேக்கிழார் இவ்வாறு விளக்கியுள்ளார்.

இந்நிலையில் சிவபெருமான் மீண்டும் தம் இடக்கண்ணில் இரத்தம் சோரவிட்டார். திண்ணனார் சிறிதும் மனந்தளராதவராய், "தக்க மருந்து என்பால் உளது" என்று மகிழ்சியுடன் இரத்தம் ஒழுகும் கண் தமக்குத் தெரியுமாறு தமது செருப்புக் காலைக் கடவுளினதும் திருக்கண்ணின் அருகில் ஊன்றிக் கொண்டு, ஓர் அம்பினால் தமது இடக்கண்ணைத் தோண்ட முயன்றார். உடனே காளத்தி நாதர் தம் திருக்கையை வெளியே நீட்டி, அன்பினால் தன் இடக்கண்ணைத் தோண்டுகின்ற திண்ணனாரைத் தடுத்து, "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல், நில்லு கண்ணப்ப!" என்று திருவாய் மலர்ந்து, திண்ணனாரின் கையைத் தடுத்து நிறுத்தினார். பின்னர் அவரைத் தம் வலப்புறம் இருக்கும் பேற்றை ஈசனார் அளித்தார். திண்ணனார் ஆறு நாட்களில் பிறவாப் பெரும் பேற்றை அடைந்தார். அன்று முதல் திண்ணனாருக்குக் கண்ணப்பர் என்ற பெயரே வழங்குவதாயிற்று.

# மாமன்ற நிறைவேற்றுக் குழு

## 2001 / 2002

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. வி. கயிலாசபிள்ளை |
| பிரதி தலைவர் | : | திரு. மா. தவயோகராஜா |
| துணைத் தலைவர்கள் | : | திரு. க. அருணாசலம் |
| | | திரு. சி. தனபாலா |
| | | திரு. ஏ. கருப்பண்ணாபிள்ளை |
| | | திரு. க. இராஜபுவனீஸ்வரன் |
| | | திரு. ந. பேரின்பநாயகம் |
| | | திரு. மு. பவளகாந்தன் |
| | | திரு. எஸ். பி. சாமி |
| | | திரு. எஸ். ரி. எஸ். அருளானந்தன் |
| | | திரு. த. மனோகரன் |
| பொதுச் செயலாளர் | : | திரு. கந்தையா நீலகண்டன் |
| பிரதிச் செயலாளர் | : | திரு. ந. மன்மதராஜன் |
| உப செயலாளர்கள் | : | திரு. க. பாலசுப்பிரமணியம் |
| | | திரு. மா. கணபதிப்பிள்ளை |

| | |
|---|---|
| பொருளாளர் | திரு. வே. கந்தசாமி |
| உப பொருளாளர் | திரு. மு. சொக்கலிங்கம் |
| குழுத் தலைவர்களும் செயலாளர்களும் | திரு. மு. கந்தசாமி |
| | திரு. இ. நமசிவாயம் |
| | திரு. வி. நடராசா |
| | புலவர் அ. திருநாவுக்கரசு |
| | திரு. கு. மகாலிங்கம் |
| | திரு. க. விவேகானந்தன் |
| | திருமதி. அ. கயிலாசபிள்ளை |
| | திருமதி வானதி இரவீந்திரன் |
| | திரு. ப. நகுலேந்திரன் |

# திருவிளையாடற் புராணக் கதைகள்

## மேருவைச் செண்டாலடித்த படலம்

உக்கிர பாண்டியர் அகத்தியர் ஓதிய சோம வார விரதத்தைத் தவறாமல் அனுஷ்டித்து வந்தார். அவர் மனைவியாகிய காந்திமதி வீரபாண்டியன் என்னும் அருமை மைந்தனைப் பெற்றாள். அக்காலத்தே பாண்டிய நாட்டில் கோள்நிலை மாறுபாட்டால் மீண்டும் பஞ்சம் ஏற்பட்டது. பாண்டியர் மிகவும் வருந்தி இறைவனை வேண்டினர்.

சோமசுந்தரப் பெருமான் பாண்டியர் கனவில் தோன்றி, “அன்பனே! இப்போது மழை பெய்வது அரிது. மகாமேருமலையின் பக்கத்தில் ஒரு பெரிய குடிசையில் அளவற்ற செல்வம் இருக்கின்றது. அம்மலையைச் செண்டாலடித்துச் செருக்கடக்கிச் செல்வத்தைக் கொண்டு வருக” என்று அருளினார்.

உக்கிர பாண்டியர் விழித்தெழுந்தார். நால்வகைச் சேனைகளும் புடைசூழ, பலப்பல காவதங்களையும் கடந்து மேருமலையை அடைந்து தென் திசையில் நின்று அதனை அழைத்தார். மேருமலை வருவதற்குக் காலம் தாழ்ந்ததால் அதன் செருக்கு அடங்குமாறு அதன் சிகரத்தில் செண்டினால் அடித்தார். உடனே மேரு மலை பொற்பந்துபோல் துடித்தது; அதில் உள்ள தேவாலயங்கள் வெடித்தன.

எட்டுப் புயங்களும், நான்கு தலைகளும் ஒரு வெள்ளைக் குடையையும் கொண்ட உருவத்துடன் மேருமலை உக்கிர பாண்டியரை வந்து வணங்கியது. பின்பு அவரைப் பார்த்து, ‘அரசே! நான் நாடோறும் இவ்வுருவத்துடன் மீனாட்சியம்மையையும் சோமசுந்தரரையும் வழிபடுவது வழக்கம். ஒரு பெண்ணின் மயலால் இன்று வழிபாட்டுக்குக் காலதாமதமாயிற்று. இப்பாவத்தால் அடியும் பட்டேன். என் பாவத்தைத் தீர்த்த தங்களுக்கு என்ன கைம்மாறு செய்வேன்?’ என்றான்.

உக்கிர பாண்டியர் பொன் விரும்பி வந்ததைக் குறிப்பிட்டார். ஒரு மாமர நிழலில் இருந்த பொன்னறையைக் காட்டி வேண்டுமளவு எடுத்துக்கொள்ளுமாறு மேருமலை கூறியது. உக்கிர பாண்டியர் பொன்னறையைத் திறந்து தன் ஆசையளவு பொன்னை எடுத்துக் கொண்டு மதுரைக்குத் திரும்பினார். வழியில் மத்தியம், விராடம், மாளவம், தெலுங்கம் என்னும் நாட்டரசர்கள் அவரை எதிர்கொண்டு அழைத்துப் பலவாறு உபசரித்தனர்.

அரசர் தாம் கொண்டு சென்ற பொன்னால் குடிமக்களைக் காப்பாற்றிக் குறையொன்றுமின்றி வாழுமாறு செய்தார். பின்னர் கோள்நிலை சரியாகிப் பாண்டியநாடு முழுவதும் மழை பெய்தது; பற்பல வளங்களும் பெருகித் தழைத்தன. உக்கிர பாண்டியர் தம் மைந்தனாகிய வீரபாண்டியனுக்கு முடிசூட்டிச் சிவபெருமான் திருவடிநிழலை அடைந்தார்.

## வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்த படலம்

கிருத யுகத்தில் சிவபெருமான் திருவாக்கிலிருந்து பிரணவம் தோன்றிற்று. அப்பிரணவத்தினின்றும் வேதங்கள் தோன்றின. நைமிசாரணியத்தில் வசித்த கண்ணுவர், கக்கர் முதலியோர் வேதங்களின் பொருளுணராமல் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தனர். அரபத்தர் என்னும் முனிவர் அவர்களை நோக்கி, ‘மதுரையில் உள்ள சோமசுந்தரக் கடவுளின் விமானத்தின் தெற்கில் கோயில் கொண்டிருக்கும் தட்சிணாமூர்த்தியே வேதப் பொருளை உணர்த்தவல்லவர். அவரை அடுத்தல் நல்லது’ என்றார்.

அதுகேட்டுக் கண்ணுவர் முதலிய முனிவர்கள் அரபத்தரோடு சென்று தட்சிணாமூர்த்தியை வழிபட்டனர். தட்சிணாமூர்த்தி பதினாறு வயதுடைய அந்தண குருவின் உருவம் தாங்கி வந்து முனிவர்களின் குறையைப் போக்கினார்; பின்பு வேதங்களின் பொருளை மிக விளக்கமாகக் கூறியருளினார். அவர் மதுரையில் உள்ள சிவலிங்கப் பெருமான் முன்னர் அவர்களை அழைத்துச் சென்று பரப் பிரம்மமாகிய இம்மூர்த்தியின் திருவுருவமே வேதமாகும். வேதத்தின் பொருள் இங்கு எழுந்தருளிய சிவலிங்கமேயாகும். இச்சிவலிங்கம் வேறு; வேதம் வேறு என்று எண்ணுதல் வேண்டா. ஆதலால் வேதமும் ஒன்றே; வேதத்தின் பொருளும் ஒன்றே என்று அறியுங்கள்’ என்றார். அதன்பின் அவர் பிரணவத் தோற்றம், வேதாகமங்களின் தோற்றம், ஞான காண்டம், கரும காண்டம், வைதிகம், வைதிக சைவம் என்னுமிவற்றின் இயல்புகளைத் தெளிவாகக் கூறினார். பின்னர் அவர் முனிவர்களின் முதுகுகளில் தம் திருக்கரங்களால் தடவிச் சிவலிங்கத்துள் மறைந்தார்.

## மாணிக்கம் விற்ற படலம்

வீரபாண்டியனின் காமக்கிழத்தியர்களிடத்தே பல பொல்லாத மக்கள் தோன்றினர். அவன்குல மனைவியிடத்தே நெடுங்காலங் கழித்து ஒரு நன்மைந்தன் தோன்றினான். ஒரு சமயம் வீரபாண்டியன் வேட்டையாடச் சென்று புலியால் தாக்கப்பட்டு இறந்தான். அதுதான் தகுந்த சமயம் என்று காமக்கிழத்தியரின் மக்கள் பலவகைச் செல்வங்களையும் கவர்ந்து சென்று ஒளித்து விட்டனர்.

அமைச்சர் வீரபாண்டியனின் மைந்தனுக்கு முடி செய்வதற்கு வேண்டிய விலையுயர்ந்த மாணிக்கங்கள் இல்லையே என்று வருத்திச் சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டார்கள். அரசன் மகனைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் செல்லும்போது சோமசுந்தரக் கடவுள் ஒரு வைசிய வேடங்கொண்டு தம்மிடம் விலையுயர்ந்த நவரத்தினங்கள் இருப்பதாகக் கூறினார். அவர் ஒரு கரிய துணியை விரித்து, அதன் நடுவில் மாணிக்க

ரத்தினத்தையும், கிழக்கு முதலிய எட்டுத் திசைகளிலும் முத்து முதலிய எட்டு இரத்தினங்களையும் வைத்து, வடக்கு நோக்கியிருந்து இறைவனை வழிபட்டு வாழ்த்தி, அரசனுக்கு அளித்தார். பின்னர் அமைச்சர்களை 'இம்மைந்தருக்கு இவ்விரத்தினங்களால் முடிசெய்து அபிடேகப் பாண்டியன் எனப் பெயர் சூட்டுங்கள்' என்று கூறி மறைந்தார். வந்தவர் சோமசுந்தரப்பொருமானே என்பதை அறிந்த எல்லோரும் கை கூப்பித் தொழுதார்கள். அமைச்சர்கள் இராசகுமாரனுக்கு முடிசூட்டி, அபிடேகப் பாண்டியன் எனப் பெயரிட்டு அழைத்தனர். சின்னாட்களில் காமக்கிழத்தியரின் மக்கள் திருவடியொளித்து வைத்திருந்த முடி முதலிய பொருள்களும் கிடைத்தன.

### வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் அபிடேக பாண்டியன் சோமசுந்தரப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு புரிதல் வழக்கம். ஆண்டுதோறும் அதே நாளில் அவ்விறைவனை வழிபடும் தேவேந்திரன் அதனால் காலம் தாழ்த்திப் பூசை செய்ய வேண்டியவனானான். எனவே அவன் மனம் வருந்தித் தேவலோகத்துக்குத் திரும்பினான். வருணன் இந்திரனது மன வருத்தத்துக்குக் காரணத்தை அறிந்து, 'அச்சிவலிங்கம் தேவர்களாலும் தீர்க்க முடியாத என் பெரிய வயிற்று நோயைத் தீர்க்குமா?' என்றான். இந்திரன் வருணனைப் பார்த்து, 'நீ ஐயம் கொண்டு வினவுவது ஏன்? பிரமன் திருமால் ஆகியோரால் தீர்க்கப்படாத பிறவி நோயைத் தீர்க்க வல்ல சிவபெருமானுக்கு நின் வயிற்று நோயைப் போக்குவது அரிதோ? நீ எம்பெருமான் திருவிளையாட்டைச் சோதித்துக் கொள்ளலாம்' என்றான்.

வருணன் தன் வயிற்று நோயைத் தீர்க்கக் கருதி, கடலை அழைத்து மதுரை முழுவதையும் அழிக்குமாறு ஏவினான். பேரூழிக் காலம் வந்ததுபோல் பெருங்கடல் பொங்கி வருவதைக் கண்டு மக்கள் நடுநடுங்கி, அபிடேக பாண்டியனிடம் சென்று முறையிட்டார்கள். எல்லாம் வல்ல சிவபெருமான் தம் திருச்சடையில் இருந்த நான்கு மேகங்களையும் கடலை உறிஞ்சுமாறு அனுப்பினார். அவை கடலை வாரி உறிஞ்சியதால் அது அறவே வற்றியது. நகரத்து மக்களும் தேவர் முதலியோரும் சிவபெருமான் திருவிளையாடலை எண்ணிப் பாடிப் பரவி இறைவன் திருவருளைப் பெற்றார்கள்.

## நன்றி மறவாத ஒரு இதயத்தின் குரல்

நான் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் நடாத்தப்படுகின்ற இலவச மாணவர் விடுதியில் தங்கி கல்வி கற்று தற்போது சர்வகலாசாலை பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளேன் என்பதை தங்களுக்கு நன்றி கலந்த மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன். எனக்கு இன்று கிடைத்துள்ள சர்வகலாசாலை செல்வதற்கான அரிய வாய்ப்பிற்கு மூலகாரணமாக அ. இ. இ. மாமன்றமே திகழ்ந்தது என்பதை ஆத்மார்த்தமாக அறியத்தருகிறேன். ஏனெனில், நான் க. பொ. த உயர்தரம் கற்பதற்காக ஒரு வருடம் அலைந்து திரிந்ததை நினைவுபடுத்திப் பார்க்கிறேன். இதன் காரணமாக எனது உயர்தரப் படிப்பு சுமார் ஒரு வருடம் விரயமாக்கப்பட்டது. இவ்வேளையில்தான் அ. இ. இ. மாமன்றத்தால் நிர்வகிக்கப் பட்டு வருகின்ற இலவச மாணவர் விடுதியில் தங்கி கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்காக அ. இ. இ. மாமன்றத்திற்கும், சமூகநலன் குழுவிற்கும், கல்லூரிக்கும், அதிபருக்கும் எனது உள்ளார்ந்த நன்றியை தெரியப்படுத்துகின்ற வேளையில், இதற்காக என்றும் கடமைப்பட்டுள்ளேன் என்பதையும் உணர்கிறேன். இது மாத்திரமல்ல நான் வசிக்கும் தோட்டப் பகுதியிலிருந்து முதன்முதலாக சர்வகலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் மாணவன் நான் என்பதை பெருமையோடு கூறி, இப்பெருமை அ. இ. இ. மாமன்றத்துக்கே உரியது என்பதையும் உணர்கிறேன்.

எங்களுடைய சமூகத்தில் எமக்காக தொழிற்படுவதாக கூறிக்கொள்ளும் தொழிற்சங்கங்கள் பல இருந்த போதும் எனது கல்விக்காக எந்தவிதமான சிறுபங்களிப்பைக் கூட வழங்காதபோது, தொலைதூரத்தில் இருந்த எனக்கு தொல்லை அகற்றி, அரவணைத்து அறிவுப்பசிக்கு வித்திட்ட அ. இ. இ. மாமன்றத்திற்கு மனமார்ந்த நன்றியை நல்கிறேன். என்னைப்போன்ற எத்தனையோபேரின் வளர்ச்சிக்கு அடிக்கல்லாக உங்களது அமைப்பு திகழ்வது எமது இனத்திற்கு கிடைத்த அரியகொடையாகவே கருதுகிறேன். விடுதிவாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத குறிப்பிடத்தக்க அம்சமாக கல்வி கற்றுக்கொண்டிருக்கின்ற காலப்பகுதியிலே கயிலாசபிள்ளை அம்மா அவர்களால் இரவுவேளைகளில் கண்தூங்காமல் கற்பதற்காக வழங்கப்பட்ட பால்மா வகைகள், சுடுதண்ணீர் போத்தல் போன்றனவும் எனது அயராத படிப்பிற்கு அடித்தள பங்களிப்பை ஆற்றியுள்ளது என்பதை அகமகிழ்வோடு அறியத்தருகிறேன். இதற்கெல்லாம் கைமாறாக நான் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்த பின் ஆதரவற்ற சிறார்களை என்னால் இயன்றவரை அரவணைத்து எனது சக்திக்கு உட்பட்ட உதவியை புரிவேன் என்பதை உறுதியாக உரைக்கிறேன்.

*இப்படிக்கு*
*உங்களுடைய அரவணைப்பில்*
*வளர்ந்து வரும் மாணவன்*
**S. சரவணதீபன்.**

# மாமன்றத்தின் சேவைகள்

## - ஒரு கண்ணோட்டம் -

அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த ஆண்டு பொதுக் கூட்டம் முதல் ஆற்றிய பணிகளை இந்த அறிக்கையில் எடைபோட்டுப் பார்க்கும்போது, ஆட்சிக் குழு ஒரு திருப்திகரமான நிறை மனதுடன் இதனைச் சமர்ப்பிக்கின்ற நிலையில் இருக்கின்றது என்றால் மிகையாகாது.

நாட்டில் நிலவிய நிலை எங்களின் தொண்டுகளுக்கும், எங்களின் அங்கத்துவ மன்றங்களின் பணிகளுக்கும் பலவிதத்திலும் முட்டுக்கட்டையாக இருந்தபோதிலும், எங்களாலான மட்டும் இலங்கையின் பல பாகங்களிலும் எங்கள் சேவையினைப் பரப்பியிருக்கிறோம்.

இந்நாட்டு இந்து மக்கள் தொடர்ந்தும் பல இன்னல்களை எதிர்நோக்கி வந்திருக்கின்றனர். அவர்கள் சார்பில் தொடர்ந்தும் குரல் எழுப்பி வந்திருக்கிறோம். சிலவேளைகளிலாவது எமது அறிக்கைகள் நாங்கள் எதிர்பார்த்த தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அதேநேரம் தங்கள் சார்பில் குரல் கொடுக்க ஓர் உச்ச நிறுவனம் இருக்கின்றது என்ற திருப்தியை எங்கள் மக்களுக்குத் தந்திருக்கின்றோம். எமது மாமன்ற தூதுக்குழுக்கள் சமீபத்தில் மட்டக்களப்பிற்கும் மலையகத்திற்கும் விஜயம் செய்தபோது அதனை நாங்கள் உணர முடிந்தது.

அதேவேளையில் இந்நாட்டு இந்து மக்களின் தேவைகள் பலவற்றை நிறைவேற்ற மாமன்றத்தின் சேவை பரவலாக்கப்பட வேண்டும் என்பதனை நாங்கள் மறக்கவில்லை. எனவேதான் மனிதாபிமான நிதியம் ஒன்றினைக் கடந்த ஜூலை மாதம் மாமன்றம் ஆரம்பித்துள்ளது. இந்த நிதியத்திற்கு மாமன்ற நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மாமன்றத்தின் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளையும், அவரது குடும்பத்தினரும் ரூபா மூன்று இலட்சம் இந்நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கி யிருக்கின்றனர். அந்த நல்ல முன்மாதிரியைப் பின்பற்றி ஏனையவர்களும் இந்த நிதியத்திற்குத் தாராளமாக அள்ளி வழங்கவேண்டும். மாமன்றச் சேவையினை மேலும் பரப்ப நிதி மட்டுமல்ல மக்கள் சக்தியும் முக்கியம் என்பதனால் சிவதொண்டர் அணியின் ஆரம்ப வேலைகள் தொடங்கியிருக்கின்றன.

### மனிதாபிமான நிதியம்

**(அ) நோக்கம்:** இந்நாட்டு இந்து மக்கள் படும் இன்னல்களையும் அவர்களின் தேவைகளையும் கருத்திற் கொண்டு, பொருளாதார நெருக்கடி காரணமாக அவர்கள் மதமாற்றம் பெறுவதைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பு எங்களுக்கு உண்டு என்பதை உணர்ந்தும் இந்நிதியம் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் நிறுவப்பட்டிருக்கின்றது.

காலத்துக்குக் காலம் இந்து மக்களுக்கு ஏற்படும் தேவைகளுக்கு முடியுமானவரை நிதி உதவியும் ஆலோசனை வழங்கலும் எமது நோக்கமாக இருக்கும். பின்வரும் தேவைகளுக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் :–

(i) அவசிய மருத்துவ சிகிச்சை
(ii) கல்வித் தேவை
(iii) பட்டினி நிலை
(iv) இந்துக்கள் குறைவாக வாழும் கிராமங்களில் சமய அறிவு வளர்ச்சி
(v) மதமாற்றம் தடுக்க வேண்டிய நடவடிக்கை.

**(ஆ) நிதி:** ரூ. 10 இலட்சம் இந்து மாமன்ற நிதி ஒதுக்கீடு இந்நிதியத்தின் ஆரம்ப நிதியாக இருக்கும். நன்கொடைகள் கோருவதுடன் நிதி திரட்டல் நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்ய வேண்டும்.

**(இ) உதவி:** எமது நிதியிலிருந்து மனிதாபிமான உதவிகளை செய்ய ஆரம்பித்திருக்கின்றோம். அது பற்றி இந்து பொதுமக்கள் அறிந்த பின் நிதி சேகரிப்பதில் ஈடுபடவேண்டும். பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பங்களைக் கோரி ஒவ்வொரு விண்ணப்பத்தை தனித்தனியே ஆராய்ந்து இந்து மக்களுக்கு உதவ ஓர் அமைப்பு இருக்கின்றது என்ற நம்பிக்கையை உண்டாக்குதல் வேண்டும். இந் நிதியத்திற்கு ஆலயங்களிலிருந்து நன்கொடைகளைக் கோரவும் ஆலயங்களில் மனிதநேய நிதிய உண்டியல்களை வைக்கவும் திட்டம் இருக்கின்றது.

**(ஈ) விண்ணப்ப ஆராய்வு:** விண்ணப்பங்கள் யாவற்றையும் ஒரு சிறு குழு ஆராய்கின்றது. இக்குழுவில் பின்வருவோர் இடம்பெறுகின்றனர் :–

(1) தலைவர் / பொதுச் செயலாளர் / பொருளாளர்.
(2) சமூக நலன் குழுத் தலைவர் / செயலாளர்.
(3) ஏனைய குழு ஒன்றின் தலைவர் / செயலாளர்.

சமூக நலன் குழுத் தலைவர், இக்குழுவில் குறைந்தது மூவர் (1) இலிருந்து ஒருவர் (2) இலிருந்து ஒருவர் (3) இலிருந்து ஒருவர் இருக்கும் வகையில், ஒழுங்கு செய்வார். பொதுச் செயலாளருடன் கலந்து ஆலோசித்து அதனை ஒழுங்கு செய்து விண்ணப்ப ஆராய்வுக்கு சமூக நலன் குழுத் தலைவர் ஒழுங்கு செய்வார். பரிசீலிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அக்குழுவின் சிபாரிசுடன் நிறைவேற்றுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றுக் குழு முடிவு செய்யலாம். முகாமைப் பேரவையின் வழிகாட்டலை தேவைப்படும்போது பெறுவதுடன் அங்கீகரிக்கப்பட்டு நிதி உதவி பெற்ற விண்ணப்பங்களை பொதுச் செயலாளர் முகாமைப் பேரவைக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) இந்த நிதியம் ஆரம்பித்த பின்பு ஏற்படும் அனுபவத்தில் வேறு ஏற்பாடுகள் தேவையாயின் சமூக நலன் குழு, நிறைவேற்றுக் குழு அவை பற்றி ஆராய்ந்து முகாமைப் பேரவையின் வழிகாட்டலுடன் திட்டமிடலாம்.

(ஊ) மனிதாபிமான நிதியிலிருந்து பின்வரும் உதவிகளை இதுவரை செய்திருக்கின்றோம் :-

| | | |
|---|---|---|
| மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி | ரூபா | 2,18,800.00 |
| ஸ்ரீ தேவி ஆச்சிரமம், கல்லடி, மட்டக்களப்பு | ரூபா | 50,000.00 |
| கதிரொளி இல்லம், கொக்கட்டிச்சோலை (மாதாந்த உதவி) | ரூபா. | 18,000.00 |

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம்

மாமன்றம் கடந்த சில ஆண்டுகளாக இதன் நிதியிலிருந்தும், சேர்க்கப்பட்ட நன்கொடைகளிலிருந்தும் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ள இடம் பெயர்ந்தோருக்குப் பல உதவிகளை வழங்கி இருக்கிறோம். குறிப்பாக பருப்பு, சீனி, கோதுமை மா, பாலுணவு என்பன இவற்றுள் அடங்குகின்றன. இன்றும் தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருகிறோம்.

## சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லம், மட்டக்களப்பு

மாமன்ற அங்கத்துவ சங்கங்களுடன் இணைந்து மாமன்றச் சேவை மக்களுக்குச் சென்றடைய வழிவகுத்து கொண்டிருக்கிறோம். மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், மாமன்ற நிதி உதவியுடன் முதியோர் இல்லத்திற்கு ஒரு கட்டிடத் தொகுதியை கடந்த ஜூலை மாதத்தில் கட்டி முடித்து திறப்பு விழாவும் நடத்தியது. கிழக்கில் தமிழும் சைவமும் வாழ உழைத்த பெரியார் சுவாமி விபுலானந்தரின் பெயர் இந்த இல்லத்திற்கு எங்களின் வேண்டுகோளின்படி சூட்டப்பட்டிருக்கின்றது. சுவாமி விபுலானந்தருக்கு ஒரு நல்ல நினைவு ஆலயமாக அதைக் கருதுகிறோம்.

## சிவதொண்டர் அணி

ஒரு நிறுவனம் சிறப்புறப் பணியாற்ற நிதி மட்டும் அல்ல மக்கள் சக்தியும் தேவை. எனவே தான் சிவதொண்டர் அணியை ஆரம்பிக்கும் ஆலோசனைக் கூட்டம் மாமன்றத்தினால் 2001. 08. 26ம் திகதி அன்று விவேகானந்த சபை மண்டபத்தில் நடத்தப்பட்டது. அணியின் அம்சங்களாவன:

| சமயப்பணி | தொண்டு |
|---|---|
| * சமயப் பிரசாரப் பணிக் குழாம் | * மக்கள் சேவைக் குழாம் |
| * பஜனைப் பணிக் குழாம் | * சமுக வழிநடத்தல் |
| * சரியைக் குழாம் | * சுகாதாரச் சேவை |
| | * சட்ட உதவி |

## கதிர்காம யாத்திரிகர் மடம்

